பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 27 வெள்ளிக்கிழமை (10.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 196



14
மேற்குலகை ஒதுக்கும் ராஜதந்திரம்



23
அமெரிக்காவை முஸ்லிம்கள் அழிப்பர்



25
மீண்டும் வருகிறார் சனத்

# தமிழ் நாட்டினது போக்கை இலங்கை அரசு எதிர்க்கும்

## இந்திய உயர் குழுவுடன் இன்று அது பற்றிப் பேச்சு



கொழும்பு, ஜூன் 10

இலங்கை அரசுக்கு எதிரான போக்கைத் தமிழகம் தொடர்ந்து கடைப்பிடித்து வருவது குறித்த தனது விசனத்தையும் எதிர்ப்பையும் இன்று கொழும்பு வரும் இந்தியக் குழுவிடம் இலங்கை அரசு தெரிவிக்கும் என்று தெரிகிறது.

''தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம், இலங்கை தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்த கருத்துகள் தொடர்பில் இன்று இலங்கை வரும் இந்திய உயர்மட்டக் குழுவினருடன் பேச்சு நடத்தப்படும்'' - என்றார் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல.

இந்தியாவும் ஏனைய நாடுகளும் இணைந்து இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற தீர்மானம் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டமை குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை - இந்திய குழுவினர் இன்று முற்பகல் 11.30 மணிக்கு பேச்சுக்களை ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

இலங்கைத் தரப்பின் சார்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சுச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரும் -

இந்தியத் தரப்பில் வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன், இந்தியப் பிரதமரின் செயலாளர் கே.நாயக் ஆகியோரும் - இடம்பெறுகின்றனர்.

(27ஆம் பக்கம் பார்க்க)

## இனிமேலாவது அரசு பிழையைத் திருத்தட்டும்

### சுரேஷ் எம்.பி.தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

''இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்குமாறு கோரி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கு இலங்கை அரசே பொறுப்புக் கூற வேண்டும். எனவே, இனியாவது அரசு தனது பிழைகளைத் திருத்திக் (27ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவுக்கு பதிலளிக்க ஒன்றுமில்லை

### ஹெகலிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

''ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக இலங்கை ஏற்கனவே தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. இதை ஐ.நா. பதிலாக எடுத்துக்கொண்டாலும், இல்லாவிட்டாலும் இதற்கு மேல் பதிலளிக்க ஒன்றுமில்லை'' என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நிபுணர் குழு அறிக்கை தொடர்பான இலங்கை அரசின் பதிலுக்காக ஐ.நா. பொதுச் செயலாளர் இன்னும் காத்திருக்கிறார் என்று அவரது பேச்சாளர் கூறி வரும் நிலையில் அமைச்சர் இப்படிக் கூறியுள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தொடர்பாகத் தெளிவுபடுத்தியபோது வடக்கு - கிழக்கில் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள், இன நல்லிணக்கத்துக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து தெளிவாக விளக்கியுள்ளோம்.

பான் கீ-மூன் எமது பதிலை எதிர்பார்ப்பதாகக் கூறியபோதும் இது குறித்து பதிலளிக்க எதுவுமில்லை'' என்றார் அமைச்சர்.

## 839 புலிகள் தடுப்பில்

கொழும்பு, ஜூன் 10

போரின் பின் 839 புலி உறுப்பினர்கள் மாத்திரமே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் கொழும்பு, பூஸா மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க, வாய்மூல வினாவுக்கான நேரத்தின் போது நேற்று எழுப்பிய இது தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இவ்வாறு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோரில் இரண்டு பேருக்கு எதிராக குற்றப்பத்

(27ஆம் பக்கம் பார்க்க)

## அரச எதிர்ப்பு - ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் நேற்று




கொழும்பு, ஜூன் 10

அரசுக்கு எதிராகவும், ஆதரவாகவும் கொழும்பில் நேற்று இருவேறு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆர்ப்பாட்டம் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு மருதானை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்றது. இதில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர்களில் (27ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயை அனுசரித்துப்போக தயாராகின்றது இலங்கை அரசு

கொழும்பு, ஜூன் 10

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அனைத்துலக அரங்கில் இலங்கை அரசு கடும் நெருக்கடியை எதிர்கொண்டுவரும் நிலையில் நோர்வேயுடன் மீண்டும் உறவுகளைப் பலப்படுத்திக்கொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு தயாராகி உள்ளது. விரைவில் ஒஸ்லோ செல்லவுள்ள கடற்றொழில்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, போரின் பின்னர் இலங்கையின் அரசியல் சூழல் குறித்து விளக்க உள்ளார்.

நோர்வேக்குச் சென்று அமைச்சரும் சமாதானப் பேச்சுக்களுக்கான முன்னாள் அனுசரணையாளருமான எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேசுவதற்கு ஜனாதிபதி (27ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாணவி புதிய சாதனை

வலி.வடக்கு, ஜூன் 10

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்படும் கனிஷ்ட பிரிவுக்கான தடகளப் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி கே.தனுஷா தேசிய ரீதியில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவர் 20 வயதுக்குட்பட்டோருக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 3 மீற்றர் உயரத்தைத் தாண்டியதன் மூலம் தேசிய ரீதியில் இந்தச் சாதனையை ஏற்படுத்தி முதலிடம் பெற்றார்.

இதற்கு முன்னர் 2008 ஆம் ஆண்டு விமானப்படை வீராங்கனை ஒருவர் இந்தப் போட்டியில் 2.90 மீற்றர் உயரத்தைத் தாண்டியதே தேசிய ரீதியில் சாதனையாக இருந்து வந்தது. அந்தச் சாதனையை சே.தனுஷா நேற்று முறியடித்துச் சாதனைப் பட்டியலில் இடம்பிடித்தார்.

கனிஷ்ட பிரிவுக்கான இந்தத் தடகளப் போட்டிகள் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றன.

நேற்று இடம்பெற்ற 20 வயதுப் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் கே. தனுஷா 3 மீற்றர் தாண்டி முதலிடத்தையும், அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் மற்றொரு மாணவியான எஸ்.ஜக்சனா மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீரர்க

(27ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவுடன் மேனன் நேற்று மாலை திடீர் சந்திப்பு

### கொழும்பு வருகைக்கு முன்னதாக

சென்னை, ஜூன் 10

போர்க் குற்றங்களில் ஈடுபட்டுத் தமிழர்களைத் துன்புறுத்தியதற்காக இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அடுத்த நாளான நேற்று, இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சிவ் சங்கர் மேனன் தலைமையிலான இந்திய உயர் மட்டக் குழு இன்று இலங்கை வருவுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இந்தச் சந்திப்பு மரியாதையின் நிமித்தம் நடந்ததாக புதுடில்லியில் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்திய மத்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து ஜெயலலிதாவுக்கு விளக்குவதற்காகவே அவர் சென்னை வந்தார் என்று தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (27ஆம் பக்கம் பார்க்க)

## 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச துறையில் நியமனம்

கொழும்பு, ஜூன் 10

நாட்டில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுள் முதல் கட்டமாக 15 ஆயிரம் பேருக்கு அரச துறைகளில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன; இதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இப்படி வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தற்போது 2007ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு இறுதி வரை பல்கலைக்கழகங்களில் இருந்து வெளிப்பட்ட 80ஆயிரத்து 549 பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றி இருக்கின்றனர் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

2007, 2008, 2009, 2010 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளிப்பட்டு தொழில் வாய்ப்புகள் இன்றி இருக்கும் பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு? இவர்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்று நேற்று நாடாளுமன்றத்தில் ஐ.தே.க உறுப்பினர் சஜித் பிரேமதாஸ, வினைத்திறன் மேம்பாட்டு (27ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான கால நிலை நாள் முழுவதும் நிலவும்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ட யாழ்ப்பாணம்
ஆனி 09, 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7279.62↑
மிலங்கா(MPI) 6779.06↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 4.06Bn
பங்குகளின் அளவு(No.) 489.09Mn
வியாபாரம்(No.) 26088
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ரேடியன்ற் ஜெம்ஸ் 89.00
அலுப(f)ப் 132.00
மேகன்ரைல் ஸிப்பிங் 409.00
பி சி கவுஸ் 19.00
சிற்றி ஹவுஸிங் 19.80
குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஹொட்டல் சேர்விசர்ஸ் 23.10
சிலோன் பிரேவறி 502.00
உடப்புசலாவ 42.40
ஜனசக்தி 18.80
சிலோன ஹொஸ்பிரல்ஸ் 25.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# தண்டனையை விடுதலை என நினைத்து சந்தோச சிரிப்புச் சிரித்த புலிச் சந்தேகநபர்

யுத்தத்தின் பின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள புலிகள் இயக்க சந்தேக நபர்கள் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் தமிழ் மொழி மூலமே நடத்தப்படவேண்டும். என நேற்று நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. உறுப்பினரான அனுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. நாடாளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அனுரகுமார திஸாநாயக்க பிரதமரிடம் தமிழ் கைதிகள் தொடர்பாகக் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

யுத்தத்தின் பின்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு?.

இவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா?

இவர்கள் எந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்?

என்ற விவரங்களைச் சபையில் வெளியிட முடியுமா? என அனுர குமார திஸாநாயக்க தனது கேள்வியின்போது குறிப்பிட்டிருந்தார்.

இறுதி யுத்தத்தின் பின் 839 புலிகள் இயக்க உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பூஸா, வவுனியா, கொழும்பு ஆகிய மூன்று சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதமரின் சார்பில் பதில் அளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டார்.

### தண்டனை விதிக்கப்பட்டவர் சிரித்த முகத்துடன்

இந்த வேளையில் குறுக்கிட்டு இடைக் கேள்வி ஒன்றை எழுப்பினார் அனுர குமார.

புலிச் சந்தேக நபர்கள் தமிழ் மொழியைத் தவிர வேறு மொழி தெரியாதவர்கள். அவர்கள் தொடர்பான வழக்குகள் தனிச் சிங்கள மொழி மூலமே நடைபெறுகின்றன. என்ன நடக்கிறது என்றும் இவர்களுக்குத் தெரியவில்லை.

அண்மையில் பொறளை பிரதேசத்தில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் புலிச் சந்தேக நபருக்கு

## மொழி புரியாததால் நீதிமன்றில் அவலம் விசாரணையை தமிழில் நடத்தக் கோரிக்கை

50 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட போது தான் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக எண்ணி அவர் சிரித்த முகத்துடன் நின்றார். மொழி புரியாததினால் தனக்கு விதிக்கப்பட்ட தண்டனை என்னவென்றே அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

எனவே புலிச் சந்தேக நபர்கள் தொடர்பான வழக்குகள் தமிழ்மொழி மூலம் நடத்தப்பட வேண்டும் என்றார் அனுர குமார திஸாநாயக்க.

### கட்டுக்கதை என்கிறார் அமைச்சர்

கௌரவ உறுப்பினர் கூறிய விடயம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெறும் போது பிரதிவாதங்கள் - சந்தேகநபர்களின் சார்பில் வழக்கறிஞர்கள் ஆஜராகின்றனர். முதலியார்மார் இருக்கின்றனர். நீதிமன்ற நடவடிக்கைகள் இவர்கள் மூலம் சந்தேக நபர்களுக்கு தெளிவாகக் கூறப்படுகின்றது. அதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன என்று கூறிய அமைச்சர் தடுப்பு முகாம்களில் புலிகள் அல்லாத எவரும் தடுத்து வைக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.




### வேலையற்றபட்டதாரிகள் 80,549 பேர்

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான சஜித் பிரேமதாச வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சரிடம் எழுப்பிய கேள்வி ஒன்றினால் இன்று 80,549 பட்டதாரிகள் தொழில் வாய்ப்பின்றி இருக்கின்றனர் என்ற உண்மை வெளிப்பட்டது.

2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் பட்டதாரிகள் எத்தனை பேர்? இவர்களுக்கு அரசு நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமா? என்று சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

### முன்னாள் நண்பர்களுக்கு இடையிலான வாதம்

இந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார் அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன. கேள்வி கேட்டவரும், பதில் அளித்தவரும் முன்பு ஒரே அணியில் இருந்தவர்கள். என்றாலும் அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன பதில் அளிக்கும் போது தான் முன்பு இருந்த ஐக்கிய தேசியக் கட்சியைச் சாடவும் தவறவில்லை.

முன்னைய ஆட்சியின் போது பட்டதாரிகள் தாக்கப்பட்டனர், சுடப்பட்டனர். ஆனால் தாம் ஆட்சிக்கு வந்தவுடன் 45 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கி உள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

### ஆயிரம் ரூபா புடைவையைப் பெற 1500/- செலவு

மாத்தறை மாவட்ட ஐ.தே.க. உறுப்பினரான புத்திக பத்திரன கல்வி அமைச்சரிடம் மாத்தறை மாவட்டத்தில் அக்குறஸ்ஸ கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்.

ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடம் இன்மை, நூல்நிலையம், ஆசிரியர் விடுதி இல்லாமை தொடர்பாகக் கல்வி அமைச்சர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் என்னவென்று கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் அளித்த பிரதிக் கல்வி அமைச்சர் விஜித்த முனி சொய்ஸா ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. தளபாடங்கள், புத்தகங்கள், சீருடைகள் என்பன சகல பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

ஐ.தே.க. ஆட்சியின்போது மாணவர்கள் சீருடைகளைப் பெறுவதற்குக் கிராமசேவகர்கள்,. வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சமுர்த்தி அதிகாரிகள் எனப் பலரிடமும் நாடித் திரிய வேண்டிய நிலை. பெற்றோர்கள் தொழிலையும் வருமானத்தையும் இழந்து இவர்களிடம் போக வேண்டும். ஆயிரம் ரூபா பெறுமதியான புடைவையைப் பெறுவதற்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவைச் செலவிட வேண்டியிருந்தது என்றும் விமர்சித்தார் பிரதிக் கல்வி அமைச்சர் விஜித்த முனி சொய்ஸா.

### வெறிச்சோடிக் கிடந்த சபை சோபை இழந்த விவாதம்

கேள்வி நேரத்தின் பின் புலமைச் சொத்துக்கள் சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதம் நடைபெற்றது. கேள்வி நேரத்தின் பின் சபையில் 90 வீதமான ஆசனங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. முன்வரிசை அமைச்சர்கள் கூட எவரும் சபையில் இருக்கவில்லை.

விவாதத்தில் பேசிய உறுப்பினர்கள் அவ்வப்போது வந்து நாற்காலிகளைப் பார்த்துப் பேசிவிட்டே சென்றனர்.

ஆளும்கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் மூத்த கலைஞர்கள் போற்றப்படவேண்டும். தேசிய மட்டத்தில் கௌரவிக்கப்படவேண்டும் என வலியுறுத்தியதுடன் பழைய பாடல் ஒன்றின் வரிகளையும் பாடினார். ஆனால் அந்தப் பாட்டைக் கேட்கக்கூட எவரும் இல்லை. எப்படியோ ஆளும் தரப்பு உறுப்பினரான நடிகை மாலினி பொன்சேகாவும் சிலரும் ரசித்தனர். இது ஒருவகையில் திருப்திதான்.

உதயன் சபைச் செய்தியாளர்
**புத்திரசிகாமணி**

பின்னர் கால்நடை வளர்ப்பு, கிராமிய, சனசமூக அபிவிருத்தி அமைச்சரினால் முன் வைக்கப்பட்ட விலங்கு சட்டத்தின் ஒழுங்கு விதிகளும் அங்கீகரிக்கப்பட்டன. (த)

# நிகழ்வுகள்

## நாடக விழா

நெல்லியடி, ஜூன் 10

கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் யாழ்.மாவட்ட செயலகத்துடன் இணைந்து நடத்தும் நாடக விழா எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நாடக விழாவில் திருமறைக்கலாமன்ற நாடகமான 'அற்றைத் திங்கள்' நாடகமும் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணியின் நெறியாள்கையில் உருவான பூதத்தம்பி நாடகமும் மேடையேற்றப்படவுள்ளன. (ற-319)

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார்.

இந்தக் கூட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், மின்சாரம் மற்றும் வீதி, 'நெல்சிப்'திட்டம் ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளன எனப் பிரதேச செயலர் த.முகுந்தன் அறிவித்துள்ளார். (ற-302)

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச யோகாசன வகுப்புகளில் புதிய பிரிவுகள் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

ஆண்கள், பெண்கள், நோயாளர்களுக்கு எனத் தனிப்பிரிவுகளாக நடத்தப்படும் இந்த வகுப்புக்களில் யோகாசனம் செய்ய விரும்புபவர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு பயிற்சி முறை நிர்ணயிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படும் என இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் அறிவித்துள்ளார். (ற-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான ஆதரவை விலக்குமாறு ரஷ்யாவிடம் கூட்டமைப்பு கோரவில்லை

இலங்கை அரசுக்கான ஆதரவை ரஷ்யா விலக்கிக் கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்மிடம் கோரவில்லை என்று கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதுவர் விளாடிமிர் மிக்கலோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா இலங்கை அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோரியதாக வெளியான செய்தி தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடந்த திங்களன்று தன்னை சந்தித்துப் பேசியதாகவும், ஆனால் அவர்கள் இலங்கை அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளுமாறு கோரவில்லை என்றும் ரஷ்யத் தூதுவர் விளாடிமிர் மிக்கலோவ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செய்தி வெளியிட்டதன் மூலம் மக்களைத் தவறாக வழிநடத்த முனைவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய நல்லிணக்கம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகள் பற்றி அவர்கள் விளக்கமளித்தாகவும் ரஷ்யத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அர்த்தமுள்ள பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று அவர்கள் நம்பிக்கை வெளியிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, ரஷ்யாவின் நிலைப்பாட்டை எடுத்து விளக்கியதாகவும், அரசுக்கும், கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்களின் மூலம் எதிர்காலத்தில் நல்லிணக்க சூழல் உருவாகும் என்று நம்பிக்கை வெளியிட்டதாகவும் ரஸ்யத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தமிழ்ஈ.என்.என்.)(த-10)

# புலிகளின் ஆயுதக்களஞ்சியம் வவுனியாவில் கண்டுபிடிப்பு

வவுனியாவில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் மறைத்து வைக்கப்பட்ட இரு ஆயுதக்களஞ்சியத் தொகுதிகள் இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் கோவில்குளம் மற்றும் சமலங்குளம் ஆகிய இரு இடங்களிலேயே விடுதலைப்புலிகளின் ஆயுதக்களஞ்சியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

'மைக்ரோ' துவக்குகள் மற்றும் பல ஆயுதத் தளபாடங்கள் நேர்த்தியான முறையில் பொதிசெய்யப்பட்டு கொள்கலன்களில் அடைக்கப்பட்டநிலையில் 5 அடி ஆழமான கொங்கிறீட் குழியில் புதைக்கப்பட்டிருந்ததாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

ரி56 ரக 13 துப்பாக்கிகள், ரி56 ரக 47 வெடிமருந்து தொகுதிகள், ரி56 ரக 5336 வெடிகுண்டுகள், 9மில்லிமீற்றர் கைத்துப்பாக்கி, ரி56 ரக 5 ரிபில் கருவிகள், கணினி போன்ற பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

(தமிழ்ஈ.என்.என்.)(த-10)

# "இலங்கையில் கொலைக்களம்" பி.பி.ஸி. வானொலியில் விவாதம்


ஜூன் 14ஆம் திகதி லண்டன் சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ள இலங்கையில் கொலைக்களம் என்ற காணொளித் தொகுப்பு காண்பிக்கப்படல் வேண்டுமா? காண்பிக்கப்படக் கூடாதா? என்ற வாதம் பிபிஸி வானொலியில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இந்த வாதத்தில் காணொளித் தொகுப்பினை தயாரித்து வெளியிட்ட ஊடகவியலாளர்கள் பங்கெடுத்தனர்.

இப்படியான கொலைகள் இனிமேல் உலகின் எந்த ஊடகங்களிலும் வெளிவராமல் இருக்க வேண்டுமாயின் இந்தத் தொகுப்பு காண்பிக்கப்படல் வேண்டும் என இவர்கள் வலியுறுத்தினார்கள்.

மேலும் இவை காண்பிக்கப்படாது போனால் இலங்கை அரசும், இதுபோன்ற சம்பவங்களைச் செய்பவர்களும், இப்படியான சம்பவங்கள் நடைபெறவில்லை என்றே கருத்து வெளியிடுவார்கள் என்றும் கருத்துத் தெரிவித்தார்கள்.

இந்த தொகுப்பைப் பலர் பார்ப்பதை தவிர்த்துக்கொள்வார்கள் என்று கருதியபோதும், இதிலுள்ள உள்ளடக்கம் மானிடத்தின் உயிர் நாடியை உலுப்பும் செயலாக உள்ளதாகவும் இப்படியான சம்பவங்களை வெளிப்படுத்தாமல் இருப்பது ஆபத்தானது என்றும் கருத்து வெளியிட்டனர். (தமிழ்ஈஎன்என்) (த)



கொழும்பில் நடத்தப்பட்ட யுத்த அனுபவப் பகிர்வு மாநாட்டில் பங்குகொள்ள வந்துள்ள வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள் வவுனியாவுக்குச் சென்று முன்னாள் போராளிகளைச் சந்தித்து போரின் இறுதி நிலவரங்கள் தொடர்பாக கேட்டறிந்துள்ளனர். (தமிழ்ஈ.என்.என்.)

# ரஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தப்படி தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படும்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் 13ஆம் திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பு காணப்படுவதாக அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

13ம் திருத்தச் சட்ட மூலம் அல்லது அதற்கு அப்பாலான ஓர் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது குறித்து சகல தரப்பினருடனும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் மாநில அரசாங்கங்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப் போவதில்லை எனவும், மத்திய அரசாங்கத்துடன் மட்டுமே இராஜதந்திர தொடர்புகள் நிலவுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (தமிழ்ஈஎன்என்) (த)

# 22 வருட கால சேவையைப் பூர்த்திசெய்த படையினருக்கு முழுமையான ஓய்வூதியம்

யுத்தம் முடிவுற்ற தினமான 19.05.2009 ஆம் திகதி 22 வருட கால சேவையை பூர்த்தி செய்திருந்த அல்லது குறைந்த பட்சம் 5 வருடகாலம் இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களில் பணியாற்றியபின் ஓய்வுபெற்ற பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்களுக்கு முழுமையான ஓய்வூதிய சலுகைகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்நிபந்தனையை பூர்த்தி செய்த படை உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்தின் 85 சதவீதம் ஓய்வூதியமாக வழங்கப்படும். 01.01.2010 ஆம் திகதி முதல் இது அமுலுக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

01.01.2010 ஆம் திகதிக்குப் பின்னர் ஓய்வு பெறும் அனைத்து படை உத்தியோகத்தர்களுக்கும் இந்த ஓய்வூதிய நன்மைகளை வழங்க அரசாங்கம் 24.12.2009 ஆம் திகதி தீர்மானித்திருந்தது. எனினும் 19.05.2009 ஆம் திகதி இந்நிபந்தனையை பூர்த்தி செய்தோருக்கு மாத்திரம் இந்த இந்த நன்மைகளை வழங்குவதென ஓய்வூதிய திணைக்களம் பின்னர் தீர்மானித்தது.

ஏனைய படை உத்தியோகத்தர்களை இதிலிருந்து நீக்குவது அநீதியானது என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க நாடாளுமன்றில் நேற்று கூறினார். இராணுவத்தின் சேவையின் ஏனைய தேவைகளுக்காக சில உத்தியோகத்தர்கள் நடவடிக்கைப் பிரதேசங்களுக்கு அனுப்பப்படவில்லை என அவர் கூறினார்.

ஆனால், பொதுநிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன பதிலளிக்கையில், நடவடிக்கைப் பிரதேசங்களில் நாட்டுக்காக உயிரையும் அர்ப்பணித்த இராணுவ உத்தியோகத்தர்களையும் கொழும்பு அல்லது பனாகொடையில் பணியாற்றிய ஏனைய உத்தியோகத்தர்களை ஒரே மாதிரியாக நடத்த முடியாது என்றார்.

அதேவேளை நடவடிக்கைப் பிரதேசங்களில் பணியாற்றியோருக்கும் ஏனையோருக்கும் பல்வேறு சலுகைகளை அரசாங்கம் வழங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.(தமிழ்வின்)(த-10)

# உபவேந்தர்களுக்கு இடைக்காலத் தடை நீடிப்பு

பல்கலைக்கழக திணைக்களங்களின் தலைவர்களின் ராஜினாமாக் கடிதங்களை ஏற்றுக் கொள்வது தொடர்பாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர, றுகுணு, வயம்ப பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்திருந்த இடைக்கால தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவேவிதித்திருந்த தடையுத்தரவு இன்று காலாவதியாகின்றது. இந்நிலையில் இன்று முதல் ஜீன் இறுதிவரையான காலத்துக்கு மற்றொரு தடையுத்தரவை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

(தமிழ்மிரர்)(த-10)

இணையச் செய்திகள்

# தபால் மூலமான வாக்களிப்பு ஜூலை 13

இடைநிறுத்தி வைக்கப்பட்ட 64 உள்ளூராட்சி சபைகளின் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு ஜூலை 12ஆம் திகதி நடைபெறும் என தேர்தல்கள் ஆணையாளர் நேற்று அறிவித்துள்ளார்.

(தமிழ்மிரர்)(த-10)

# தலைமைத்துவப் பயிற்சியில் மாணவிக்கு கால் முறிந்தது

மாதுருஓயா இராணுவ முகாமில் தலைமைத்துவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக மாணவியொருவர் பயிற்சியின் நிமித்தம் சுமார் ஐந்து அடி உயரமான மதிலொன்றிலிருந்து பாய முற்பட்டதில் தவறி விழுந்ததால் இடது காலில் முறிவு ஏற்பட்டுள்ளது என அம்மாணவியின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில், அநுராதபுரம், தேவனம்பியதிஸ்ஸபுர, திஸாவெல்லயைச் சேர்ந்த கே.எஸ். செவ்வந்தி (வயது 22) என்ற மாணவியின் காலிலேயே இவ்வாறு முறிவு ஏற்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 22ஆம் திகதி குறித்த முகாமுக்கு தலைமைத்துவப் பயிற்சி பெறுவதற்காகச் சென்ற இந்த மாணவி 30ஆம் திகதி இடம்பெற்ற மதில் தாண்டும் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது இவ்வாறு தவறி விழுந்துள்ளார்.

இதனையடுத்து அவருக்கு குறித்த முகாமில் வைத்து இரு தினங்களாக தற்காலிக சிகிச்சைகள் வழங்கப்பட்ட நிலையில் பின்னர் அரலகன்வில பொது வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து அவருக்கு வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட காலை சுமார் 3 மாதங்கள் வரையில் நிலத்தில் வைக்கக் கூடாது என அம்மாணவிக்கு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(தமிழ்மிரர்)(த-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர சபையில் ஊழல், மோசடிகள்

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் சபையில் கேட் டவையின் ஒரு பகுதி நேற்று வெளி யாகி யிருந்தது. மேலும் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.

**ஆலங்குளம் கிராமத்துக்கு முஸ்லிம் விவாகப் பதிவாளர்**

ஆளும்கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் நேற்றுமுன்தினம் மூன்று கேள்விகளை எழுப்பி இருந்தார்.

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் ஆலங்குளம் கிராமத்தில் 1,500 பேர் வசிக்கின்றனர். அது ஒரு முஸ்லிம் கிராமம். அங்கு ஒரு முஸ்லிம் விவாகப் பதிவாளர் இல்லை. எனவே உடனடியாக ஒரு முஸ்லிம் விவாகப் பதிவாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எமது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு அமைச்சர்களின் சார்பில் ஆளும்கட்சிக் கொறடாவான தினேஷ் குணவர்த்தன பதில் அளித்தார்.

அஸ்வரின் கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும். அம்பாறை மாவட்ட பிரதேச செயலரிடம் இந்த விடயம் தொடர்பாக விவரம் கோரப்பட்டுள்ளது. விவரங்கள் கிடைத்தவுடன் ஆலங்குளம் கிராமத்துக்கு முஸ்லிம் விவாகப் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உறுதியளித்தார்.

**அனுராதபுரம் இஹல கஹ கெல்லாவ கிராமத்துக்கு மின்சாரம்**

இஹல கஹ கெல்லாவ கிராமத்தை ஊடறுத்து அதிசக்திவாய்ந்த மின்சாரக் கம்பிகள் செல்கின்றன. ஆனால் இந்தக் கிராமத்துக்கு இன்றுவரை மின்சார இணைப்புக் கிடைக்கவில்லை. இவர்களுக்கு மின் சாரம் வழங்க மின்சக்தி, எரி சக்தி அமைச்சரிடம் அஸ்வர் ஒரு கேள்வியை எழுப்பினார்.

வழமைபோல் இந்தக் கேள் விக்கும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதில் அளித் தார். அதாவது மேற்படி கிராமத்துக்கு மின்சாரம் வழங்க நிதி ஒதுக்கப் பட்டிருப்பதாகவும் விரைவில் மின்சாரம் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

**பிரபாகரனின் ஆவி அரசின் மீதா - மங்களவின் மீதா?**

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பிரபாகரனின் ஆவி தொடர்பான சுவாரஸ்யமான விமர்சனங்கள் இடம்பெற்றன.




நீண்ட இடைவெளிக்குப் பின் சபைக்கு வந்த ஐ.தே.க. உறுப்பினரான மங்கள சமரவீர அமைச்சர் வீரவன்சவின் பேச்சுக்குப் பதில் அளிக்கும் வகையில் பேசினார்.

அப்போது இந்த அரசாங்கத் தின் மீது பிரபாகரனின் ஆவி புகுந்து கொண்டு ஆட்டிப் படைப்பதாக ஒரு சோதிடர் கூறியதாகக் குறிப்பிட்டார் மங்கள சமரவீர.

**பதிலடி கொடுத்த டிலான் பெரேரா**

மங்களவின் முன்னாள் நண்பரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் ஊக்குவிப்பு அமைச்சருமான டிலான் பெரோரா பேசும் போது எல்லோரையும் விட மங்களவைப் பற்றி நன்கு அறிந்தவன் நான். அவருடன் நெருங்கிப் பழகியும் உள்ளேன். மங்கள கூறுவது போல் பிரபாகரனின் ஆவி அரசில் அல்ல. மங்கள மீதுதான் பிரபாகரனின் ஆவி புகுந்துள்ளது. மங்கள இப்போது ஒரு மாற்று ''தருஸ்மன்'' ஆகவே செயல்படுகிறார் என்றும் அமைச்சர் டிலான் பெரேரா மங்களவின் பந்தை அவருக்கே திருப்பி அடித்தார்.

**ஊழல்களை வெளிப்படுத்திய விந்தனுக்குக் கொலை மிரட்டல்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னிமாவட்ட உறுப்பினரான விநோ நோகராதலிங்கம் மிகவும் முக்கியமான விட யத்தை சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அதாவது குழுக்களின் பிரதித் தலைவர் சபையில் கூறினார் யாழ்ப்பாணத்தில் அமைதி ஏற்பட்டுள்ளது. மக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அச்சமின்றி வாழும் நிலை ஏற்பட்டுள்ளது என்று. அவரிடம் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன்.

யாழ்.மாநகர சபையில் இடம்பெறும் ஊழல், மோசடிகள் தொடர்பாக மாநகர சபை யிலும், ஊடகங்களின் ஊடாகவும் வெளிப்படுத்தி வருபவர் மாநகர சபைக் கூட்டமைப்பு உறுப்பினரான விந்தன் கனகரத்தினம்.

ஊழல்களை வெளிப்படுத்திய விந்தனின் வீடு நோட்டம் விடப்படுகின்றது. வேவு பார்க்கப்படுகின்றது. அண்மையில் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளதுடன் இனம் தெரியாதவர்களால் நேரடியாகவே கொலை

சபைச் செய்தியாளர்
**புத்திர சிகாமணி**

முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாகப் பொலிஸிலும் மனித உரிமை ஆணைக்குழுவிடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுதான் யாழ்ப்பாணத்தில் அமைதி நிலவுவதாகக் கூறும் லட்சணமா என்று விநோ எம்.பி. புட்டுக் காட்டினார். ✱

# சாரதிக்கு விளக்க மறியல்

தென்மராட்சி, ஜூன் 10

கைதடி ஏ-9 வீதியில் ஒருவர் பலியான சம்பவம் தொடர்பாக பவுஸர் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை தச்சன்தோப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கனகராசா என்பவர் மரணமான சம்பவம் தொடர்பான அறிக்கை சாவகச்சேரிப் பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு வாகனச் சாரதியையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

வாகனச் சாரதியை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்..

அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தைப்பார்வையிட்டதுடன் சம்பவ இடத்தையும் பார்வையிட்டு உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

மின்னேரியாவைச் சேர்ந்த குமாரகே ஜெயந்த குமாரகே என்னும் சாரதியே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-207)

**நினைவின் துயரில் நாமும் இணைகின்றோம்**

எமது பாடசாலையின் உப அதிபராகக் கடமையாற்றும்
திருமதி யூ.யூஜின் அவர்களின் கணவராகிய
**யூஜின்பாஸ்**
அவர்கள் இறைபதம் அடைந்த 25 ஆவது வருட நினைவு நாளில்
நாமும் இணைந்து அவரது துயரில் பங்குகொள்கின்றோம்.

யா/புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை. அதிபர், ஆசிரியர்கள்.

(40)(7794)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு**

திருமதி
**பாலசிங்கம் இரத்தினசிகாமணி**

மலர்வு
30.12.1948



உதிர்வு
22.05.2010

இன்று (10.06.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் எமது குடும்பத்தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கனகரத்தினம் வீதி,
வட்டுக்கோட்டை.

- குடும்பத்தினர்.

# ரூபா 2 ஆயிரம் அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

கைத்தொலைபேசியில் கதைத்துக் கொண்டு வாகனம் செலுத்திய நபருக்கு யாழ். நீதிமன்றம் 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

கோப்பாய் வீதியில் போக்குவரத்துப் பொலிஸார் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது மேற்படி நபர் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

கோப்பாய்ப் பொலிஸார் இவரை யாழ்.நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர்ப்படுத்தினர். வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ம-9)

**துணுக்காய் பிரதேச சபை**

**வேலைக்கான கேள்வி அறிவித்தல்- 2011**

கீழ்வரும் வேலைக்கான கேள்வி மனுக்கள் துணுக்காய் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. குறித்த வேலைக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1.கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 13.06.2011 தொடக்கம் 27.06.2011 நண்பகல் 12 மணிவரை.
2.கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 27.06.2011 பி.ப. 1 மணிவரை
3.கேள்வி திறக்கப்படும் திகதி: 27.06.2011 பி.ப. 2 மணி
(கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4.கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமையுண்டு.
5. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
6.கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
7.கேள்விப் பத்திரத்தின் ஒரு பகுதியை ''செயலாளர், துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய்'' என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறுபிரதியை '' பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு'' என்ற முகவரிக்கு 27.06.2011 ஆம் திகதிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
8.மேலதிக விவரங்களைத் துணுக்காய் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற்வரி | NBT | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த இக்ராட் தரம் |
|---|---|---|---|---|---|
| இறுதிக் கழிவகற்றுமிடம் புனரமைப்பு வேலை | 10,000.00 | 500.00 | 60.00 | 15.00 | M 09/C10 |
| மல்லாவி வைத்தியசாலை முன்வீதி புனரமைப்பு | 8000.00 | 500.00 | 60.00 | 15.00 | M 09/C10 |

துணுக்காய் பிரதேச சபை,
துணுக்காய்.
09.06.2011

(40)(சி/757)

முருகேசு கிருஷ்ணரத்தினராசா,
செயலாளர்,
துணுக்காய் பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்திய நடுவன் அரசே நீ என்ன செய்வாய்...?

இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று இந்திய மத்திய அரசாங்கத்தை கோரும் தீர்மானம் தமிழக மாநில அரசாங்கத்தால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இதற்கான பிரேரணையை மாநில முதல்வர் ஜெயலலிதாவே கொண்டுவந்தார்.

அந்தப் பிரேரணையை எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த், கடந்த மே மாதம் நடைபெற்ற மாநிலத் தேர்தலில் படுதோல்வியுற்ற முந்திய ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மார்க்சிஸ்ட் கட்சி உட்பட மாநில சட்ட சபையில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் கட்சி பேதம் காட்டாமல் ஆதரித்துப் பேசி வாக்களித்தன. மத்திய அரசின் ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியும் அவற்றில் அடங்கும்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவால் கண்டறியப்பட்ட போர்க் குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை ஐ.நா.சபை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் தமிழக மாநில அரசு நிறைவேற்றிய தீர்மானத்தில் உள்ளடங்குகிறது. அதற்கான அழுத்தத்தை இந்தியா (மத்திய அரசு) வழங்க வேண்டும் என்பது தீர்மானத்தின் இரண்டாவது பிரதான பகுதியாகும்.

இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், போர்க் குற்றங்கள் புரிந்தவர்களை குற்றவாளிகள் என்று பிரகடனப் படுத்தக்கோரி இந்திய மத்திய அரசு ஐ.நா.சபைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற இரண்டு தீர்மானங்களையும் - புதுடில்லியில் உள்ள மத்திய அரசு சீரணித்துக்கொள்ளுமா? அவற்றை முறையே நிறைவேற்றவும் அழுத்தம் கொடுக்கவும் இணங்குமா என்பதே பென்னம்பெரிய கேள்வியாகும்.

ஏக மனதாக நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் மீது பேசிய முதல்வர் ஜெயலலிதா யாருக்கும் அடங்க மறுக்கும் இலங்கை அரசை அடக்க வேண்டும் என்ற வகையில் பேசியுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகக் காங்கிரஸ் போன்றவற்றின் உறுப்பினர்களின் பேச்சுக்களின் தொனிகளும் அனேகமாக அதே மாதிரியே அமைந்திருந்தன.

தமிழக அரசு ஒரு மாநில அளவிலான அரசு மட்டுமே. மத்திய அரசின் மீது அதனால் பெரிதாக எந்த வகையான மிகுந்த செல்வாக்கையோ அழுத்தத்தையோ செலுத்துவது மிகவும் கஷ்டம் என்பது யதார்த்தமே.

எனினும், இலங்கை விடயத்தில் நெருக்குதலைத் தீவிரப்படுத்த மத்திய அரசை சிந்திக்க வைப்பதற்கு தமிழக சட்ட சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் உதவும் என்று ஓரளவேனும் நம்பலாம்.

தமிழக மாநில அரசின் காத்திரமான இரண்டு பிரதான பிரேரணைகளையும் நிறைவேற்றுமா என்பதை விட, இந்தியாவின் தமிழ்மக்கள் சார்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் என்ற கனதியும் காத்திரமும் அவற்றுக்குண்டு. தமிழகத்தின் தீர்மானங்களை அடிப் பெட்டியில் போட்டுவிட்டு மத்திய அரசு அசமந்தமாக இருக்கவும் முடியாது. தமிழகத்தின் கோரிக்கைகளை மத்திய அரசு காதில் போட்டுக்கொள்ளாவிடில், மாநிலத்தில் தமிழக மக்கள் - முன்னெடுக்கக் கூடிய, தீர்மானங்களுக்கு ஆதரவான, அவற்றை நிறைவேற்ற வலியுறுத்தும், தீக்குளிப்பு மரணங்கள், ஆர்ப்பாட்டங்கள், ரயில் மறிப்புப் போராட்டங்கள் போன்றவற்றின் விளைவுகள் பாரதூரமானவையாக அமையக்கூடும்.

ஆகையால் -

தமிழக மாநில அரசின் தீர்மானங்கள், இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் - ஆளும் கட்சி - தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளின் பொருட்டு ஏதாவது செய்தாக வேண்டும் என்பதன் பிரதிபலிப்பு என்று கணக்குப் போட்டு மத்திய அரசு செயற்பட முனைந்தால், அதன் பிரதிபலன்கள் ஏனைய தென்மாநிலங்களிலும் எதிரொலித்து பெரும் குழப்பங்களைத் தோற்றுவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆந்திர மாநிலத்தில் தெலுங்கானா கோரிக்கை - பிரச்சினை - தலைதூக்கியிருப்பது அங்கு மத்திய அரசுக்குப் பெரும் சிக்கலைத் தோற்றுவிக்க வாய்ப்பு உண்டு. தமது அரசியல் கிளர்ச்சிக்கு ஆதரவு சேர்க்க இலங்கை விடயத்தையும் அந்த மாநிலத்தார் பயன்படுத்த முனையலாம்; ஈழத் தமிழருக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வலியுறுத்தி ஆந்திராவில் அண்மையில் ஆர்ப்பாட்டம் நடத்தியதை முதற் படியாகக் கொள்ளலாம்.

அதேபோன்று, மற்றும் அண்டை மாநிலங்களில் - தெற்கு மாநிலங்களில் - தமிழக அரசு இலங்கை சம்பந்தமான தனது நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேட முடியும். இது விடயத்தில் தமிழக அரசு நினைத்தால் தனது தீர்மானங்களுக்கு வலுச் சேர்க்க வாய்ப்பு உண்டு.

மேலும் மத்திய ஆட்சியில் எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியினர் மற்றும் இடது சாரிகள் இலங்கை விடயத்தில் - இலங்கைத் தமிழர் விவகாரத்தில் - அனுதாபம் கொண்டவர்களாக உள்ளனர். தமிழக அரசு அவர்களை அணுகினால், அகில இந்திய மட்டத்தில், மத்திய அரசின் மீது தனது தீர்மானங்கள் பொதிந்த செல்வாக்கை - மறு வடிவில் நிர்ப்பந்திக்க முடியும்; அதற்கான சூழலை ஏற்படுத்தவும் வாய்ப்பு உண்டு.

இலங்கை விவகாரத்தில், இலங்கைத் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வழி செய்வதற்கு தமிழ் நாடு அரசின் தீர்மானங்களின் அடிப்படைகளைப் பகுத்துணர்ந்து, புரிந்துகொண்டு அதனைச் சாணக்கியமாகப் பயன்படுத்த இந்திய மத்திய அரசு முன்வர வேண்டும் என்றே இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இன்று கொழும்பு வந்துசேரும் மத்திய அரசின் உயர் அதிகாரிகள் குழுவினர் இங்கு நடத்தும் பேச்சுவார்த்தையில் தமிழக அரசின் தார்மீக உணர்வை உள்வாங்கிச் செயற்படக் கூடாதா?

இலங்கையின் போர் வெற்றிக்கு உதவிய பாரத தேசம் -

ஆற்றைக் கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி; அதன் பின்பு நீ யாரோ நான் யாரோ என்று போக்குக் காட்டுவதை இந்தியா இன்னும் புகுந்து அறியவில்லையா, என்ன?

# சாவகச்சேரியில் நகை திருடிய திருகோணமலை வாசிக்கு சிறை

தென்மராட்சி, ஜூன் 10

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இயங்கும் நகையகம் ஒன்றில் நகை திருடிய திருகோணமலை பெண்ணுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் எட்டு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் கடையில் நகை வாங்க வந்தது போல் நடித்து 3ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தங்க நகையை கைப்பையில் வைத்துக் கொண்டு வெளியேற முற்பட்ட வேளையில் கடைச் சிப்பந்திகளால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சாவகச்சேரி பொலிஸாரால் இந்தப் பெண்ணுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதிவான், பெண் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் எட்டுமாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (எ-207)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் வீதிகள், கட்டடங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடமராட்சி கிழக்கில் அண்மையில் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட இடங்களில் உள்ளூராட்சித் திணைக்களங்களுக்குட்பட்ட வீதிகள், கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கின் துரித மீள்எழுச்சித் திட்டத்தின்கீழ் பொருளாதார அமைச்சின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டுவரும் வீதிகள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாகும் என புதிதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளராகப் பதவி ஏற்றுள்ள எம்.ஜெகூ தெரிவித்தார்.

இந்த வீதிகள் புனரமைப்புக்கென பொருளாதார அமைச்சு 320 பில்லியன் நிதியை ஒதுக்கியுள்ளது.

அதாவது, அம்பன் தொடக்கம் மருதங்கேணி வரையிலான 49.2 கிலோ மீற்றர் வரையிலான நாகர்கோயில், உடுத்துறை, ஆழியவளை, ஆலையடி ஆகிய வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீதிகள் விரைவில் பூர்த்தியாக்கப்பட்டு மக்களின் தேவைக்காகத் திறந்துவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-311)

# மஹிந்த சிந்தனைத் திட்டத்தில் நாடளாவிய ரீதியில் வீடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

நாடளாவிய ரீதியில் மஹிந்த சிந்தனைத் திட்டத்தின்கீழ் வீடில்லாதவர்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 10 லட்சம் வீடமைக்கும் திட்டம் அடுத்த 5 ஆண்டுகளில் முடிவுறுத்தப்பட்டு ஒரு குடும்பத்துக்கு ஒரு வீடு என்ற அடிப்படையில் வீடு வழங்கப்படும்.

நிர்மாண வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ இதுகுறித்து அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்தமாக குருவிட்டப் பிரதேச செயலர் பிரிவில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 30 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக இதுவரை 6 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக 10 லட்சம் வீடமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப மதிப்பீட்டு அங்கீகாரத்துடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, வடக்குக்கான வீடமைப்பு ஒதுக்கீடுகள் தொடர்பாகத் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு விரைவில் அறிவிக்கப்படும்.

அதற்கு முன்னர் தேவை மதிப்பீட்டு பட்டியலை நிர்மாண வீடமைப்பு பொது வசதிகள் அமைப்பு அரச அதிபரூடாக விரைவில் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-302)

# நோர்வே அரசின் நிதியில் கனகராயன் குளத்தில் வீடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

நோர்வே அரசு 'சீட்' (SEED) நிறுவனத்தின் ஊடாகக் கனகராயன் குளத்தில் நிரந்தர வீடுகளை அமைத்துள்ளதாக நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இறுதி யுத்தத்தால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நோர்வே அரசால் பல்வேறுபட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதில் ஒரு கட்டமாகக் கிளிநொச்சி, கனகராயன் குளத்தில் மக்களுக்கான நிரந்தர வீடமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஒவ்வொன்றும் 5 லட்சம் ரூபா பெறுமதியான 250 நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியை நோர்வே அரசு 'சீட்' நிறுவனத்தின் ஊடாக வழங்கியுள்ளது.

இந்த வீடுகள் யாவும் முகாம்களில் தங்கியிருந்து மீளக்குடியேறிய மக்களுக்கே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நோர்வே அரசால் யு.என்.டி.பியினூடாக யாழ்ப்பாணம் வசந்தபுரத்தில் வீட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக நோர்வே அரசு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை யு.என்.டி.பி. நிறுவனத்துக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-15)

# அழகியல் பட்டதாரிகளுக்கு நியமனம் இல்லை

யாழ்ப்பாணம்,ஜூன் 10

யாழ். மாவட்டத்தில் அழகியல் பட்டதாரிகளுக்கான நியமனத்தை இதுவரை வழங்காது அரசு இழுத்தடித்து வருவதாக அழகியல் பட்டதாரிகள் விசனமடைந்துள்ளனர்.

வெளி மாவட்டத்தைச் சேர்ந்த அழகியல் பட்டதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இதுவரை நியமனம் வழங்கப்படாத நிலையில் உள்ளனர்.

ஆனால் வடமாகாணத்துக்கென விண்ணப்பித்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படவில்லை எனத் தெரிகின்றது.

அழகியற்பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கப்படாத நிலையில் தமது அன்றாட சீவியத்துக்காக இவர்கள் வேறு வேலைகளைத் தேடி அலைவதாகவும் தெரிகின்றது. (ஐ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
10 ஜூன் 2011 வெள்ளிக்கிழமை

# அமெரிக்க கைத்தொழில் நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் முதலீட்டு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10

அமெரிக்க கைத்தொழில் நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவான இரு தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அமெரிக்க வர்த்தக மன்றத்தின் தலைவர் விஜய இரத்னாக்காவுக்கும் ஆனைப்பந்தியிலுள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத் தலைவர் கனகசபை பூரணச்சந்திரனுக்கும் இடையிலேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. கடந்த மாதம்30 ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த இரண்டு தரப்பினரதும் அங்கத்தவர்களிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தும் முகமாகவே இது கைச்சாத்திடப்பட்டது.

குறித்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒப்பந்தம் கைச்சாத்தானது



* இரு பகுதிகளிலுமுள்ள வர்த்தக சமூகத்தவரிடையேயும் வர்த்தக மேலறிவை ஊக்குவித்தல்.
* பரஸ்பர முதலீடுகளை மேம்படுத்தல்.
* இரு அங்கத்தவரிடையேயும் பரஸ்பரம் நன்மையளிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
* திட்டம் வெற்றிகரமாக அமைவதற்கு ஏற்றவாறான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
* பிறநாடுகளில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டு அவற்றையும் வர்த்தக மற்றும் முதலீட்டு முயற்சிகளில் இணைத்தல்.
* பொருளாதார ஒத்துழைப்பை விரிவாக்குதல்.

(ம-14)

# அனுமதியின்றி மதுபானம் விற்போரை தடுப்பதற்கு ஒத்துழைப்பு அவசியம்

## மதுவரித்திணைக்களப் பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 9

அனுமதியின்றி மதுபான விற்பனையில் ஈடுபடுவோர் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்றது.

இதனைத் தடுக்க அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று யாழ்.மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மதுவரித்திணைக்கள எல்லைக்குள் கசிப்பு விற்பனை குறைவடைந்துள்ளது. இருப்பினும் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் கடந்த மே மாதம்வரை சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட 71 பேர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு 79 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கிராம உத்தியோகத்தர்களுடன் இணைந்து இத்தகைய சட்டவிரோத மதுபான விற்பனையைத் தடுக்க திடீர்ச் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எனவே இத்தகைய செயற்பாடுகள் மேன்மேலும் அதிகரிப்பதைத் தடுப்பதற்கு கிராம உத்தியோகத்தர்கள், சமூக நிறுவனங்கள் தம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (ம-9)

# வாக்களிப்பு நிலையங்கள் குறித்து கிராம உத்தியோகத்தருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 9

உள்ளூராட்சித் தேர்தலுக்காக அமைக்கப்படவேண்டிய வாக்களிப்பு நிலையங்கள் குறித்து கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.தேர்தல் உதவி ஆணையாளர் எஸ்.கருணாநிதி தேர்தல் தொகுதிகளுக்கு நேரடியாக விஜயம் செய்து கிராம உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றார்.

கடந்த 6 ஆம் திகதி முதல் இத்தகைய பணிகளில் அவர் ஈடுபட்டு வருகின்றார் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் உள்ள தேர்தல் தொகுதிகளுக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள கிராம உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி வாக்களிப்பு நிலையங்களின் அமைவிடம் அதற்குரிய முன் ஏற்பாடுகள் குறித்தும் அறிவுறுத்தல்களை வழங்கி வருகிறார்.

இந்த அறிவுறுத்தல்களை எதிர்வரும் 14ஆம் திகதி வரை யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் வழங்கவுள்ளார் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-9)

## சேவை நோக்கு...



வரவேற்பு: அச்சுவேலி பொலிஸாரால் இடைக்காடு மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் போது வருகை தந்த விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். (ம-236)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் குழந்தைகள் விடுதி பணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்.போதனா வைத்திய சாலையில் நோயாளர் விடுதிகள் அமைந்துள்ள நான்கு மாடிக் கட்டடத்தின் நான்காவது மாடியில் குழந்தைகள் விடுதி அமைப்பதற்கான உட்கட்டமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

நான்காம் மாடியில் தூண்கள் நிறுவப்பட்டு கூரைவேலைகள் நிறைவடைந்த நிலையில் பல்வேறு காரணங்களால் உட்கட்டுமாணப் பணிகள் தடைப்பட்டிருந்தன.

இந்த நிலையில் தற்போது உட்கட்டமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது குழந்தைகளுக்கென 5ஆம், 11ஆம், 12ஆம் இலக்க விடுதிகளே உள்ளன. இவற்றில் ஒன்று வசதிகள் குறைந்த நிலையில் இயங்கி வருகின்றது.

அதனை நவீன முறையில் மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நான்காம் மாடியில் உட்கட்டமைப்பு வேலைகள் நிறைவடைந்ததும் அங்கு இலகுவாகக் குழந்தைகளுக்குச் சிகிச்சையளிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-4)

## உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில்

# யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 7 அரசியல் கட்சிகள் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 10

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 7 அரசியற் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடவுள்ளன.

வல்வெட்டித்துறை நகர சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசி யக் கட்சி, சுயேச்சைக் குழு என்பனவும் பருத்தித்துறை நகர சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி என்பனவும் சாவகச்சேரி நகர சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய சோசலிசக் கட்சி என்பனவும் போட்டியிடுகின்றன.

காரைநகர் பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி என்பனவும் ஊர் காவற்றுறை பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பனவும் நெடுந்தீவு பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பனவும் வேலணை பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பனவும் போட்டியிடுகின்றன.

வலி.மேற்கு பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பனவும் வலி.வடக்கு பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பனவும் வலி.தென் மேற்கு பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பனவும் வலி. தெற்கு பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பனவும் போட்டியிடுகின்றன. வலி.கிழக்கு பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி என்பனவும் வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி, ஐக்கிய தேசியக் கட்சி, சுயேச்சைக் குழு என்பனவும் பருத்தித்துறைப் பிரதேசசபைக்கு இலங்கை தமிழரசுக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, சுயேச்சைக்குழு என்பனவும் சாவகச்சேரி பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, சுயேச் சைக்குழு - 1, சுயேச்சைக் குழு - 2 என்பனவும் நல்லூர் பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பனவும் போட்டியிடுகின்றன.

பச்சிளைப்பள்ளி பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பனவும் கரைச்சிப் பிரதேச சபைக்கு இலங்கை தமிழரசுக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி என்பனவும் பூநகரி பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பனவும் போட்டியிடுகின்றன. (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பொலிஸார் தொடர்பில் பொதுமக்களுக்கு நம்பிக்கையீனம்

## அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம் , ஜூன் 10
யாழ்.மாவட்டத்திலுள்ள மக்களிடம் பொலிஸார் தொடர்பில் நம்பிக்கையீனமும் அதிருப்தியும் ஏற்பட்டுவருவதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.குடாநாட்டில் பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. அத்துடன் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகமும் அதிகரித்துச் செல்கின்றது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உரிய வகையில் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு வன்முறைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது, அனுமதிக்கவும் முடியாது.

எனவே இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதனை தடுப்பதற்கான ஆரம்பக் கட்ட முயற்சியில் ஈடுபடவேண்டிய பொலிஸார் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லாமல் உள்ளது. அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறுமுறைப்பாடுகள் எனக்குக் கிடைத்த வண்ணம் உள்ளன.

மேலும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டும். இதற்காக நீதிபதிகளுடன் கலந்துரையாடவுள்ளேன். - என்றார் அரச அதிபர். (த-15)

# ஆலய உண்டியல் திருட்டு; இளைஞர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜூன்10
அரியாலை, புங்கன்குளம் ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்தின் உண்டியல் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு இளைஞர்களை யாழ். குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரியாலை , பாசையூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 19 மற்றும் 21 வயதுகளை உடைய இளைஞர்கள் இருவரே நேற்று முன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இளைஞர்கள் இருவரையும் பொலிஸார் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவுவேளையில் ஆலயத்தின் உண்டியலை உடைத்து சுமார் 5 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஆலயத்தில் இருந்த கசற் றெக்கோடிங் செற் ஆகியவற்றை திருடியது தொடர்பாகவே சந்தேகத்தின் பேரில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டு இடம்பெற்ற மறுநாளே இந்த விடயம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அன்றைய தினமே சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாகக் குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். ( த-4-14)

## வாக்காளர் விண்ணப்பங்களை

# சரியான அறிவுறுத்தல்களுடன் மக்களுக்கு வழங்கவேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 9
வாக்காளர் இடாப்பு மீளாய்வுக்குரிய விண்ணப்பப் படிவங்களை கிராம உத்தியோகத்தர்கள் மக்களிடம் வழங்கும் போது சரியான வகையில் இவை தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

யாழ். உதவித்தேர்தல் ஆணையாளர் எஸ்.கருணாநிதி கிராம உத்தியோகத்தர்களுக்கு இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

2011 ஆம் ஆண்டுக்கான வாக்களார் இடாப்பு மீளாய்வுப் படிவங்களை யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் கிராம உத்தியோகத்தர்களிடம் நேரடியாகச் சென்று கையளித்து வருகின்றார். இதன்போது அவர் இந்த அறிவுறுத்தலையும் விடுத்து வருகின்றார்.

வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் படிவங்களை சரியான அறிவுறுத்தல்களுடன் பொதுமக்களிடம் கையளித்து அவற்றை உரிய முறையில் யாழ்.தேர்தல் திணைக்களத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர் கிராம உத்தியோகத்தர்களுக்குத் தெரிவித்துவருகின்றார். (ம-9)

## நிழல் தருமா...



சூழல் பாதுகாப்பு: வலி.மேற்கு சுழிபுரம் பிதேச சபைக்குட்பட்ட உப அலுவலகங்களில் மஹிந்த சிந்தனையின் கீழ் மரம் நடுகைத் திட்டம் சபைச் செயலாளர் அ.புத்திசிகாமணி தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. வலி.மேற்கு பிரதேச படையினரும், சுழிபுரம் உப அலுவலகப் பணியாளர்களும் இணைந்து மரம் நடுகையில் ஈடுபடுகின்றனர். (ம-302)

# நடமாடும் சேவைமூலம் நிவாரணம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடமாடும் சேவை மூலம் மணியந்தோட்டம் மற்றும் பூம்புகார் பகுதியில் அண்மையில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான இடம்பெயர்ந்தோரின் நிவாரணம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இன்று வெள்ளிக் கிழமையும் நிவாரணம் விநியோகிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜே/90 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு நேற்று வியாழக்கிழமை விநியோகிக்கப்பட்டது.

ஜே/89 கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை மேமாதத்துக்குரிய இடம் பெயர்ந்தோர் நிவாரணம் விநியோகிக்கப்படும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் கே.கவிந்திரதாஸ் தெரிவித்துள்ளார்.

நடமாடும் சேவை வாகனம் மூலம் அந்த பகுதிக்கு நேரடியாகச் சென்று இந்த உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுவதால் மக்கள் பெரிதும் நன்மையடைவர் என்று தெரிவிக்கப்பட்டது. ( த-26)

# விசேட திட்டத்தின் கீழ் வழுக்கையாறு விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 10
யாழ்.மாவட்டத்தில் மீள் எழுச்சித் திட்டத்தில் வழுக்கையாறு விசேட திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் அழிவுற்ற குளங்கள், வாய்க்கால்கள், அணைக்கட்டுக்கள் என்பன 60 மில்லின் ரூபா செலவில் மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

வவுனியா மீள்எழுச்சித் திட்ட மேலதிக திட்டப்பணிப்பாளர் எந்திரி ஏ.சி.விேனாதராஜ் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேல் புனரமைக்கபடாத வழுக்கையாற்றுப் படுக்கையின் கீழான குளங்கள், வாய்க்கால்கள் அணைக்கட்டுக்களே இவ்வாறு மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இந்தத் திட்டத்தை மூன்று மாதகாலங்களில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளார்.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தும் போது வழுக்கையாற்றின் கீழ் வரும் 12 குளங்கள் மீள்புனரமைப்புக்கு உட்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-302)

# முன்பள்ளி விளையாட்டு விழாவில் பங்கு பற்றிய மாணவர், பெற்றோருக்கு வயிற்றோட்டம்

## சுகாதாரப் பகுதியினரின் விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன் 10
முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்ட 26 முன் பள்ளிக் குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்ற பரிதாப சம்பவம் ஒன்று கொக்குவிலில் இடம்பெற்றுள்ளது.

வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கொக்குவில், கோண்டாவில் பகுதியிலுள்ள தனியார் வைத்திய நிலையங்களில் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

கொக்குவில், சம்பியன் லேனிலுள்ள வளர்மதி சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு கடந்த நான்காம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டவர்களுக்கே மறுநாள் ஞாயிற்றுக்கிழமை வயிற்றோட்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கபட்டது.

விளையாட்டு நிகழ்வின் போது வழங்கப்பட் உணவுப் பொருள்களில் அல்லது குளிர் பானத்தில் நோய்த் தொற்றுக் கிருமிகளின் தாக்கம் ஏற்பட்டு வயிற் றோட்டம் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

அந்த முன்பள்ளியில் 66 முன்பள்ளிச் சிறார்கள் பயின்று வருகின்றனர். அவர்கள் அனை[illegible] வரும் விளையாட்டு நிகழ்வில் பங்கேற்றபோதும் 26 சிறார்களுக்கே இந்த வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் கணிசமான எண்ணிக்கையான பெரியவர்களுக்கு மட்டுமே வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகச் சுகாதாரப் பகுதியினர் முழுவீச்சில் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது.

முன்பள்ளி விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்டவர் [illegible] தற்கான [illegible] நல்லூர்ப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி இ.சிவசங்கரிடம் வினவியபோது;

விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்ட முன்பள்ளி மாணவர்கள் 26 பேருக்கும், பெரியவர்கள் சிலருக்கும் வயிற்றோட்டம் ஏற்பட்டிருக்கிறது. வாந்தியுடன் கூடிய வயிற்றோட்டமே ஏற்பட்டது எனக் கூறப்பட்டது.

நிகழ்வின்போது வழங்கப்பட்ட கேக் போன்ற உணவு வகையில் அல்லது குளிர்பானத்தில் ஏதேனும் நோய்த் தொற்று ஏற்பட்டு வயிற்றோட்டம் ஏற்பட்டிருக்கலாம். அல்லது நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் யாரேனும் ஒருவருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டு அவர் மூலம் ஏனையோருக்கும் பரவியிருக்கலாம். வயிற்றோட்டம் ஏற்பட்டதற்கான காரணம் குறித்து ஆய்வு செய்து வருகிறோம். - என்றார் அவர்.

நிகழ்வின் போது பயன்படுத்தப்பட்ட குடிதண்ணீர் மாதிரி தேசிய நீர் வழங்கல் அதிகார சபையின் பிராந்திய ஆய்வு கூடத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குளிர்பானம் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட ''எசன்ஸ்'' போத்தல்களும் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. என்று அவர் மேலும் கூறினார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 உதயன் 10 ஜூன் 2011 வெள்ளிக்கிழமை

# புலிக்கொடி பிரிட்டனில் தடையில்லை

## சட்டத்தரணிகள் குழு அறிவிப்பு

லண்டன்,ஜூன்10

தமிழீழ தேசியக்கொடியின் பாவனைக்கு பிரிட்டனில் தடை விதிக்கப்படவில்லை என்று அந்த நாட்டின் புகழ்பெற்ற சட்டத்தரணிகள் குழு உறுதி செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பிரிட்டனின் அதிகாரங்களுக்கு உட்பட்ட வேல்ஸ், ஸ்கொட்லாண்ட் மற்றும் வட அயர்லாந்து என எந்த நாட்டிலும் தமிழர்களின் தேசியக் கொடிக்கு தடை விதிக்கப்படவில்லை. அதுமட்டுமல்லாது தேசியக் கொடி வைத்திருந்தால் கைது செய்து தண்டனைக் வழங்க முடியாது எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை போராட்டங்களில் பொலிஸார் ஆதரவு வழங்க வேண்டுமானால் தேசியக் கொடியை அனைத்து விதமான போராட்டங்கள் மற்றும் நிகழ்வுகளில் முன்னிலைப்படுத் வேண்டும். அத்துடன் தமிழர் அமைப்புக்கள் ஊடாக அதனை வெளிக்கொண்டுவர வேண் டும் என்றும் சட்டத்தாரணிகள் குழுவின ரால் சிறந்த யோசனைகளும் முன்வைக் கப்பட்டன.

இதேவேளை பிரிட்டனில் தமிழீழத் தேசியக் கொடி தடை செய்யப் பட்டிருந்தால் அதனைக் கண்டிப்பாக பி.பி.சி செய்திச் சேவை குறிப்பிட்டிருக்கும். தடைசெய்யப்பட்ட கொடியை ஒருவர் தாங்கி நிற்பதை பிரிட்டனின் தேசிய ஊடகம் ஒளிபரப்பி இருக்காது. ஆனால் தமிழீழத் தேசியக்கொடிக்கு பிரிட்டனில் தடை என்று சில சிங்கள அரசின் கைக்கூலிகள் தொலைக்காட்சிகளில் புலம்பெயர் தமிழர்களை உளவியல் ரீதியாக பாதிப்பை ஏற்படுத்த முனைகின்றார்கள்.

தமிழீழத் தேசியக் கொடிக்கு பிரித்தானியாவில் சட்டரீதியான தடைகள் எவையும் இல்லை. இது நிரூபிக்கப்பட்ட உண்மையான விடயமாகும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள் நேற்று பூந்தோட்டத்தில்

வட பகுதிக்கு பயணம் செய்த இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் சிலர் வவுனியா, பூந்தோட்டத்தில் அமைந்துள்ள புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இவர்களுடன் மாலைதீவு, பங்களாதேஷ் மற்றும் ஆபிரிக்க நாடுகளின் இராணுவ அதிகாரிகள், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவும் சந்திப்பில் கலந்து கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழ் விதவைகளின் துயர் இப்போது எனக்குப் புரிகிறது

## அனோமா பொன்சேகா

வட பகுதியில் கணவர்மார்களை இழந்துவாழும் பெண்களின் துயரங்களை நானும் உணர்கின்றேன். ஜனநாயகம் எனக் கூறி எமது கணவன்மார்களை சிறை வைத்தும், கொலை செய்தும், காணாமல் செய்யும் இந்த நாட்டின் கலாசாரத்திற்கு எதிராக, அனைத்துப் பெண்களும் ஓரணியில் திரள வேண்டும் என்று அனோமா பொன்சேகா தெரிவித்தார்.

காணாமல் போனவர்களின் உறவினர்களால் நேற்றுமுன்தினம் லிப்டன் சுற்று வட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே அனோமா பொன்சேகா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தொடர்ந்தும் கூறுகையில்:

இலங்கையில் ஜனநாயகம் எங்கே இருக்கின்றது. வடக்கிலும் சரி தெற்கிலும் சரி பல்வேறு காரணங்களுக்காக கணவர்மார்களையும் ஏனைய உறவினர்களையும் இழந்து எத்தனை பெண்கள் நரக வேதனையை அனுபவிக்கின்றனர். எனவே இதனை மாற்றியமைக்க வேண்டும்.

பெண்கள் தமது உறவுகளையும் உடைமைகளையும் இனி வரும் காலங்களில் இழக்கக் கூடாது. வடக்கில் கணவன்மார்களை இழந்து வாழும் பெண்களின் சொல்லொணாத் துயரத்தை இன்று நானும் உணர்கின்றேன் எனக் கூறினார் அவர்.

# தூத்துக்குடி - கொழும்புக்கான கப்பல் சேவை ஜீன் 14இல்

கொழும்பு,ஜூன்10

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலான கப்பல் சேவையின் முதலாவது கப்பல் எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பை வந்தடையவுள்ளதாக இலங்கை கப்பல் போக்குவரத்துக் கூட்டுத்தாபனம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கப்பல் போக்குவரத்துக் கூட்டுத் தாபனம் மேலும் தெரிவித்ததாவது:-

தூத்துக்குடியில் இருந்து எதிர்வரும் 13ஆம் திகதி புறப்படும் இந்தியக் கப்பல் 10-12 மணித்தியால பயணத்தின் பின் கொழும்பை வந்தடையும். இதில் முக்கியஸ்தர்களும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான சாதாரண பயணிகளும் பயணம் செய்யவுள்ளனர். அதேவாரத்தில் இந்தக் கப்பல் திரும்பிச் செல்லவுள்ளபோதிலும் அதற்கான திகதி இதுவரைக்கும் தீர்மானிக்கப்படவில்லை.

இதேவேளை -

இந்தச் சேவைக்கென இலங்கை இன்னமும் கப்பல் எதனையும் வாங்கவில்லையென இலங்கை கப்பல் போக்குவரத்துக் கூட்டுத்தாபனம் கூறியது.

இந்தக் கப்பலில் பயணம் செய்வதற்கான கட்டணம் 60 அமெரிக்க டொலரைவிடக் குறைவாக இருக்கவேண்டுமென்பதில் இரண்டு நாடுகளும் ஒரே கருத்தையே கொண்டுள்ளன. இந்தச் சேவை வாராந்த சேவையாக இருக்கும். இதற்கான விஸாக்களை வழமையான முறையிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தச் சேவையின் வெற்றியைப் பொறுத்தே தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்குமிடையிலான கப்பல் சேவை பற்றிய தீர்மானம் மேற் கொள்ளப்படுமென கப்பல் போக்குவரத்து கூட்டுத்தாபன அதிகாரிகள் கூறினர்.


ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 129
திகதி - 08.06.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: M | அதிர்ஷ்ட இலக்கம்: 10 | வெற்றி இலக்கம்: 5 4 5 7 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | M 10 5 4 5 7 9 | ரூ. | 18,864,004.00 | பரிசு - |
| 1 பரிசு | 10 5 4 5 7 9 | ரூ. | 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | 5 4 5 7 9 | ரூ. | 100,000.00 | பரிசு 03 |
| 3 பரிசு | 4 5 7 9 | ரூ. | 10,000.00 | பரிசு 29 |
| 4 பரிசு | 5 7 9 | ரூ. | 1,000.00 | பரிசு 319 |
| 5 பரிசு | 7 9 | ரூ. | 50.00 | பரிசு 3030 |
| 6 பரிசு | 9 | ரூ. | 20.00 | பரிசு 29347 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 7 பரிசு | 5 4 5 7 | ரூ. | 1,000.00 | பரிசு 30 |
| 8 பரிசு | 5 4 5 | ரூ. | 100.00 | பரிசு 302 |
| 9 பரிசு | 5 4 | ரூ. | 50.00 | பரிசு 3074 |
| 10 பரிசு | M | ரூ. | 20.00 | பரிசு 12084 |
| 11 பரிசு | M 10 | ரூ. | 100.00 | பரிசு 1350 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,238,020.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ.19,351,595.00


## கலைப்பீட அரையாண்டு பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் ஜூன் 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத் தின் முதலாம் அரையாண்டுக்கான அனைத்துப் பரீட்சைகளும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள் ளன.

பரீட்சை நடை பெறும் புதிய திகதி பற்றிய விவரங் கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று கலைப் பீடாதி பதி பேராசிரியர் நா.ஞானகுமார் அறிவித்துள் ளார். (வ)

## பாடசாலைக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள்

வடமராட்சி ஜூன் 10

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்துக்கு பழைய மாணவர் ஒருவரினால் பாண்ட் வாத்திய இசைக் கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த வித்தியாலயத்தின் பழைய மாணவரும், பருத்தித்துறையைச் சேர்ந்தவரும் லண்டனில் வசித்து வருபவருமான எஸ். சற்குணராசா என்பவரே இவற்றை வழங்கியுள்ளார்.

ஒரு லட்சத்து 21ஆயிரம் ரூபா பெறுமதியான பான்ட் வாத்தியக் கருவிகளை பழைய மாணவரின் சார்பில் அவரது உறவினர்கள் வித்தியாலய அதிபர் அ.சா. சூரியகுமாரிடம் கையளித்துள்ளனர்.


உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா சம்புத

சீட்டிழுப்பு இலக்கம் 615
திகதி 08/06/2011

சுப்பர் இலக்கம்: 14 — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 06 13 28 52

| | கூட்டு | | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. | 16,211,413.60 | - |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. | 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. | 50,000.00 | 15 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. | 2,000.00 | 240 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. | 1,000.00 | 481 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. | 100.00 | 11978 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. | 40.00 | 6838 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. | 20.00 | 173648 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியா இருப்பின் | ரூ. | 20.00 | 27886 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசுத்தொகை ரூ. 8,213,000.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்
ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு 16,366,801.60

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம் - WWW.nlb.lk



முரண்பாடுகளைக் களைந்து சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்த வேண்டுமா?...

சமாதானத்துக்கும்
நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால்
நடத்தப்படும் 30 மணித்தியால பயிற்சிப் பட்டறை

"முரண்பாட்டுத் தீர்வுகளும்
வன்முறையற்ற தொடர்பாடலும்"

தகுதியான சான்றிதழ் வழங்கப்படும்.
நடைபெறும் நாள்கள்: சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில்
பயிற்சிக் கட்டணம் 3000/=
விண்ணப்ப முடிவு திகதி: 30.06.2011

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

யாழ்ப்பாணம்
இல.08, குருசோ வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

வவுனியா
34/18, தெற்கிலுப்பைக்குளம்,
வெளிக்குளம், வவுனியா.

பயிற்சி நிலையங்கள்
யாழ்ப்பாணம், வவுனியா.

தகவல்:
நிர்வாகம்.

(39)(சு/7௦)





(வ-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 இலங்கையர் நாடுகடத்தப்படுவர்

## பிரிட்டன் நடவடிக்கை

கொழும்பு,ஜூன்10

பிரிட்டனில் அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட சுமார் 300 இலங்கையர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி நாடு கடத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக் கப்படுகின்றது.

இவர்களை வெளியேற்றுவதற்காக பிரிட்டன் எல்லை முகவரகம் விசேட விமானமொன்றை ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு கடத்தப்படவுள்ள இலங்கையர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் எனத் தெரியவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு கடத்தப்படுவதிலிருந்து தடுப்பதற்கான நடவடிக்கைகளில் இலங்கையர்கள் ஈடுபட்டுள்ளனர்.

1980ஆம் ஆண்டு முற்பகுதியிலிருந்து பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் பிரிட்டனுக்கு அகதிகளாக சென்றுள்ளனர். கனடாவுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையான புலம்பெயர்ந்த தமிழர்களை கொண்ட நாடாக பிரிட்டன் உள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தனியார் பஸ் நடத்துநர்களை அரசே இனித் தேர்ந்தெடுக்கும்

## மேல்மாகாணத்தில் புதிய முறைமை

கொழும்பு ஜூன்

மேல் மாகாணப் போக்குவரத்து அதிகாரசபை முதன் முறையாக தனியார் பஸ் நடத்துனர்களைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கென தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் பியசேன திசாநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்துள் ளார்.

ஜீ.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த 18-30 வயதானவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது குழுவுக்கு ஒரு வார காலப் பயிற்சி அளிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ் ஒன்று வழங்கப்படும். அதன் பின் அவர்கள் பஸ் உரிமையாளர்களிடம் அனுப்பி வைக்கப்படுவர். ஏற்கனவே சுமார் 500 பஸ் உரிமையாளர்கள் நடத்துனர்களைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஊடகவியலாளர் பிரகீத் மாயமாகி 500 நாள்கள்

கொழும்பு, ஜூன் 10

பிரபல ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போய் இன்றுடன் 500 நாள்கள் ஆவதை முன்னிட்டு கொழும்பு லிப்டன் சுற்றுவட்டமருகில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சுதந்திர ஊடக இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஊடக அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி மற்றும் 'அனோமா பொன்சேகா உட்பட அரசியல் தலைவர்களும் மனித உரிமை ஆர்வலர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த நாட்டிலே ஜனநாயகம் இல்லை எனவும், ஊடக சுதந்திரம் இல்லை எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர். அதேவேளை பிரகீத் ஹெக்நெலிகொடவின் புகைப்படம் அச்சிடப்பட்ட அட்டைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதேவேளை இவர்களுக்கு ஆதரவாகக் கைகோக்கும் வகையில் காணாமல் போனோரைத் தேடியறியும் குழுவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டது.

# கட்டுநாயக்க தாக்குதல் குறித்த விசாரணை அறிக்கை ஒப்படைப்பு

கொழும்பு,ஜூன்10

கட்டுநாயக்க மோதல் சம்பவம் குறித்த விசாரணை அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


கடந்த 30 ஆம் திகதி பொலிஸாருக்கும், சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின்போது பொலிஸார் நடத்திய தாக்குதலில் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் குறித்து ஆராய்வதற்காக ஓய்வு பெற்ற நீதிவான் மஹானாம திலகரட்ன தலைமையிலான தனிநபர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணை அறிக்கை நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (சி)

## நியமனம்...




ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தனா, கட்சியின் செயற்குழுத் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தனாவுடன் உரையாடுகின்றார்.

# காயமடைந்த பெண்களுக்கும் நட்டஈடு வழங்க வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 10

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இடம்பெற்ற சம்பவம் குறித்து நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். அதேவேளை, அந்தச் சம்பவத்தில் காயமடைந்த பெண்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க.

களுத்துறை நகரசபையில் நடைபெற்ற 'ஸ்திரி மேளா" என்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

கட்டுநாயக்க சம்பவத்தில் 200 இற்கும் மேற்பட்ட பெண்கள் காயமடைந்துள்ளனர். துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த இளைஞரின் குடும்பத்திற்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைப் போன்று தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த பெண்களுக்கும் நட்டஈடு கொடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஒரு ஜனநாயக நாட்டின் மக்கள் தமது கருத்தை தெரிவிப்பதற்கு உரிமையுள்ளது. அதனைத் தடுக்க முயல்வது ஜனநாயக விரோத செயலாகும். கட்டுநாயக்க சம்பவம் மிகவும் மிலேச்சத்தனமானது. இதற்கு நீதி கிடைக்க வேண்டும் - என்றார். (ச)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ்மொழிப் பயிற்சி

கொழும்பு,ஜூன்10

தேசிய நல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் அமுல்படுத்துகை அமைச்சின் ஏற்பாட்டில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் தமிழ் மொழிப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இந்த உறுப்பினர்களுக்கான தமிழ் மொழிப்பயிற்சியின் கால எல்லை ஆறுமாதங்களாகும். இந்தப் பயிற்சி நாடாளுமன்ற அமர்வு நடைபெறும் நாள்களில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி எதிர்வரும் பத்தாம் திகதி முதல் குழுவினருக்கு ஆரம்பமாகவுள்ளது. சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தமிழ் மொழி வகுப்புகளை ஆரம்பித்து வைக்கவுள்ளனர். (ச)

# 184 தமிழ் பட்டதாரிகளுக்கு இன்று ஆசிரியர் நியமனம்

கொழும்பு,ஜூன்10

தமிழ் மொழி மூலமான மேல் மாகாண பட்டதாரி முதல் தொகுதி ஆசிரியர் நியமனம் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் வழங்கப்படும்.

இந்த நியமனங்களுக்காக விண்ணப்பித்தோருக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டிருப்பின் அவர்கள் உடனடியாக மேல்மாகாணசபை உறுப்பினர் கலாநிதி நல்லையா குமரகுருபரனை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கொழும்பு கல்வி வலயத்திற்கு வெளியே அமைந்துள்ள வெற்றிடங்களுக்கு முதல் தொகுதியாக 184 நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தீர்வுக்காக அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்

## இப்படிக் கூறுகிறார் சந்திரகுமார் எம்.பி.

கொழும்பு,ஜூன்10

இப்போது போர் முடிவடைந்ததால், அமைதிச் சூழல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. முன்னரை விடவும் சுதந்திரமாகச் சிந்திக்கக்கூடிய - சுதந்திரமாகச் செயற்படக்கூடிய ஒரு நிலை இன்று உருவாகியுள்ளது.

தமிழரசுக்கட்சியினர் கூட யாருக்கும் பயமின்றி இப்பொழுது சுதந்திரமாகக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

அவசரகாலச் சட்டம் நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இந்த அமைதிச் சூழலை - இந்த ஜனநாயகச் சூழலை மேலும் வளர்த்தெடுத்து, அதை நிரந்தரமாக்குவதே இன்று எங்கள் முன்னேயுள்ள முக்கிய பணியாகும். இதை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இன்று வடபகுதியில் பல முன்னேற்றகரமான விடயங்கள் ஏற்பட்டுள்ளன.

வடக்கிலே எண்பது வீதமான பகுதிகளில் மீள் குடியேற்றம் நடைபெற்றுள்ளது. பலரும் நம்பவே மறுத்த வலி வடக்குப் பகுதியில் மக்கள் மீளக் குடியேறியிருப்பது முக்கியமானது.

ஆனால், மிஞ்சிய இருபது வீதமான பகுதிகளைச் சேர்ந்த மக்கள் எப்பொழுது தங்கள் ஊர்களுக்குச் செல்லப் போகிறோம் என்ற ஏக்கத்தோடு இருக்கிறார்கள்.

குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவு மக்களின் மீள்குடியேற்றத்தை இங்கே நான் வலியுறுத்துகிறேன்.

அபிவிருத்திக்காகவும் அமைதிக்காகவும் அரசியற் தீர்வுக்காகவும் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்கும் போது, நிச்சயமாக நமக்கு அச்சுறுத்தல் காரணிகளும் இல்லாமற்போய் விடும்.

அப்போது அவசரகாலச் சட்டத்துக்கோ, இந்தச் சட்டத்தை நீடிப்பதற்கோ இடமேயிருக்காது. அதைவிடுத்து வெறும் வாய்ப்பேச்சுப் பேசுவதால் எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை.

மக்களைத் தவறாக வழிநடத்துவதால் மீண்டும் இந்த நாட்டிலே அமைதியின்மையைத்தான் உருவாக்க முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாவதற்காக சிலர் அரசியல் செய்கிறார்கள்.

மக்களுடைய நலன்களுக்காகவும் அவர்களுடைய உறுதியான எதிர் காலத்துக்காகவுமே இவர்கள் அரசியற் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (எ)

# குரங்குத் தொல்லை அதிகரிப்பு

கொழும்பு,ஜூன் 10

கட்டுகஸ்தோட்டை, கல் ஒலுவ பிரதேசத்தில் அமைந்துள்ள பட்டாசுத் தொழிற்சாலை கடந்த செவ்வாய்க்கிழமை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது என கட்டுகஸ்தோட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இந்தப் பகுதியில் குரங்குகளின் தொல்லை அதிகம். சம்பவதினம் தொழிற்சாலை வளாகத்திற்கு வந்த குரங்குகள் தொழிற்சாலையின் கூரைத் தகடொன்றை பிய்த்து எறிந்துள்ளன.

தகடு தொழிற்சாலைக்குள் இருந்த வெடிமருந்து மீது விழுந்ததாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவசாய நிலங்கள் உவரடையும் ஆபத்து

## பரிசோதனைக்கு விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பயிர்ச் செய்கை நிலங்கள் உவரடைந்து வருவதால் உரிய மண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென விவசாய அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள அதிகமான ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் செய்கை பண்ண முடியாமல் உவரடைந்து காணப்படுகின்றன. இதனால் விளைச்சல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. புதுமுறிப்புக்குளத்தின் கீழ் உள்ள ஒரு பகுதி நிலமும், பரந்தன் தட்டுவன்கொட்டி, உமையாள்புரம் போன்ற பகுதிகளிலுள்ள வயல் நிலங்களும் இவ்வாறு உவரடைந்து காணப்படுவதனால் அதிகளவில் விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கடற்கரையினையும் உவர்நீர் தொடுவைகளையும் கொண்ட பகுதிகளில் உள்ள உவர்நீர்த் தடுப்பணைகள் சேதமடைந்துள்ளமையாலும் உவர் நீர் விவசாய நிலங்களுக்குள் உட்புகுந்துள்ளது. இதனாலும் அதிகளவான நிலப்பரப்பில் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சரியான மண்பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்ட விவசாய ஆராய்ச்சித் திணைக்களம் கிளிநொச்சியில் மண்பரிசோதனைகளை மேற்கொள்ளக் கூடிய வசதிகளில்லையென்றும் மண் பரிசோதனை செய்யக்கூடிய வசதி வாய்ப்புக்கள் ஆறுமாத காலத்துக்குள் ஏற்படுத்தப்படுமென்றும் தெரிவித்தது.

அவசரமாக மண்பரிசோதனை செய்ய விரும்பும் விவசாயிகள் தங்களுடன் தொடர்பு கொண்டால் யாழ்.திருநெல்வேலியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் மண்பரிசோதனைகளை மேற்கொள்ளக் கூடிய ஏற்பாடுகளைச் செய்து தர முடியும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# சுகாதார மேம்பாட்டுக்கு பயனாளிகள் தெரிவு

நாவற்குழி, ஜூன் 10

வட மாகாண விசேட அபிவிருத்தி நிதியின் கீழ் இந்த வருடம் மன்னார்,வவுனியா மாவட்டங்களில் மலசல கூடங்களை அமைக்கும் பணியை வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது. சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் க.சிவகரன் இதற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணியை பிரதேச செயலர் ஊடாக மேற்கொண்டுள்ளார்.

பிரதேச செயலகப் பிரிவுகளில் பணியாற்றும் சமூக சேவை அதிகாரிகள் தகுதி வாய்ந்த பயனாளிகளின் தெரிவில் ஈடுபட்டுள்ளனர். மாற்று வலுவுள்ள குடும்பங்களிலிருந்தும், பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களிலிருந்துமாக ஒரு பிரதேச செயலகப் பிரிவில் 5 வறிய குடும்பங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன. தலா ஒரு லட்சம் ரூபா நிதி பயனாளிகளின் கட்டுமான வேலைக்கேற்ப பகுதி பகுதியாக வழங்கப்படவுள்ளது. சென்ற 2010 ஆம் ஆண்டும் இத்திட்டம் யாழ் மாவட்டத்தில் வெற்றிகரமாக நடமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க 121)

# வீதியில் குண்டு குழிகள் வீண் சிரமம் மக்களுக்கு

கிளிநொச்சி, ஜூன் 10

பரந்தன் சந்தியில் முல்லைத் தீவு வீதியை நோக்கித் திரும்பும் இடத்தில் உள்ள குண்டு குழிகளினால் வீதியால் பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியால் வந்து பரந்தன் சந்தியில் இருந்து முல்லைத் தீவு வீதிக்குத் திரும்பும் இடத்தில் வீதிக்கு நடுவில் உள்ள குழிகளினால் சைக்கிள், உந்துருளி, போன்ற வாகனங்களில் வருவோர் முல்லை வீதிக்குத் தமது வாகனங்களைத் திருப்பும்போது பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். இந்தக் குழிகளினால் பரந்தன் சந்தியில் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் பாதசாரிகள் கூறுகின்றார்கள்.

அத்துடன் முல்லைத்தீவு வீதி பெருஞ்சேதங்களுடன் காணப்படுகின்றது. இந்த வீதி திருத்தப்படாது குண்டு குழிகளைக் கொண்ட தார் இல்லாத வெறும் கிரவல் புழுதி கிளப்புகின்ற மண் வீதியாகவே காணப்படுகின்றது. இதனூடாக பயணிப்போர் பெரும் துன்பங்களை எதிர்கொள்கின்றார்கள்.

மேற்படி வீதியின் குழிகளை மூடிப் பிரதான வீதியையும் முழுமையாகத் திருத்தி உதவ உரியவர்கள் முன்வர வேண்டும் என்று பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-426)

# வேலங்குளம் கிராம மக்களின் கோரிக்கை

வவுனியா, ஜூன்10

வவுனியா வேலங்குளம் கிராமத்தில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றித் தருமாறு வேலங்குளம் சமூக அபிவிருத்தி அமைப்புகளின் ஒன்றியத்தின் திட்ட அமைப்பாளர் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரிக்கு கடிதம் மூலம் அறிவித்ததன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் 40 குடும்பங்கள் தற்போது மீளக்குடியமர்ந்துள்ளன. இந்தக் குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகள், பொதுக் கிணறுகள், மலசல கூடங்கள், குழாய்க்கிணறுகள் என்பன அமைக்கப்படவேண்டிய தேவையுள்ளது. எனவே இவை தொடர்பாக இந்த மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமானவை. குறிப்பாக மலசலகூடப் பாவனை, குடிதண்ணீர்பாவனை,தொற்று நோய் ஏற்படாது பாதுகாக்கும் வழிமுறைகள் தொடர்பாக அப்பகுதியைச்சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் சேவையை பெற்றுத்தருமாறு கோரியே சுகாதார வைத்திய அதிகாரிக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கிராமசேவையாளரின் உதவியுடன் மீளக்குடியமர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை ஆராய்ந்ததுடன் சிறுவர்களின் போசாக்கு, தொற்று நோய்களை தடுப்பதற்கான செயற்றிட்டங்கள்தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-501)

## மீட்சி கிடைக்காதா..?



கோரத்தின் ஒரு பதிவு: மக்கள் இன்னமும் மீள் குடியமராத புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள வீடொன்று யுத்தத்தின் அழிவுகளைத் தாங்கியவாறு காட்சியளிக்கிறது.

# கண்டாவளை கிராமிய ஆஸ்பத்திரி கால்நடைகளின் உறைவிடம்

கிளிநொச்சி, ஜூன்10

கிளிநொச்சி, கண்டாவளை கிராமிய மருத்துவமனை இதுவரை திறக்கப்படாத நிலையில் கால்நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளது.

கிளிநொச்சி, கண்டாவளை கிராம அலுவலர் பிரிவில் இதுவரை 375 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

இக்குடும்பங்கள் மீள் குடியமர்வு செயற்பட்டுத் தற்போது ஒருவருடம் கடந்துள்ளபோதும் கண்டாவளைக்கிராமிய மருத்துவமனை இதுவரை இயங்க வைக்கப்படவில்லை. மேலும் மருத்துவமனை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளபோதிலும் இதுவரை திறக்கப்படாத நிலையில் கால்நடைகளின் உறைவிடமாகக் காணப்படுகின்றது.

இதனால் இப்பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 375 குடும்பங்களைச் சேர்ந்த 1500 இற்கும் மேற்பட்ட மக்கள் தமக்கு தேவையான மருத்துவத் தேவை களைப் பூர்த்திசெய்ய முடியாமல் சிர மங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இதில் கவனமெடுத்து இந்த மருத்துவமனையினை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தமது மருத்துவத் தேவைகளைப் பூர்த்திசெய்து தரவேண்டுமெனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# மண்ணித்தலைக் கிராமம் நீரில் மூழ்கும் அபாயம்

பூநகரி, ஜூன்10

கடலரிப்புக் காரணமாக பூநகரி மண்ணித்தலைக் கிராமம் நீரில் மூழ்கும் அபாயநிலை தோன்றியுள்ளதாக இந்தக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட இந்தக் கிராமத்தின் கடற்கரையில் காணப்படும் பாறைகள் தொடர்ந்து ஏற்பட்டு வரும் கடலரிப்பால் அழிவடைந்து வருகின்றன. இதனால் எதிர்காலத்தில் இந்தக் கிராமமே நீரில் மூழ்கி அழியும் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிய வருகின்றது. பூநகரியின் தொன்மை வாய்ந்த கிராமங்களில் மண்ணித்தலை சிறப்பு வாய்ந்தது. இங்கு சிறப்பு வாய்ந்த சிவன் ஆலயம் ஒன்றும் உள்ளது. அத்துடன் கிறிஸ்தவர்களின் தேவாலயம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இயற்கை எழில் கொஞ்சும் இந்தக் கிராமம் அமைதியான சூழலில் அமைந்துள்ளதால் போருக்கு முந்திய காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மற்றும் அயல் இடங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து செல்வதுண்டு. இத்தகைய சிறப்பு வாய்ந்த கிராமத்தை அழிவிலிருந்து காக்க வேண்டியது பொறுப்பானவர்களின் முக்கிய கடமையாகுமென இந்தக் கிராம மக்களின் கோரிக்கை விடுத்துள்ளனர் (க-406 )

# 68 குடும்பங்களுக்கு நிதியுதவி

நாவற்குழி, ஜூன் 10

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் இந்த வருடத்தின் முதல் 5 மாதங்களுக்குள் வன்னிப் பெரு நிலப்பரப்பில் வீடுகள் சேதமுற்ற 68 மிக வறிய குடும்பங்களுக்கு வீடுகள் புனரமைப்பதற்கான நிதியினை வழங்கியுள்ளது.

எதிர்பாராத தீ விபத்து, கடும் மழை, கடுங்காற்று, யானைத் தாக்குதல் போன்ற காரணங்களால் வீடுகள் பாதிக்கப்பட்டோருக்கு இந்த விதம் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளன.

வீட்டின் சேதத்தைப் [illegible] உயர்ந்த தொகை [illegible] 20 ஆயிரம் ரூபாவை இரு கட்டங்களாக தலா 10ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுகின்றன. முதற் கட்ட நிதியில் வீடுகளின் திருத்த வேலைகளை சமூக சேவைகள் அதிகாரிகள் பிரதேச செயலர் ஊடாகக் கண்காணித்த பின் இரண்டாம் கட்ட [illegible] பணவை வழங்குகின்றனர். (க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வளப் பாவனைக்கு ஏற்ப கிளிநொச்சியில் அபிவிருத்தி இல்லை

## கிளிநொச்சி புத்தி ஜீவிகள்

கிளிநொச்சி, ஜூன் 10

கிளிநொச்சியில் உள்ள இயற்கை வளங்கள் அழிப்புக்களுக்கு ஏற்ப மாவட்டத்தின் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவில்லையென புத்திஜீவிகள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்குரிய கட்டுமானப் பணிகள் மந்தகதியிலேயே காணப்படுகின்றன. எந்தக் கட்டுமானப் பணிகளை எடுத்துக் கொண்டாலும் மணலைப் பெறுவதில் சிரமம், கிரவலைப் பெறுவதில் சிரமம், மரம் கிடைப்பதில்லை என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

குறிப்பாகக் கூடுதலான மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. ஆனால் இந்த மாவட்டத்தில் உள்ள மக்கள் மணலைப் பெற முடியாமல் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இதைவிட மாவட்டத்தின் வீதிப் புனரமைப்புக்கள் தாமதமடைகின்றன. கிரவலைப் பெற முடிவதில்லையென ஒப்பந்தகாரர்கள் கூறுகின்றனர். ஆனால் பெரும் தொகையில் கிரவல் அகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மரங்கள் தறிக்கப்படுகின்றன. ஆனால் இவற்றுக்கும் தட்டுப்பாடு. இவ்வாறு மாவட்டத்தின் இயற்கை வளங்களும் சுற்றுச்சூழல் வளங்களும் என்றும் இல்லாதவாறு அழிக்கப்படுகின்றன.

ஆனால் இதற்கு ஏற்றமாதிரி அபிவிருத்திப் பணிகள் நடைபெறவில்லை. மணலைப்பெறுவது சிரமம், கிரவலைப் பெறுவது சிரமம், மரத்தைப் பெறுவது கடினம் எனச்சுட்டிக்காட்டப்படுகின்றது. அத்துடன் இங்குள்ள வளங்கள் வேறு இடங்களுக்கு வியாபாரப் பொருள்களாக விற்பனை செய்யப்படுவதாகவும் புத்திஜீவிகள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# கூரைத் தகரம் வெட்டியதால் காயமடைந்தவர் மருத்துவமனையில்

கிளிநொச்சி, ஜூன் 10

வீட்டுக் கூரைத்தகரம் தலையில் பலமாக வெட்டியதால் பரந்தனைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் இரத்தம் சிந்திய நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை பரந்தனில் நிகழ்ந்துள்ளது. பரந்தன் முல்லைத்தீவு வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையாகிய எஸ்.சந்திரகுமார் என்பவரே இவ்வாறு காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

அவரது வீட்டுக் கூரையில் பொருத்தப்பட்டிருந்த கூரைத் தகரம் காற்றினால் தூக்கி வீசப்பட்டு இவரது தலையில் பலமாக வெட்டியதால் கடுமையான இரத்தப் பெருக்கு ஏற்பட்டு மயக்கமுற்ற நிலையில் இவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தற்போது வீசும் கடுங்காற்றினால் தகரம், தரப்பாள் ஆகியவற்றால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டகைகள் பெருஞ்சேதங்களுக்குள்ளாகி வருகின்றன. இதில் வசிக்கும் மக்களின் நிலை மிக மோசமாக உள்ளது.

ஆகவே இனிமேலும் தங்களைத் துன்பத்தில் ஆழ்த்தாது தமக்கும் அரசின் வீட்டுத்திட்டத்தை வழங்கியுதவுமாறு பாதிக்கப்பட்ட இந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# வீதியைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

பரந்தன், ஜூன் 10

பரந்தன் -முல்லைத்தீவு வீதியின் 11 ஆவது ஒழுங்கையைப் புனரமைக்குமாறு இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வீதியின் 11 ஆவது ஒழுங்கைக்கு அருகில் 50 மீற்றர் தூரத்துக்குச் சீமெந்துக் காப்பெற் இடப்பட்டுள்ளது. ஏனைய பகுதிகள் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் போக்குவரத்தை மேற்கொள்வதில் இப்பகுதி மக்கள் அதிக சிக்கல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இப்பகுதியிலுள்ள அதிகளவு மக்கள் இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் இது குன்றும் குழியுமாக மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது. மழை காலங்களில் வீதியிலுள்ள குழிகளுக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதால் நிலைமை மேலும் சேதமடைந்து காணப்படும். இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதநிலை காணப்படுகின்றது.

இந்த வீதியைக் கிரவல் போட்டாவது முழுமையாகப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரியுள்ளனர்.

(க-436)

## ஏழைகளுக்கு இல்லிடம்....



உதவும் கரங்கள்: பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கங்களின் வறிய அங்கத்தவர்களுக்கான வீட்டுத்திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான் வித்தியாபுரத்தில் திருமதி வளர்மதி தவஞானத்தின் வீட்டுக்கான அடிக்கல்லை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.தவராசா நட்டு வைக்கின்றார்.

# வன்னியில் வீசும் கடுங்காற்றினால் குடிசைகள் சேதமடைகின்றன

வன்னியில் தற்போது வீசும் கடுங்காற்றினால் தகரம், தரப்பாள் ஆகியவற்றினால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக குடிசைகள் பெருஞ்சேதத்துக்கு உள்ளாகிவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் வீட்டுத்திட்டம் கிடைக்காத நிலையில் தற்காலிக குடிசைகளை தகரம், தரப்பாள் கொண்டு அமைத்து இருந்தனர்.

கடுங்காற்றினால் குடிசைகளின் தகரம், தரப்பாள் தூக்கி வீசப்படுவதால் பலர் காயங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

பரந்தனைச் சேர்ந்த குடும்பஸ்தரான எஸ்.சந்திரகுமார் கூரைத் தகரம் தலையில் வெட்டிய நிலையில் கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. வீட்டுக் கூரையில் பொருத்தப்பட்டிருந்த தகரமே காற்றினால் தூக்கி வீசப்பட்டு இவரது தலையில் பலமாக வெட்டியுள்ளது.

# நூலக வசதி இல்லாமையால் அக்கராயன் மாணவர்கள் பாதிப்பு

அக்கராயன், ஜூன் 10

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் நூலக வசதி இல்லாமையினால் மக்கள், மாணவர்கள் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அக்கராயன் பிரதேசத்தில் 2 ஆயிரம் வரையான மாணவர்கள் உள்ளபோதிலும் நூலகவசதி இல்லாமையினால் தமது தேடல், வாசிப்பு அறிவினை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்தனர்.

1996ஆம் ஆண்டு கிளிநொச்சி இடப்பெயர்வுடன் அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளில் கரைச்சி பிரதேச சபையின் நூலகங்கள் இயங்கின.

போர், இடப்பெயர்வுகளின் பின்னர் மக்கள் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட பின்னர் நூலக வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

பொருளாதார அவிபிருத்தி அமைச்சின் கீழான மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் அக்கராயன் ஸ்கந்தபுரம் பகுதிகளில் நூலகங்களை உருவாக்க வேண்டும் என்பதே மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வேண்டுகையாக உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

(எ-410)

# பதவி மாற்றம்

மன்னார், ஜூன் 10

வவுனியா ரெலிகொம் நிறுவனத்தில் தொழில்நுட்ப அதிகாரி மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களாகக் கடமையாற்றிய நால்வர் திடீர்பதவி மாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

# நோயாளர்கள் தொகை அதிகரிப்பு

அக்கராயன், ஜூன் 10

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் நோயாளர்கள் தொகை அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அக்கராயன் பிரதேச மருத்துவமனை கடந்த மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் இயங்காமல் இருப்பதன் காரணமாகவே அங்குள்ள நோயாளர்களும் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

அக்கராயன் பிரதேசத்தில் அக்கராயன், வன்னேரிக்குளம் ஆகிய இரு மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் பணியில் இல்லாமையினாலேயே இந்தநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

நீண்ட தூரம் பயணம் செய்து கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு அக்கராயன் பிரதேச நோயாளர்கள் செல்ல வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# மீனவருக்கு கடன் உதவி

மன்னார், ஜூன் 10

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் மன்னார் மாவட்டத்தில் மீனவருக்குக் கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாக மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் பி.எஸ்.மிரண்டா தெரிவித்துள்ளார்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் நலன் கருதி கடற்றொழில் உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2 இலட்சம் ரூபாவும் அதற்கு உட்பட்ட தொகையும் வங்கிகளூடாகக் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பணத்தை மூன்று தொடக்கம் நான்கு வருடங்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-601)

# கணினிக் கல்லூரி ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூன் 10

கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் கணினிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜி.சீ.ஈ உயர்தரக் கல்வியை மேற்கொண்டு மேலதிக கணினி அறிவைப் பெற விரும்புபவர்கள் உடன் சுயவிவரங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி-முல்லைத்தீவு பிராந்திய ஆணையாளரும் மகாதேவா சைவச்சிறார் இல்லத்தலைவருமான தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இந்த மாவட்டத்தில் போருக்குப் பின்னர் படித்த இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி வேலையற்றோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான வேலையற்றவர்களுக்கு கணினிக் கல்வியை முழுமையாக வழங்க எண்ணியுள்ளோம். அதன் முதற்கட்டமாக ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கல்வி பயின்ற மாணவர்களுக்கு டிப்ளோமா கற்கை நெறி வழங்கப்படவுள்ளது.

எனவே, கிளிநொச்சி மாவட்டத்தில் வேலையை எதிர்பார்த்து இருக்கும் இளைஞர்கள் தமது சுயவிவரக் கோவையுடனும் கிராம அலுவலரின் சிபார்சு பெற்ற சான்றிதழுடனும் விண்ணப்பங்களை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் மகாதேவா சைவச்சிறார் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். முதலாவது பிரிவில் 50 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-362)

# குடி தண்ணீர் வழங்க ஏற்பாடு

அக்கராயன், ஜூன் 10

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அக்கராயனில் மிகவும் உயர்ந்த நிலப்பகுதியில் பாடசாலை அமைந்துள்ளதால் திறந்த கிணற்றின் மூலமான குடி தண்ணீர் மாணவர்களின் தேவைக்குப் போதுமானதாக இல்லாததால் வரட்சிக் காலங்களில் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த நிலையிலேயே பாடசாலைக்கருகில் உள்ள காணியொன்றில் இருந்து குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்குவதற்கான செயற்பாட்டில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அக்கராயன் மகா வித்தியாலத்தில் தற்போது 800 வரையான மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். குழாய் மூலம் மாணவர்களுக்குக் குடி தண்ணீர் கிடைக்கும் போது மாணவர்கள் நன்மையடைவார்கள் என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

எ-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொக்கியாவுடன் இணையும் மைக்ரோசொப்ற்




மென்பொருள் உலகின் ஜாம்பவானான மைக்ரோசொப்ற் நிறுவனம், கைத் தொலைபேசித் தயாரிப்பில் முடிசூடா மன்னனாக விளங்கும் நொக்கியா நிறுவனத்துடன் இணைகிறது.

இதுதொடர்பாகப் பத்திரிகையாளர்களை சந்தித்த மைக்ரோசொப்ற் தலைமை நிர்வாக இயக்குனர் ஸ்டீவ் பால்மர் கூறியதாவது: நொக்கியா உடன் இணைந்து பணியாற்றவிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

தற்போதைய அளவில் மென்பொருளுக்கு என்று கைகோர்த்துள்ள நாங்கள் இனிவரும் காலங்களில் வன்பொருள் தயாரிப்பிலும் பணியாற்ற உள்ளோம். இந்த ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் குளோபல் மொபைல் ஈகோசிஸ்டம் உருவாக்கும் பொருட்டு நாங்கள் இருவரும் இணைந்து செயற்படத் திட்டமிட்டோம். நொக்கியா நிறுவனம் இந்தியாவில் முன்னணிக் கைத் தொலைபேசி வர்த்தக நிறுவனமாக உள்ளது. புதிய கைத்தொலைபேசிகளுக்கான மென்பொருள்கள் குறித்த அம்சங்களை தங்கள் நிறுவனம் பார்த்துக் கொள்ள இருப்பதாகவும், மற்ற முக்கிய பணிகளான வன்பொருள்கள் வடிவமைப்பு, மொழி உள்ளிட்டவைகளை நொக்கியா நிறுவனம் மேற்கொள்ள உள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட உள்ள கைத்தொலைபேசியில் தங்கள் நிறுவனத்தின் பங் சர்ச் இஞ்ஜின் இடம்பெறும்படி உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# People Widget
## ஜிமெயிலின் பயனுள்ள வசதி

ஜிமெயில் இன்று உலகின் மூலை முடுக்குகளிலும் உள்ள அனைவராலும் பயன்படுத்தப்படும் ஒரு மின்னஞ்சல் சேவை நிறுவனமாகும்.

இந்த நிறுவனம் வாடிக்கையாளர்களுக்குத் தினம் தினம் புதுப்புது வசதிகளை அறிமுகப்படுத்தி அதன் வாசகர்களை மேலும் அதிகரித்து கொள்கிறது.

இதில் சுயநலம் இருந்தாலும் அதனைப் பயன்படுத்தும் பெரும்பாலானவர்களுக்கும் இந்த வசதி பயன்படுவதால் ஜிமெயில் சேவை பாராட்டுக்குரியதே.

சமீபத்தில்தான் இந்த முறையில் மேலும் ஒரு பயனுள்ள வசதியை எமக்கு அறிமுகப்படுத்தியுள்ளது இந்த ஜிமெயில் நிறுவனம்.

1. இனி உங்களுக்கு வரும் மின்னஞ்சல்களை open செய்தால் அந்த மின்னஞ்சலின் வலது பக்கத்தில் People Widget என்ற புதிய பகுதி இருக்கும்.
2. அதன் வலது பக்கத்தில் பார்த்தால் அனுப்பியவரின் முகத்துடன் சேர்ந்து ஒரு விட்ஜெட் வந்திருக்கும்.
3. முகம் மட்டுமின்றி அவர் கடைசியாக எமக்கு அனுப்பிய மின்னஞ்சல் மற்றும் அவர் கூகுள் பஸ்ஸில் அனுப்பினால் செய்திருந்தால் அதன் இணைப்பு போன்ற விவரங்கள் வரும்.
4. அதில் உள்ள Chat பட்டனை அழுத்தினால் Chat Window open ஆகும். அருகில் உள்ள Email பட்டனை அழுத்தினால் Compose Mail பகுதி வரும். Voice Call பட்டனும் இதில் இருக்கும்.

இந்த வசதிகள் ஏற்கனவே ஜிமெயிலில் இருந்தாலும் ஒவ்வொன்றாகத் தனித்தனி இடங்களில் இருந்த அவை அனைத்தையும் ஒரே இடத்தில் கொடுத்து இருப்பதால் பயன்படுத்துபவர்களுக்கு மிகவும் சுலபமாக இருக்கும்.

இந்த வசதி பல மின்னஞ்சல் முகவரிகளில் இன்னும் வரவில்லை. இரண்டு வாரத்துக்குள் அனைத்து மின்னஞ்சல் முகவரிக்கும் வந்துவிடும் என்று ஜிமெயில் பிளாக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேஸ்புக் நண்பர்களுக்கு பரிசளிக்க உதவும் இணையம்

பேஸ்புக் யுகத்தில் எதையுமே யாரும் தனியே செய்வதில்லை. எல்லாவற்றையும் நண்பர்களோடு சேர்ந்துதான் செய்கின்றனர்.

இப்போது பரிசளிப்பதையும் நண்பர்க ளோடு சேர்ந்தே மேற்கொள்ளலாம். சமூகத்துக்கு அன்பளிப்பு வழங்கும் இணையத்தளம் இதற்கான வசதியை வழங்குகிறது. இந்த தளத்தின் மூலம் பொருத்தமான பரிசுப் பொருளை சுலபமாகத் தேர்வு செய்வதோடு அதற்கான விலையை நண்பர்களோடும் பகிர்ந்து கொள்ளலாம். நிஜ வாழ்க்கையில் பிறந்த நாள் கொண்டாடும் நண்பனுக்கு சக நண்பர்கள் ஒன்று சேர்ந்து ஏதாவது பரிசுப் பொருள் வாங்கிக் கொடுப்பது உண் டல்லவா?அதே போலவே இணையம் மூலம் நண்பர்கள் ஒன்று சேர்ந்து பரிசுப் பொருள் வாங்கிக் கொடுக்க இந்தச் சேவை உதவுகிறது. பரிசளிக்க விரும்பும் நபர் முதலில் பரிசுப் பொருளை தேர்வு செய்து கொள்ள வேண்டும். இதற்கான இணைய கடையும் உள்ளது. மின்னணு சாதனங்கள், கலை பொருள்கள், வாசனைத் திரவியங்கள் என்று பல்வேறு விதமான பரிசு பொருள்களில் இருந்து விருப்பமானதை தேர்வு செய்து கொள்ளலாம்.

தேர்வு செய்த பிறகு இது பற்றிய தகவலை உங்கள் பேஸ்புக் நண்பர்களோடு பகிர்ந்து கொண்டும் அவர்களும் பரிசளிக்க விரும்புகின்றனரா என்று கேட்கலாம். சம்மதம் என்றால் அவர்களும் தங்கள் பங்கிற்கு உரிய தொகையை செலுத்தலாம். இப்படி பரிசுக்கான தொகை சேர்ந்ததுமே குறிப்பிட்ட அந்த நண்பருக்கு பரிசுப் பொருள் அனுப்பி வைக்கப்படும். நண்பர்களின் பிறந்த நாள் போன்ற நிகழ்வுகளின் போது இப்படி கூட்டாகப் பரிசளித்து அசத்தலாம். பேஸ்புக்கில் வெறும் வாழ்த்துச் செய்தி அனுப்புவதைவிட அழகான பரிசுப் பொருளை அனுப்பி வைப்பது சிறந்தது அல்லவா? மேலும் பேஸ்புக் நண்பர்களைடையே பிரபலமாக உள்ள மெய்நிகர் பரிசுகளை வழங்குவதைவிட நிஜப் பரிசை வழங்குவது மேலானது. இந்த சேவைய்யை நிறுவியுள்ள மோ கோவிந்த்ஜி இப்படி பேஸ்புக்கில் அர்த்தம் இல்லா வாழ்த்து அட்டைகளும் பயனில்லா பரிசுகளும் பரிமாறிக் கொள்ளப்படுவதை பார்த்து வெறுத்துப் போய் உண்மையிலேயே மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய பரிசுப் பொருளை வழங்கும் சேவை தேவை என்று உணர்ந்து தனது நண்பர்களோடு சேர்ந்து இந்த தளத்தை தொடக்கியுள்ளார். பேஸ்புக் நண்பர்களைக் கவரக்கூடிய வகையில் சமூகத் தன்மை கொண்ட சேவையாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

இணையத்தள முகவரி http://www.socialgift.com/

# உலகின் பிரபல்யமான வீடியோக்களைப் பார்வையிடுவதற்கு




சிறந்த வீடியோக்களை இனித் தேடிக் கண்டுபிடித்துப் பார்க்க வேண்டாம். தினமும் உலக அளவில் மிகவும் பிரபலமான 12 வீடியோக்களை துறை வாரியாக எமக்குக் காட்ட ஒருதளம் உள்ளது. யூடியுபில் இருந்து அனைவராலும் மிகவும் பார்க்கப்பட்ட வீடியோக்களைத் துறை வாரியாகப் பிரித்து எமக்கு காட்டுவதற்காக ஒரு தளம் உள்ளது.

சிறந்த வீடியோக்கள் அனைத்தையும் துறை வாரியாக பட்டியலிட்டு நமக்கு காட்டுவதற்காக இத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. Cool Ads, Fails Funny Videos, Gaming Tech Inspiring, Movie Trailers, Music Videos, OMG, Pets Animals, Sports என்று அனைத்துத் துறைகளிலும் முதல் சிறந்த 12 வீடியோக்களை 12 பக்கங்கள் வீதம் எமக்கு காட்டுகிறது. யூடியுப் தளத்தில் அதிக வாசகர்கள் பார்த்த வீடியோக்களை வரிசைப்படுத்திக் கொடுக்கும் வேலையை இத்தளம் செய்கிறது. உதாரணமாக Movie Trailers என்பதை சொடுக்கி தற்போது வெளிவர இருக்கும் படத்தின் டிரைலரையும் எளிதாகப் பார்க்கலாம்.

Pets and Animals என்பதை சொடுக்கி செல்லப்பிராணிகள் மற்றும் விலங்குகளின் வீடியோவையும் பார்க்கலாம். இதைத்தவிர அன்றைய தினத்தில் யூடியுப் வாசகர்களால் அதிகம் பார்க்கப்பட்ட முதல் 12 வீடியோக்களை இத்தளத்தின் முகப்புப் பக்கத்தில் தினமும் பார்க்கலாம். http://www.12vid.com/

# DAZ Studio 4:3 டி அனிமேஷன் உருவாக்க



மனிதன் இந்த அளவுக்கு கற்பனை செய்யாவிட்டால் கணினி உலகத்தை யாரும் அடைந்திருக்க முடியாது.

அதேபோல் தான் கணினி செயற்பாட்டின் கற்பனை 2டி, 3டி போன்ற அனிமேஷன்கள். அந்த வகையில் தற்போதைய நிலையில் 3டி பயன்பாட்டில் உள்ளது.

3டி வசதியின் மூலமாகக் கற்பனை உலகையே படைத்துவிட முடியும். அந்த அளவுக்கு 3 டியில் வசதி உள்ளது. நாம் அனைவரும் 3டி படங்கள் பார்த்திருக்க வாய்ப்பு இருக்கும். செயற்கையான முறையில் உருவாக்கப்பட்ட திரைப்படங்களாக இருந்தாலும் அவை மிகவும் தத்ரூபமாக இருக்கும்.

இவ்வாறு திரைப்படங்களை உருவாக்க 3 டி மென்பொருள்களின் உதவியால் மட்டுமே முடியும். இதுபோன்று 3ஈ அனிமேஷன்களை உருவாக்க மாயா, 3ds Max போன்று பல்வேறு மென்பொருள்கள் உள்ளன. அதேபோல 3டி அனிமேஷன்களை எளிமையான முறையில் உருவாக்க DAZ Studio என்ற மென்பொருள் பயன்படுகிறது. இந்த மென்பொருள் தற்போது இலவசமாகக் கிடைக்கிறது.

சுட்டியில் குறிப்பிட்ட தளத்திற்கு சென்று add to cart என்னும் பொத்தானை அழுத்தவும். அடுத்ததாகத் தோன்றும் விண்டோவில் subscribe me என்னும் பொத்தானை அழுத்தவும். பின் அந்த கணக்கை இயங்கச் செய்துகொள்ள உங்களுடைய மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு இணைப்பு அனுப்பபடும் அதைப் பயன்படுத்தி கணக்கை உறுதிப்படுத்திகொள்ளவும்.

அடுத்து தோன்றும் விண்டோவில் checkout என்னும் பொத்தானை அழுத்தி உறுதிப்படுத்தவும். பின் உங்களுடைய கணக்கைத் திறந்து தரவிறக்கம் செய்துகொள்ள முடியும். அனுமதிப் பத்திரத்துக்குரிய அனுமதியும் இந்தக் கணக்கிலேயே இருக்கும்.

மென்பொருளை தரவிறக்கம் செய்யும்போது இணைய இணைப்பு அதிவேகமாக இருந்தால் மட்டுமே தரவிறக்கம் செய்ய முடியும். ஏனெனில் மென்பொருளானது 430 எம்.பி அளவுடையது ஆகும்.

இந்த DAZ Studio 4 பற்றி இணையத்தளத்தில் கற்றுத் தருகின்றனர். அதைப் பயன்படுத்தி எளிமையாக இந்த மென்பொருளைப் பயன்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் இடமாற்றப்பட்டமையை எதிர்த்து மாணவர்கள் போராட்டம்

அம்பாறை,ஜூன்10

காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரியிலிருந்து இரு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமையை எதிர்த்து இந்தக் கல்லூரி மாணவர்கள் பாடசாலை நுழைவாயிலை மூடி நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கணக்கியல், சித்திரம் ஆகிய பாடங்களைக் கற்பித்து வந்த இந்தப் பாடசாலை ஆசிரியர்களிருவருக்கு கல்முனை வலய உள்ளக இடமாற்றத் திட்டத்தின் கீழ் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரியே மாணவர்கள் ஆர்ப் பாட்டத்திலீடுபட்டனர்.

கல்லூரி நுழைவாயிலை பூட்டு பூட்டி எவரும் உள்நுழைய முடியாதவாறு மாணவர்கள் தடை செய்தனர். கல்லூரி முன்பாகத் திரண்டு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதனால் அதி பர், ஆசிரியர்கள் உள் நுழைய முடி யாது வெளி யில் நிற்க வேண்டிய நிலையுமேற்பட்டது.

இரு ஆசிரியர்களது இடமாற்றம் இரத்துச் செய்யப்படும் வரை போராட்டம் தொடரும்எனபதாகையை கல்லூரியின் நுழைவாயிலில் தொங்கவிட்டிருந்த மாணவர்கள்,



ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்து மாணவர்கள் பாடசாலையின் நுழைவாயிலை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"அநீதியைத்தடுப்போம்", "திட்டமிட்ட சதி வலையில் தமிழ்ப் பாடசாலைகளை வீழ்த்தாதே'', ''அதிபரே இடமாற்றத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடு'', ''மாணவ சமுதாயத்தைச் சீரழிக்காதே'' போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோகஅட்டைகளையும் ஏந்திக் கோஷமாகவும் எழுப்பினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அறிந்ததும் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. தௌபீக் பாடசாலைக்குச் சென்று அதிபர், மாணவர்கள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுடன் பேச்சு நடத்தினார்.

இந்தக் கல்லூரியிலிருந்து இரு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டாலும் புதிதாக ஐந்து ஆசிரியர்கள் இந்தக் கல்லூரிக்கு வழங்கப்படுவதாகச் சுட்டிக் காட்டினார்.

முறைகேடான வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தால் தாம் உடன் தீர்வு வழங்குவார் எனவும் உறுதியளித்தார். வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதி மொழியை ஏற்றுக்கொண்ட மாணவர்கள் போராட் டத்தை முடித்துக் கொண்டனர். (ச-30)

# நுவரெலியா அரச நிகழ்வுகளில் தமிழ்மொழிக்கு மதிப்பு வேண்டும்

## மக்கள் வலியுறுத்து

நுவரெலியா, ஜூன்10

நுவரெலியா மாவட்டத்தில் அரசால் நடத்தப்படுகின்ற செயலமர்வுகள் மற்றும் தேசிய நிகழ்வுகளில் தமிழ்மொழிக்கு உரிய மதிப்பு வழங்கப் பட்டு, தமிழ் மக்களின் அரசி யல் பிரதிநிதிகளுக்கும் உரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும் - என நுவரெலியா மாவட்டத் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசிய போஷாக்குத் தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சினாலும் ஜனாதிபதி செயலகத்தினாலும் கடந்த வாரம் நுவரெலியாவில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் தமிழ் மொழிக்கும், தமிழ் பிரதிநிதிகளுக்கும் உரிய இடம் வழங்கப்படாத காரணத்தினால் இந்த நிகழ்வில் பங்கேற்க வந்த தமிழ்ப் பிரதிநிதிகள் வெளிநடப்பு செய்தனர்.

இந்த நிகழ்வு நுவரெலியா மாவட்டத்தைப் பொறுத்த வரையில் முக்கியமானதாகும். நிறை குறைந்த குழந்தைகளின் பிறப்பு மற்றும் போஷாக்கு குறைபாட்டு வீதம் நுவரெலியா மாவட்டத்தி லேயே அதிகமாகவுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டே தேசிய போஷாக்குத் தின தேசிய நிகழ்வு நுவரெலியாவில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இடம் பெற்ற விளக்கவுரைகள், கையேடுகள் தொடர்பாக தமிழ்மொழியில் விளக்கமளிக்கப்படவில்லை. இவ்வாறு தேசிய நிகழ்வொன்றில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டமை தொடர்பில் உரிய தரப்புகள் ஆராய்ந்து நடவ டிக்கை எடுக்க வேண்டுமென நுவரெலியா மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# கல்வி அபிவிருத்திக்கு கிழக்கு மாகாண அமைச்சு நடவடிக்கை

மட்டக்களப்பு,ஜூன்10

கிழக்கு மாகாணத்தில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கும், ஜி.சீ.ஈ. சாதாரணதர, உயர்தர பரீட்சைகளுக்கும் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரித்து, சிறந்த பெறு பேறுகளை ஈட்டுவதற்கான வேலைத் திட்ட மொன்றை முன்னெடுத்துச் செல்ல கிழக்கு மாகாண கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தை கோட்ட, வலய மட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதற்காக கோட்டக்கல்விப் பணிப் பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பை தான் பெறவுள்ளார் என கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரி யர்கள், மாணவர்களின் கல்வித் திறமைகளை அடையாளம் கண்டு, அவர்க ளுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்குமா றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச)

# தண்ணீருக்கும் காத்திருப்பு...



மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது நிலவிவரும் கடும் வறட்சியின் காரணமாக நீர்நிலைகள் வற்றியுள்ளன. இதனால் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் புதூர் கிராம மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு குழாய் நீருக்காக காத்து நிற்கின்றனர். (21)

# கெட்டுப்போன உணவுகளை விற்ற 22 உணவகங்கள் மீது வழக்கு

பண்டாரவளை, ஜூன் 10

பண்டாரவளையில் ஹோட்டல்கள், சிற்றுண்டிசாலைகள், பேக்கரிகள் என்பன நகரசபை சுகாதார திணைக்கள அதிகாரிகளால் திடீர்சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அப்போது பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்ததாக 22 ஹோட்டல், பேக்கரி உரிமை யாளர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பண்டாரவளை நகரசபை பிரதான சுகாதார பரிசோதகர் டீ.எம்.ஏ.ஆர். திஸாநாயக்க, கே.எம்.கபில சென விரத்ன ஆகியோர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் பின்பே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த திடீர்ச் சோதனையில் பண்டார வளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுசன சுகாதாரப் பரிசோதகர் டபிள்யூ.எம்.டி.சமரசேகர, தியத்தலாவை பொதுசன சுகாதார பரிசோதகர் கெமுனுசாலிய பெரேரா ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச)

# காசல்ரீ நீர்த்தேக்கத்தில் கழிவு எண்ணெய் கலப்பு

கண்டி,ஜூன்10

ஹற்றன் ,டிக்கோயா பிரதேசத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலை ஒன்றிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு எண்ணெய் காசல்ரீ நீர்த்தேக்கத்தில் கலந்துள்ளதால் இந்த நீரைப்பயன்படுத்துகின்றவர்கள் பெரும் பாதிப்புகளை எதிர் கொண்டுள்ளனர்.

இந்த நீரில் வாழும் உயிரினங்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இந்தத் தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து சுமார் 3000 லீற்றர் கழிவு எண்ணெய் காசல்ரீ நீர்த்தேக்கத்தில் கலந்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக நுவரெலியா மாவட்ட செயலாளர், சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையினர் ஆகியோருக்கு அறிவித்துள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.(ச)

# கல்முனை வீதிகளுக்கு முக்கியஸ்தர் பெயர்கள்

அம்பாறை, ஜூன் 10

கல்முனை மாநகர சபைப் பிரிவுக்கு உட்பட்ட தமிழ் பிரதேசங்களைச் சேர்ந்த மூன்று குறுக்கு வீதிகளுக்கு பிரமுகர்கள் மூவரது பெயர்கள் சூட்டப்படவுள்ளன. கல்முனை மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவர் ஹென்ரி மகேந்திரன் இந்தப்பெயர் சூட்டலுக்கான பிரேரணையை, கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாநகர சபையின் மாதாந்த செயலமர்வில் முன்மொழிந்தார்

எதிர்கட்சித் தலைவர் ஹென்ரி மகேந்திரனால் முன்மொழியப்பட்ட இந்தப் பிரேரணையை தமிழரசுக் கட்சி உறுப்பினர் ரீ.சந்திரகுமார் வழிமொழிந்ததைத் தொடர்ந்து சபையில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. (ச-30)

# மட்டக்களப்பு சிறையில் கைப்பணி நிலையம்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கைப்பணிப் பயிற்சி நிலையம் ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அந்த நிலையத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், பனை அபி விருத்திச் சபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (த-14-21)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு போதாது

நுவரெலியா,ஜூன்10

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பானது நாட்டில் ஏனைய துறையினர் நாளொன்றுக்கு பெறும் அடிப்படை ஊதியத்தை விடக் குறைவானது என மலையக மக்களின் மேம்பாட்டுக்காக கண்டியிலிருந்து செயல்படும் சமூக அபி விருத்தி நிறுவகத்தின் இயக்குநர் பி.முத்துலிங்கம் தெரிவித்தார்.

அரசியல்சாராத தொழிற் சங்க அமைப்புகளும் மலையகத்தில் வலுபெற்றால்தான் பெருந்தோட்டத் தொழிலாளர்களால் எதிர்வரும் காலத்தில் தமது ஊதிய உயர்வு தொடர்பான பேச்சுகளை காத்திரமாக முன்னெடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# மாகாண சபை கிளை அலுவலகங்கள் கேகாலை மாவட்டத்தில் திறந்துவைப்பு

கேகாலை மாவட்டத்தில் மாகாண சபையின் ஏழு கிளை அலுவலகங்களைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணசபையின் சேவைகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்கில் இந்தக் கிளை அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. நிதி,கல்வி, கூட்டுறவு உட்பட 19 துறைகளை தன்வசம் வைத்துள்ள சப்ரகமுவ மாகாணசபை, இதுவரை இரத்தினபுரி பிரதான அலுவலகத்தின் மூலமாகவும் கேகாலை உப அலுவலகத்தின் மூலமாகவும் செயற்பட்டு வந்துள்ளது. (ச-5)

# அமைச்சர் ஜோன் செனவிரட்ன மட்டக்களப்பு வருகை

மட்டக்களப்பு,ஜூன்10

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பயணிக்கவுள்ளதாக மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்தார். எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் அமைச்சர் செல்லவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
எடுத்த காரியத்தை இழுபறிக்குப் பின்னர் முடிப்பீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் பணிபுரியலாம். புதிய ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். கடந்த காலத்தில் உதவிய ஒருவரைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். தூக்கமின்மையால் அவதிப்படலாம். சிலரைப் பற்றிய ரகசியங்களை அறிந்து கொள்வீர்கள்.

**இடபம்:**
சிறிய விடயங்களில் கூட கவனமாகச் செயற்படுவீர்கள். சக ஊழியர்களின் விமர்சனங்களை எதிர்கொள்ளலாம். உறவினர்கள் வகையில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அரசு தொடர்பான காரியங்கள் அலைச்சலை தரலாம். பெருமைக்காக சில செலவுகளைச் செய்து விட்டு பின்னர் மனவருத்தம் அடைவீர்கள்.

**மிதுனம்:**
ஓய்வு, உறக்கம் இன்றி நெடுநேரம் வேலைகளைச் செய்யலாம். குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். விவசாயிகள் விளை பொருள்கள் விற்பனையால் லாபம் பெறுவர். உங்களின் பிரச்சினை ஒன்றை மற்றவர்களிடம் சொல்லி உதவி கேட்பீர்கள். உங்களுக்குப் பிடித்தமான பொருள்களை சிலர் கொடுக்கலாம். பரிசு, பாராட்டுப் பெறலாம்.

**கடகம்:**
வெளியூரில் வசிக்கும் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல், அதை நீங்களே செய்ய நேரிடலாம். நினைத்தது நடக்க வேண்டும் என செய்த பிரார்த்தனை பலிக்கும். வருமானத்தை அதிகரிக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். சிலரிடம் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள்.

**சிங்கம்:**
செய்யும் தொழிலே தெய்வம் என நினைத்து செயற்படும் நாள். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்டு சில விடயங்களில் முடிவு எடுப்பீர்கள். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். ஆபத்தான பொருள்களை கவனமாகக் கையாளவும்.

**கன்னி:**
நம்பிக்கையுடன் இருந்த ஒரு விடயம் கைவிட்டுப் போகலாம். மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நல்லது. நீண்ட நாள்களாக உங்களுடன் இருந்த ஒருவர் உங்களை விட்டு பிரிய நேரிடலாம். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். பணவரவுகள் கிடைப்பது போல இருந்தாலும், அது உடனே கிடைக்காமல் தடைப்படலாம்.

**துலாம்:**
நண்பர்கள் சிலர் உங்களுக்கு உருப்படியான சில யோசனைகளைக் கூறலாம். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். விருப்பமான உணவைச் சாப்பிடுவீர்கள்.

**விருச்சிகம்:**
அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிவுக்கு கொண்டு வருவீர்கள். உறவினர்கள் சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உதிரி வரவுகளைப் பெறலாம்.

**தனுசு:**
வீண் பழிகள் விலகி பாராட்டுப் பெறுவீர்கள். நண்பர்கள் சிலர் தங்களின் ரகசியங்களை உங்களிடம் சொல்லலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். நடக்குமோ, நடக்காதோ என சந்தேகத்தில் இருந்த ஒரு காரியம் நல்ல விதமாக நடக்கலாம். கலகலப்பான அனுபவம் உண்டு.

**மகரம்:**
வீண் விவாதங்களை, பரிகாசப் பேச்சை குறைக்க வேண்டிய நாள். சில விடயங்களில் உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்காமல் போகலாம். சிலர் கேட்ட உதவியைச் செய்ய முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். பிள்ளைகள் விடயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து, அவர்களின் கோபத்திற்கு ஆள்படுவீர்கள். தண்டச் செலவு நேரும்.

**கும்பம்:**
ஆடம்பர, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். கலைஞர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். மனதை குடைந்து கொண்டிருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவர், உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசலாம்.

**மீனம்:**
தைரியம், தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். பெண்கள் குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டும். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான பலன் கிடைக்கலாம். உறவு வலுப்பெறும்.

# மேற்குல ... ஒதுக்கு ... இலங்கை ... ராஜதந்...



விடுதலைப் புலிகளோ அல்லது தமிழ்த் தேசியவாதமோ மீண்டும் தலைதூக்காமல் பார்த்துக்கொள்வது தான் தற்போதைக்கு இலங்கையின் பிரதான வெளியுறவுக் கொள்கை. அதில் தண்டிக்கும் போக்கில் செயற்படும் மேற்குலகை ஒதுக்கும் ராஜதந்திரத்தையும் பதிலாகச் சீன சார்புக் கொள்கையையும் அது கடைப்பிடிக்கிறது என்று எழுதியுள்ளார் இவ்வாறு யுரேசியா இணையத் தளத்தில் ஜே.ஜெகன்நாதன் எழுதியுள்ள ஆய்வில் தெரிவித்துள்ளார். அதன் மொழிபெயர்ப்பு இங்கே தரப்படுகிறது.

அமெரிக்காவும் அதனோடு இணைந்த கூட்டு நாடுகளும் தங்களது வெற்றிதராத இராணுவ நடவடிக்கையினை முடித்துக்கொண்டு ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுவதற்குத் தயாராகும் நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரை இராணுவ ரீதியில் தோற்கடித்து பெருவெற்றியைத் தனதாக்கி இருக்கிறது இலங்கை.

இலங்கை இராணுவத்தினர் கைக்கொண்ட படைத்துறை நுட்பங்கள் மற்றும் வினைத்திறன் கொண்ட தலைமைத்துவம் ஆகியனதான் இந்த வெற்றிக்குப் பெரும்பங்காற்றின. இலங்கை பயன்படுத்திய, அதியுச்ச கவனத்துடன் செதுக்கப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையும் இந்த வெற்றியில் முக்கிய பங்காற்றியது.

கொழும்பின் அரசியல் சாணக்கியம் மற்றும் சாதுரியமான அனைத்துலக ராஜதந்திரம் என்பன புலிகளை இல்லாதொழிப்பதில் காத்திரமான பங்கினை வகித்திருக்கின்றன.

எவ்வாறிருப்பினும் போரின் பின்னான காலப் பகுதியில் இலங்கை அரசு போர்க் குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்டது என்று குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகிறது. இந்தப் புறநிலையில் போரின் பின்னான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை எத்தகையது என்பதை அலசுவது முக்கியமானதா?

போர் இடம்பெற்ற வேளையில் விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதே இலங்கை அரசின் ஒரேயொரு இலக்காக இருந்தது. அதனை நோக்கியோ கொழும்பின் நகர்வுகள் அனைத்தும் திட்டமிடப்பட்டன. எனவே சீனாவின் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை போருக்காக இலங்கை அரசு நாடியது. அதே வேளை கொழும்பின் தீவிர படை நடவடிக்கைகளில் குறை கண்டுபிடித்த மேற்கு நாடுகளின் மனித உரிமை ஆர்வலர்களையும்கூட மதிநுட்பத்துடன் அமைதிப்படுத்தியிருந்தது.

விடுதலைப் புலிகளை இல்லாது ஒழிப்பதற்கான போருக்கு இந்தியா உதவியிருந்த போதிலும் தமிழர்களது இனப்பிரச்சினை தொடர்பாகப் புதுடில்லி கொண்டிருந்த அரசியல் வாதத்தினை இலங்கை திறமையுடன் எதிர்கொண்டது எனலாம்.

இலங்கைத் தமிழர்கள் அரச படையினரால் கொடூரமான வகையில் நடத்தப்பட்டனர் எனவும் இந்தியத் தமிழர்களால் வஞ்சிக்கப்பட்டனர் எனவும் அனைத்துலக சமூகத்தினால் வேண்டுமென்றே அனாதைகள் ஆக்கப்பட்டனர் எனவும் உலகம் முழுவதும் பரந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் கருதுகிறார்கள். இத்தகைய எல்லா எதிர்ப்புக்களையும் சமாளித்துப் போரை முன்னெடுப்பதில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை அப்போது மிக வினைத்திறனுடன் இருந்தது.

> **நாடு கடந்த தமிழீழ அரசினை இதுவரை எந்தவொரு நாடும் அங்கீகரிக்காத போதும் அனைத்துலக ரீதியில் பல்வேறுபட்ட தரப்புகளும் இந்தக் கட்டமைப்புக்குத் தங்களது ஆதரவினை வழங்கி நிற்கின்றன. இப்படி ஆதரவு கிடைத்தமையானது தமக்குக் கிடைத்த வரவேற்பு என்றும் தங்களது பிரிவினை வாதத்தை அனைத்துலக சமூகம் ஏற்கும் ஒரு செயல் என்றும் புலம்பெயர் தமிழர்கள் கருதுகிறார்கள்.**

ஆனால் கடந்த காலத்தைப் போலல்லாது, இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது இன்று உறுதியற்ற நிலையைக் காட்டுகிறது. அத்துடன் பிராந்திய மற்றும் அனைத்துலக அரசியல் தொடர்பான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினது புரிந்துணர்வு கட்டமைக்கப்படாததாக, பரந்துபட்டதாகக் காணப்படுகிறது.

உதாரணமாக, போரின் இறுதி நாள்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றித் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் கடந்த ஒக்ரோபரில் நிபுணர் குழு என்ற ஒன்றை அமைத்திருந்தார். இந்தக் குழுவைக் கடுமையாக எதிர்த்த இலங்கை அரசு, நிபுணர் குழுவின் செயற்பாடானது நாட்டின் இறையாண்மையினை மீறுகிறது எனக் குற்றஞ்சாட்டியது. அந்தக் குழுவினர் இலங்கைக்குள் வந்து விசாரணை நடத்தவும் அனுமதி மறுத்திருந்தது.

போர்க் குற்றம் தொடர்பில் அனைத்துலக விசாரணை வேண்டும் என்று அதிகரித்து வந்த அனைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...துலகை ...கும் ...்கை ...ந்திரம்



லக வாதத்தினை முறியடிக்கும் வகையில், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு என்ற ஒன்றை இலங்னை அரசு அமைத்தது. 2002 தொடக்கம் 2009 வரையிலான காலப்பகுதியில் சமாதான நடவடிக்கைகள் தோற்றுப் போனதற்கான காரணங்களை ஆராய்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஐ.நா. நிபுணர் குழு இலங்கைக்கு வந்தாலும் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணையின் பிரகாரம் வெளிநாட்டு வல்லுநர்கள் இலங்கைக்கு வந்து அதிபர் மகிந்த ராஜபக்ஷ அமைத்த ஆணைக்குழுவின் முன்னால் மட்டுமே சாட்சியம் அளிக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுதந்திரமான அனைத்துலக விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற அழுத்தத்தை முறியடிப்பதே இலங்கையின் இத்தகைய நடவடிக்கைகளின் நோக்கமாக இருந்தது.

இலங்கை அமைத்திருக்கும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது போர்க்குற்ற விசாரணையை நடத்துவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. அல்லது சுதந்திரமாகவும் தனித்துவமாகவும் செயற்படும் தன்மையைக் கொண்டிருக்கவில்லை என அனைத்துலக அவதானிகள் கருதுகிறார்கள்.

தற்போதைய நிலையில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினது முதன்மையான அம்சம், தன்னுடைய தராதரத்தினை பேணுவது மட்டுமே.

விடுதலைப் புலிகளிடம் இருந்து எழக்கூடிய சவால்கள் இன்று இலங்கைக்கு ஒரு பொருட்டல்ல. இருப்பினும், போர்க் குற்றச்சாட்டுகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அனைத்துலக சமூகத்தின் மத்தியில் செல்வாக்குச் செலுத்தும் புலம்பெயர் தமிழர்கள் தொடர்பாக இலங்கை அரசு அதிகம் கவனம் கொள்வதாகத் தெரிகிறது.

விடுதலைப் புலிகளோ அல்லது தமிழ்த் தேசிய வாதமோ மீண்டும் தலைதூக்காமல் பார்த்துக்கொள்வதுதான் தற்போது இலங்கையின் முக்கிய வெளியுறவுக் கொள்கை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் ராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டுவிட்டாலும் அதனது வெளிநாட்டு வலையமைப்பு தொடர்ந்தும் வினைத்திறனுடன் இருக்கிறது. அத்துடன் மேற்கு நாடுகளில் குறிப்பாக கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஈழத்தமிழர்கள் மத்தியில் ஈழம் என்ற கருத்துருவாக்கம் வலுவடைந்திருக்கிறது.

புலம்பெயர் தமிழர்கள் ஒன்றிணைந்து நாடுகடந்த தமிழீழ அரசு என்ற ஒன்றை அமைத்திருப்பது இந்த வாதத்திற்கு ஆதாரமாக அமைகிறது.

நாடு கடந்த தமிழீழ அரசினை இதுவரை எந்தவொரு நாடும் அங்கீகரிக்காத போதும் அனைத்துலக ரீதியில் பல்வேறுபட்ட தரப்புகளும் இந்தக் கட்டமைப்புக்குத் தங்களது ஆதரவினை வழங்கி நிற்கின்றன. இப்படி ஆதரவு கிடைத்தமையானது தமக்குக் கிடைத்த வரவேற்பு என்றும் தங்களது பிரிவினை வாதத்தை அனைத்துலக சமூகம் ஏற்கும் ஒரு செயல் என்றும் புலம்பெயர் தமிழர்கள் கருதுகிறார்கள்.

எது எவ்வாறிருப்பனும் இடம்பெற்றதாகக் கூறுப்படும் போர்க் குற்றங்களுக்காக இலங்கையைத் தண்டிப்பதற்கான முனைப்புகளை மேற்கு நாடுகள் மேற்கொள்ளும் இடத்து தன்னிடமிருக்கும் அனைத்து வழிவகைகளையும் கொண்டு இலங்கை அரசு அதனை எதிர்க்கும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கீழான இன்றைய கொழும்பு அரசானது போருக்குப் பின்னான தனது வெளிநாட்டுக் கொள்கையில் இருமுனைத் தந்திரோபாயத்தைக் கைக்கொண்டு வருகிறது.

முதலாவதாக, போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களிலும் தான் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தும் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றை கொழும்பில் இருந்து தள்ளி வைப்பது.

மனித உரிமை மீறல்களுக்காக இலங்கையைக் கண்டித்த ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஆண்டு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையினை இடைநிறுத்தியிருந்தது. இலங்கைப் போர்க் குற்றங்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என அமெரிக்க செனற் சபையில் தீர்மானமொன்றும் கொண்டுவரப்பட்டிருந்தது.

**சீனாவைப் பொறுத்தவரையில் இந்து சமூத்திரப் பிராந்தியத்தில் அது முன்னெடுத்துவரும் முத்துமாலை மூலோபாயத்தில் இலங்கை ஒரு மிகப்பெரும் முத்து- எனவே கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொழும்புடன் உறவுகளை இறுக்கிக் கொள்ளவே அது விழையும்.**

இவ்வாறு தண்டிக்கும் போக்கில் செயல்படும் மேற்குநாடுகளை ஒதுக்கி வைப்பதே இலங்கையின் முதல் தந்திரோபாயம்

இரண்டாவதாக, தனக்கு எதிராக எழும் குற்றச்சாட்டுகளிலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்குச் சீனாவினைப் பயன்படுத்துவது. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஏதுவும் கொண்டுவரப்படுமிடத்து சீனாவின் வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்த இலங்கை விரும்புகிறது.

எனவே மேற்கு நாடுகள் என்று வரும்போது போருக்குப் பின்னான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் சீனாவைப் பிரித்துவிட முடியாது.

சீனாவைப் பொறுத்தவரையில் இந்து சமூத்திரப் பிராந்தியத்தில் அது முன்னெடுத்துவரும் முத்துமாலை மூலோபாயத்தில் இலங்கை ஒரு மிகப்பெரும் முத்து. எனவே கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொழும்புடன் உறவுகளை இறுக்கிக் கொள்ளவே அது விழையும்.

இலங்கையோ விடுதல்லைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதுடன் தமிழர் பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டது என்றே கருதுகிறது. ஆனால் இது ஏற்புடையதல்ல என்றே மேற்குலக நாடுகள் கருதுகின்றன.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவது குறித்த தனது எண்ணத்தினை மாற்றும் அதேநேரம் இலங்கைத் தமிழர்களின் சட்டரீதியிலான சமூகப் பொருளாதார துன்ப துயரங்கள் போக்கப்படவில்லை என்றால் இலங்கையின் இனப்பிரச்சினை புதியதொரு வடிவத்தில் மீண்டும் முளைவிடும் என்பதை கொழும்பு அரசு விளங்கிக் கொள்வது அவசியம்.

(மொழிபெயர்ப்பு மூலம்: புதினப்பலகை)

## பதவிக் கர்வம்



ஒருபாடசாலையில் இரண்டு பிள்ளைகள் சேர்ந்து படித்தார்கள். அதில் ஒரு பிள்ளை படித்துப் பெரிய பதவிக்கு வந்து விடுகிறான். இன்னொருத்தன் சாதாரணமான நிலையிலேயே இருக்கிறான்.

இந்தச் சாதாரணமானவன் ஒருநாள் பதவியில் இருக்கும் நண்பனைப் பார்ப்பதற்காகப் போகிறான். வாசலில் நின்ற காவலாளியிடம் "கூட படித்த நண்பன் என்று தன் பெயரைக் குறிப்பிட்டு வந்து நிற்கிறேன்" என்று உன் ஐயாவிடம் தெரிவி என்று கூறினான்.

காவலாளி உள்ளே போய்விட்டு வந்து "ஐயா வேலையாக இருக்கிறார். இப்போது பார்க்க முடியாதாம். இன்னொரு நாளைக்கு வரசெல்லுகிறார்" என்றான். அவனும் பேசாமல் திரும்பிப்போய் விடுகின்றான். இது தற்போது சாதாரணமாக நடக்க கூடிய நிகழ்ச்சியாகிவிட்டது.

இதுக்கு என்ன காரணம் தெரியுமா? அது தான் பதவிக் கர்வம். "பெருக்கத்து வேண்டும் பணிவு" என்றார் திருவள்ளுவர்.பதவி அதிகமாக, அதிகமாகப் பணிவு அதிகமாக வேண்டும் அதுதான் பெருமை.

பதவிக் கர்வம் அந்த நிமிடத்தில் ஒரு சுகத்தை கொடுக்கலாம்.பின்னர் ஒரு கட்டத்தில் அவமானத்தில் கொண்டுபோய் விட்டுவிடும்.

மகாபாரதத்திலே வருகின்ற துருபதனே இதற்கு நல்லதோர் உதாரணம்;

துருபதன்- பாஞ்சால அரச குமாரன். துரோணர்- ஏழை. பரத்துவாசர் ஆச்சிரமத்தில் இரண்டுபேரும் சேர்ந்து படித்தார்கள், அத்துடன் நல்ல நண்பர்களும் ஆவர். குருகுலவாசம் முடிந்தது; துருபதன் பாஞ்சால தேசத்துக்கு இராஜாவாகி விட்டான். ஆனால் துரோணனோ வறுமையாலே மிகவும் கஸ்டப்பட்டார். தம் குழந்தைக்குப் பால் கொடுக்க ஒரு பசு கூட இல்லாத நிலையில் தவிர்த்தார்.

இந்த நிலையில் அவருடைய மனைவி "ஏன் கவலைப்படுகிறீர்கள்? துருபத ராஜாதான் உங்கள் நண்பன் என்று சொல்கிறீர்கள்; அவரைப் போய் பார்த்துவிட்டு வாருங்கள்" என்றாள்.

துரோணரும் சரி என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு போனார். துருபதனைப் பார்த்தார் " நண்பா என்னை ஞாபகம் இருக்கிறதா" என்று கேட்டார்.

அப்போது பதவிக்கர்வம் துருபதனுக்கு கண்களை மறைத்துவிட்டது. " ஏய் மூடரே! ஏழை பணக்காரரோடும் மூடன்- அறிவாளியோடும், பயந்தாங்கொள்ளி சுத்தவீரனோடும் நட்பாக இருக்க முடியுமா?" என்று சொல்லி அவரை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டான்.

அதன் விளைவு; காலம்மாறியது. துரோணர் அத்தினாபுரம் அரச குமாரர்களுக்கு ஆசிரியராகிவிட்டார். அருச்சுணன் அவருடைய சிறந்த மாணவராகி விடுகிறான்.

அவன் துருபதனை ஜெயித்து அவனைத் தேர்காலில் கட்டியிழுத்து வந்து துரோணரிடம் கொண்டுவந்து நிறுத்துகிறான். அர்ச்சுணன் துரோணருக்கு கொடுத்த குரு தட்சணை இதுதான். அவர் கேட்டதும் அதுதான்.

பழை நிற்கிறான். அப்போது துரோணர் "உன் இராட்சியத்திலே பாதியை நான் எடுத்து கொண்டேன். அதனால் இப்போது நாங்கள் இரண்டுபேரும் சமமாகிவிட்டோம். இனிமேல் நாங்கள் நண்பர்களாக இருக்கலாம்" என்றார்.


இந்தப் புராணக் கதை படிப்பதற்குமட்டுமல்ல எம்மைப் பக்குவப்படுத்துவதற்கும் தான்.

பஜகோவிந்தத்தில் ஆதிசங்கரர் " மா குரு தனஜன யெனவன கர்வம் " என்கிறார்.

அதாவது உங்களுடைய பணத்தைப் பற்றியோ, சன ஆதரவைப் பற்றியோ உன் இளமையைப் பற்றியோ கவலைப்படாதீர்கள். ஏனென்றால் காலம் எல்லாவற்றையும் ஒரு நொடியில் அழித்துவிடும் என்கிறார். இது புரியாமல் நடந்து கொள்வதால்தான் பல சந்தர்ப்பங்களில் நாம் கஸ்ரப்பட வேண்டி இருக்கிறது என்பதை அடுத்த அடியில் தெளிவாக விளக்கியுள்ளார்.

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர் துரையரின் 8 ஆக்கங்களின் அறிமுகவிழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. வாழ்நாள் பேராசிரியர் சி.தில்லைநாதன் 'தோட்டத்தில் ஆடு' என்னும் சிறுவர் நூலை வெளியிட்டு வைக்க திருமதி தவமணி மார்க்கண்டு பெற்றுக்கொள்கிறார். அருகில் கவிஞர் துரை காணப்படுகிறார். (38)

# மாறுபட்ட கலாசார சூழலினால் ஆன்மீகத்தை மறக்கின்றோம்

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,ஜூன் 10

இன்றைய நாட்டுச் சூழலிலும் கலாசாரத்திலும் நாம் ஆன்மீகத்தை மறந்துபோய்க் கொண்டிருக்கிறோம். ஆன்மீகமானது அழிந்துசெல்கிறது. ஆன்மீகத்தை உயிர்ப்பிப்பதற்கு பாடசாலைகளிலும், வெளியிடங்களிலும் ஆன்மீகம் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம்.

யாழ்.ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'உலக மயமாக்கலில் ஆன்மீகம்' எனும் தலைப்பில் ஆன்மீக உரையை டாக்டர் சரபவன் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தினார்.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு :

ஆன்மீகம் எம்மை வழி நடத்துவதற்காகவே உள்ளது. இதனைக் கேலி செய்து கேவலப் படுத் தாதீர்கள்.

எங்கள் வாழ்வில் பின்பற்றக் கூடிய பல விடயங்களை ஆன்மீகம்போதிக்கிறது. எங்களுடைய பிள்ளைகள், சமுதாயம் நல்ல முறையிலும் சரியான முறையிலும் செயற்பட ஆன்மீகம் வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

பிறர் செய்யும் பிழைகளைச் சகித்துக் கொள்ளும் தன்மை, மற்றவர்களை மன்னிக்கும் மனோபாவம் என்பவற்றை ஆன்மீகம் எமக்குக் கற்றுத்தருகிறது. நாம் வாழும் காலம் மிகவும் சொற்பம். இந்த நிலையில் இறப்பு எப்போது வரும் என்று எமக்குத் தெரியாது. இருக்கும் காலத்தில் கடவுளை நம்பவேண்டும். கடவுள் மேல் நம்பிக்கை வைத்துச் செயற்பட வேண்டும்.

எமக்கு மேலாக உயர்ந்த சக்தி ஒன்று உள்ளது என்பதை மறந்துவிட முடியாது.எனவே, ஆன்மீகத்தைக் கடைப்பிடித்து எமது பண்பாட்டை பேணுவோம் - என்றார்.

(ம-311)

# மதமாற்றங்களை இடைநிறுத்துவதற்கு சமய நிறுவனங்களின் சேவை அவசியம்

## இந்து சமய கலாசாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 10

மதமாற்றங்களை இடைநிறுத்துவதற்கு மாவட்ட ரீதியாக சமய நிறுவனங்கள் சேவைகளை வழங்க முன்வர வேண்டும்.

மதமாற்றங்கள் மாவட்டங்கள் ரீதியாக இடம்பெற்று வருகின்றமை தடுக்கமுடியாத செயலாகத் தொடர்ந்தவண்ணம் உள்ளது. இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை சமய நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன்.

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சிவதொண்டர் மாநாடு நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவிக்கையில்:

இந்து சமயத்துக்கான சேவைகளை வழங்க நிறுவனங்கள் இல்லை என்ற நிலை தற்போது மாறிவிட்டது .

மாவட்டங்கள் ரீதியாகவுள்ள சமய நிறுவனங்கள் யாவும் மத மாற்றங்களைத் தடுக்க முன்வர வேண்டும்.

இதற்காக அகில இலங்கை இந்துமா மன்றம் எடுத்துக் கொண்ட முயற்சிதான் சைவ வித்தகர்களை உருவாக்குதல்.

சைவ வித்தகர்களும் சிவ தொண்டர்களும் சமயத்துக்கு சேவை புரியவேண்டும் எனும் நோக்குடன் செயற்பட வேண்டும்.

தொண்டர் அடிப்படையில் தான் இத்தகைய சேவையாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சேவைகள் சமுதாயத்தை எந்த வகையில் சென்றடைகின்றன என்பது தான் முக்கியமான விடயம்.

யாழ் மாவட்டம் மட்டுமல்லாது ஏனைய மாவட்டங்களிலும் அதற்கான நடவடிக்கைகளை சமய நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

(ம-313)

# விவசாயத்துறையில் நுணுக்கமான விடயங்களை குடாநாட்டு விவசாயிகளே தெரிந்து வைத்துள்ளனர்

## படை அதிகாரி பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்குடாநாட்டு மக்கள் விவசாயத்துறை சார்ந்த பல்வேறு நுண்ணறிவான விடயங்களைத் தெரிந்து வைத்துள்ளனர் என்பது தனிப்பெருமை தரும் விடயமாகும்.

இதனால் அந்தத் துறையைத் தேர்ந்தெடுத்து முன்னேற்றம் காண்பது மிகவும் பயனுடையதாக அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் 523 ஆவது படைப்பிரிவின் அதிகாரி அத்துல சில்வா.

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி பிரதேச விவசாயிகளுக்கு விதைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவிக்கையில்:

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்தவை வருமாறு:

பொதுமக்கள் நன்மை அடையக் கூடிய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை 523 ஆவது படைப் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துரு சிங்கவின் வழிகாட்டலில் இந்தத் திட்டங்கள் யாவும் முன்னெடுக் கப்படுகின்றன.

இதில் வட மாகாணத்தில் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்காக 'வீட்டுத்தோட்டம்' பற்றிய விழிப்புணர்வுகளையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கி வருகின்றோம்.

இந்தத் திட்டத்தைத் தென்மராட்சிப் பிரதேசத்திலும் நடைமுறைப்படுத்தும் முகமாக இந்த விதைகள் வழங்கப்படுகின்றன.

இதனை விவசாயிகள் ஊக்குவிப்பாக எடுத்துக் கொண்டு முன்னேற்றம் அடைய வேண்டும்.

ஏனெனில், குறிப்பாக யாழ். மாவட்ட விவசாயிகள் விவசாயத்துறை சார்ந்த பல்வேறு நுணுக்கமான விடயங்களைக் கற்றுத் தேர்ந்தவர்கள்.

இன வேறுபாடுகள் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கக் கூடாது. உழைப்பாளிகள் யாவரும் ஓர் இனம் தான்.

இது போன்ற வெவ்வேறு செயற்றிட்டங்களையும் மேற்கொள்ளப் பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார்.

( ம- 313- 122)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 10

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் மோட்டார் இயந்திர திருத்துநர், குளிரூட்டும் இயந்திர வல்லுநர், விவசாய உபகரணம் திருத்துநர் ஆகிய பயிற்சி நெறிகளுக்கான போதனாசிரியர் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிகள் யாழ்.மாவட் டத்தில் விரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே, உரிய கல்வித் தகைமைகளுடன் 2 வருட அனுபவ சான்றிதழ் உடையவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பதவி விவரத்தை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 'இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை, மாவட்ட காரியாலயம், இல.375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 10

இலங்கை தொழிற் பயிற்சி சபையால் யாழ்.மாவட்டத்தில் முதல் தடவையாக கணினி மென்பொருள், அழகுக்கலை ஆகிய பயிற்சி நெறிகள் பகுதி நேர வகுப்புகளாக ஆரம்பிக்கப் படவுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிகளைக் கற்க ஆர்வமுள்ளவர்கள் எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து பொறுப்பாசிரியரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

375, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப் பாணம்,மின்சார நிலைய வீதி, சுன்னாகம்,வலந்தலைச் சந்தி, காரைநகர், A-9 வீதி, கைதடி ஆகிய இடங்களிலுள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பயிற்சி நிலையங்களிலுள்ள பொறுப்பாசிரியர்களிடம் தொடர்பு கொள்ள முடியும். (வ)

# இடமாற்றம்

தென்மராட்சி, ஜூன் 10

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திருமதி கு.தயாரூபன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் செல்வி அருள்நந்தி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர்களுக்கான இடமாற்றங்கள் உடனடியாக அமுலுக்கு வருவதாக மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (வ-207)

* * *

சுழிபுரம் ஜூன் 10

பண்ணாகம் உபதபால் நிலைய அதிபராக செல்வி தெட்சணாமூர்த்தி யசோதா இந்த மாதம் முதல் நியமனம் பெற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இதேவேளை, தபால் அதிபராகக் கடமையாற்றிய ஜெயராஜ் உயர் பயிற்சி பெறுவதற்காக யாழ்.பிரதம தபாலகத்துக்கு தபால் திணைக்களத்தால் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(வ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த இளஞ் சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு பெற்றோரின் பங்கும் தேவை

யாழ்.மாவட்டம் பாரம்பரியமாகக் கலாசாரப் பண்பாடுகளைத் தன்னகத்தே கொண்ட பிரதேசமாகும். இத்தகைய பிரதேசத்தில் இன்று சமூகச் சீரழிவான விடயங்கள் வரம்பு மீறித் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இத்தகைய சமூகச் சீரழிவான விடயங்களைக் கட்டுப்படுத்த அக்கறை கொண்டுள்ள பல்வேறு சமூகத் தொண்டு நிறுவனங்கள் விசேட கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து விழிப்புணர்வடையச் செய்யக் கூடிய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றன.

யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த மாதம் முதல், பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் விசேடமான கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப் பட்டு வருகின்றன.

''ஒழுங்கான சமுதாயத்தின் வழிகாட்டிகள் மாணவர்கள்'' எனும் தலைப்பில் சிறந்த வளவாளர்களும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு வருகின்றனர்.

மாணவர்கள் மத்தியில் சமூகச் சீரழிவுகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்தி சிறந்த எதிர்கால இளம் சமுதாயத்தினரை சிறந்த வகையில் உருவாக்க வேண்டும் என்பதே இந்தக் கருத்தரங்கு நிகழ்வின் எதிர்பார்ப்பாகும்.

தற்போது சூழ்நிலைகளுக்கு ஏற்றாற்போல் இளம் சமுதாயத்தினர் தமது வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்துக் கொண்டு செல்கின்றனர்.

இத்தகைய சமுதாயத்தினரை நல்வழிப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

குறிப்பாக இந்தக் கருத்தரங்கு நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் கர்ப்பம் தரித்து உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் எத்தகைய பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றார்கள் என்பது தொடர்பாக கருத்துரைகள் வழங்கப்படுகின்றன. அதற்கான தீர்வுகள் என்ன? என் பது தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

யாழ்.போதனா வைத்திய சாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் பவானி இதற்கான சிறந்த ஆலோசனைகளை வழங்குகிறார்.

இளம் சமுதாயத்தினர் பாலியல் ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்குக் காரணம் என்ன? முக்கியமாக இவர்களுக்கான சிறந்த வழிகாட்டல்கள், பாதுகாப்புகள் இல்லாமல் போவதே இதற்கு முழுக்க முழுக்கக் காரணம்.

இந்த நிலையில் பிள்ளைகளின் பாதுகாப்பில் பெற்றோர்கள் எப்போதும் கவனமாக இருத்தல் வேண்டும்.

அண்மையில் கோப்பாய்ப் பிரதேசத்தில் தந்தையே மகளைத் தவறான செயல்களுக்கு அடிபணியச் செய்ய வேண்டும் எனும் நோக்கில் கட்டாயப் படுத்த முயற்சித்துள்ளமை மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

**பாண்டியம்மா**

இத்தகைய சம்பவங்கள் பிரதேசங்கள்தோறும் அடிக்கடி இடம்பெறுவதைப் பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகின்றது. இப்படியான இன்னும் எத்தனையோ சம்பவங்கள் வெளியில் வராமலேயே உள்ளன.

இத்தகைய கண்மூடித்தனமான செயல்களுக்கு இளம் சமூதாயத்தினர் உட்படுத்தப் படுவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

இளம் சமுதாயத்தினர் பாலியல் ரீதியாக வீட்டுச் சூழல், வேலைத் தளங்கள், பிரயாண இடங்கள், வேறு பொது இடங்களில் சந்திக்க நேரிடுவது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தபோதும் குற்றவாளிகளுக்குரிய தண்டனைக் காலங்கள் சிறிது காலம் என்பதுடன் பிணையும் அறிவிக்கப்படுவதால் பிணையைச் செலுத்தி விட்டுத் தண்டனைகளில் இருந்து தப்பிவிடுகின்றனர்.

குற்றவாளிகள் இவ்வாறு தப்பி விடுவதால் மீண்டும் மீண்டும் தவறுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கும்.

[illegible]ால் அப்பாவி இளம் ச[illegible]தினர் பலிக்கடாக்க ளா[illegible] தமது எதிர்கால வாழ்க்கையும் தொலைத்துவிடுகின்றனர். அதுமட்டுமன்றி சமுதாயத்திலிருந்து விலகி மனநோயாளிகளைப் போல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டி உள்ளது.

இத்தகைய செயல்களைக் கட்டுப்படுத்த அடித்தளமாக விளங்கும் மாணவர் சமுதாயத்தை நல்வழிப்படுத்த மகளிர் அபிவிருத்தி நிலையம் மேற்கொண்ட இந்த முயற்சி பாராட்டுக்குரியது.

குறிப்பாகப் பெண்கள் பாலியல் ரீதியாக எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களில் இருந்து தப்பித்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும். ''பெண்களின் கற்புக்குப் பெண்கள் தான் பொறுப்பாளி''. இது குறித்த விடயங்களில் பெண்கள் கவனமாகச் செயற்பட வேண்டும்.

இதனைப் பெண்கள் கட்டாயம் உணர வேண்டும். பாடசாலைக் காலம் தொட்டே பெண் பிள்ளைகள் பாலியல் தொடர்பாக பிரச்சினைகள், அதனால் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், தீர்வுகள் தொடர்பாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

இவ்வாறு விழிப்புணர்வடையக் கூடிய கருத்தரங்குகளை பல்வேறு சமூகத்தினரும், தொண்டு நிறுவனங்களும் ஏற்பாடு செய்வதன் மூலம் இளம் சமுதாயத்தை நல்வழிப் படுத்த முன்வர வேண்டும்.

கருத்தரங்குகளைக் கேட்டு நல்ல தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் நின்று விடாது அதனைப் பின்பற்றவும் எமது இளஞ்சமுதாயம் முன்வர வேண்டும்.

குறிப்பாகப் பெண்பிள்ளைகளின் பாதுகாப்புடன் கூடிய அவதானிப்புகள் பெற்றோர் மத்தியில் இருத்தல் வேண்டும்.

அவர்களுக்குச் சிறந்த எதிர்காலம் அமைய வேண்டுமானால் அவர்களுடன் எப்போதும் கலந்துரையாடுவது அவசியமாகும். ஏனெனில் தனிமையில் இருக்கும் பெண்பிள்ளைகள்தான் தவறான சிந்தனைகளை மனதில் தோற்றுவிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

யாழ்.போதனா வைத்திய சாலையின் மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி பவானி கூறியது போல் பாடசாலை மாணவிகள் கர்ப்பம் தரித்துத் தமது கற்றலை இடைநிறுத்தி விடுவதுடன் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் பல பின் விளைவுகளைச் சந்திக்க நேரிடுகின்றது.

இந்த நிலை எதற்கு? இது கல்விச் சமூகத்தைப் பாதிப்பதுடன் நமது பிரதேசத்தின் பண்பாடுகளும் அழிவடைந்து செல்வதற்கு ஊன்றுகோலாக உள்ள விடயம் என்பதுதான் உண்மை. ✱

---

**கடந்த 02.06.2011 ஆம் திகதி பிரசுரமான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை இலக்கம் 3 இன் வினாத்தாளின் விடைகள் தவறானவை. சரியான விடைகள் இங்கு பிரசுரமாகின்றன.**

## பரீட்சை இல. 03 இல் வினாத்தாள் II இற்கான விடைகள்

01. 1) திரை 2) நுரை 3) கரை 4) அலை 5) திரை - நுரை, கரை - தரை, இரை - நிரை 6) கடற்கரைக் காட்சி 7) அது 8) ஆழி, சாகரம் 9) அந்தச் செய்தி பார் முழுவதும் பரவியது. தம்பி அந்த அழகான இயற்கையில் காட்சியைப் பார். 10) அலைகள் 11) இரை 02. 1) எனக்கு தலைவலி ஏற்பட்டுவிட்டது. நான் செல்லும் வழி எது? 2) ஏழைகள் மீது மனம் இரங்க வேண்டும். பூக்களில் மணம் வீசும். 03. 1) நூலகம் 2) புத்தகமொன்றை 3) பாடப்பகுதி 4) குளக்கரை 5) குறிப்பெழுதுதல் 04. 1) அவர்கள் அழகாக வரைந்தார்கள். 2) நீங்கள் எங்கே போனீர்கள். 05. 01) 1) Help 2) House / Home 3) Cash 02) 1) அலுவலகம் 2) பசி 3) நாளை 06. 01) 1) ஒன்று 2) ரோஜாப்பூ 3) பால் 02) 1) ஐயா 2) ஒருலோசுவ 3) ஆயுபோவன் 07. 1) 2 2) 3 3) 2 4) 2 5) 1 6) 2 7) 3 8) 2 9) 3 10) 2 08. 01) 1) இலை 2) கிளை 3) பூ 02) 1) தேனீ 2) வண்ணத்துப் பூச்சி 03) A- மகரந்தம் B- மகரந்தக் குழாய் C- அல்லி D- புல்லி E- காம்பு 04) 1) வாழைப்பூ 2) அகத்திப்பூ 05) 1) மயில் ஆடும் 2) தூக்கணாங்குருவி தாழப்பறக்கும் 06) 1) துளசி 2) வேம்பு 09. 01) நூறுக்கள் 02) 700 03) 2098 - 2100 04) ஐயாயிரத்து நானூற்று முப்பத்தொன்று 05) 1) 10 , 13 2) 81 , 87 06) 30 07) 8m 18cm 08) 325cm 09) நிழற்றுக 10) 2 11) 4 12) 3000g 13) 1) 943 2) 349 14) 1) 47m 2) 78m
10. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக.

---

## பரீட்சை இல. 04 இல் வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-1 | 02-1 | 03-3 | 04-2 | 05-2 | 06-3 | 07-1 | 08-3 | 09-2 | 10-2 | 11-1 |
| 12-2 | 13-3 | 14-3 | 15-3 | 16-1 | 17-2 | 18-3 | 19-1 | 20-3 | 21-2 | 22-1 |
| 23-2 | 24-2 | 25-2 | 26-2 | 27-3 | 28-2 | 29-1 | 30-2 | 31-2 | 32-2 | 33-3 |

34-பலகையை மட்டமாக்குவது/சீவுவது.
35-சுவரை செங்குத்தாகக் கட்ட உதவும். 36-ஒன்று. 37-இரண்டு
38-மின்கலத்தின் நேர்முனை இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன.
39-ரீ.எம்.ஜெயரட்ண 40-சமல் ராஜபக்ஷ (புள்ளிகள் 40×2.5=100)

## விடைகள்: பரீட்சை இல. 04 இல் வினாத்தாள் II இற்கான விடைகள்

01. 1. தாமரை/கமலம் 2. உவமைத்தொடர் 3. அடுக்குமொழி 4. விற்களாய்
5. மறையுதம்மா 6. இணைமொழி 7. சந்திரன்/நிலா 8. ஆம்பல்/மீன்/சந்திரன்/அம்புஜம்
9. கண் (9×1=9 புள்ளிகள்)
02. 1. பல்கலைக்கழகம் 2. வெந்நீர் 3. நிரபராதி 4. விளாம்பழம் (4×1=4 புள்ளிகள்)
03. 1. களைப்புற்ற விவசாயிகள் களத்துமேட்டின் பக்கத்திலிருந்த மரத்தின் நிழலில் இருந்தனர்.
2. பெற்றோர்கள் பிள்ளைகளின் ஆக்கங்களான கண்காட்சியைப் பார்வையிட்டனர். (2×1=2 புள்ளிகள்)
04. 1. பலா, மா, வாழை என்பன முக்கனிகளாகும்.
2. ''ஓடி விளையாடு பாப்பா'' என்று பாரதியார் கூறினார். (2×1=2 புள்ளிகள்)
05. 1. தோமஸ் அல்வா எடிசன் 2. ஊக்கமும், விடாமுயற்சியும்
3. முயற்சி திருவினையாக்கும். (3×1=3 புள்ளிகள்)
06. 1, 2.நிகழ்காலத்தில் வாக்கியம்/இலக்கண விதிக்கமைய எழுதப்பட்டால் புள்ளி வழங்கவும். (4×1=2 புள்ளிகள்)
07. 1. சொல்லும் 2. குறுகுறுக்கும் 3. கர்ச்சிக்கும். 4. முக்காரம் போடும். (4×1=4 புள்ளிகள்)
08. 1. வடலி 2.கன்று. 3. குஞ்சு 4. குஞ்சு (4×1=4 புள்ளிகள்)
09. 1. கற்றை. 2.கற்றை 3. கோர்வை 4. வரிசை (4×1=4 புள்ளிகள்)
10. 1. போத்து, சுளகு 2. களிறு, பிடி (2×1=2 புள்ளிகள்)
11. 1. நம்பிக்கைத்துரோகம். 2. பின்பற்றுதல். 3. அறிவு உண்டாதல். (3×1=3 புள்ளிகள்)
12. 1. நூலகம். 2.அகராதி (2×1=2 புள்ளிகள்)
13. 1. சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது. 2. தெரியாததொன்றை ஆராயத்தொடங்காதே (2×1=2 புள்ளிகள்)
14. 1. தீப்பற்றவைப்பது ஆபத்தானது. 2. கவனமாகக் கையாளவும். 3. விமான நிலையம்.
4. அபாயம் (4×1=4 புள்ளிகள்)
15. 1-4 2-3 3-3 4-2 5-4 6-1 7-3 8-4 9-4 10-2 (10×1=10 புள்ளிகள்)
16. 1. துளசி 2.பசளி (2×1=2 புள்ளிகள்)
17. 1. பற்களைக் கூராக்குதல் 2. திருகாணி கழற்றவும் பூட்டவும். (2×2=4 புள்ளிகள்)
18. 1. முருங்கை 2.ஆடையொட்டி (2×1=2 புள்ளிகள்)
19. 1. 15:00 h 2.கூம்பி 3. 12 4. 18 $cm^2$ 5. 40 cm 6. 49, 64
7. ஒரு மணித்தியாலமும் 45 நிமிடங்களும்
8. 1) ஆயிரங்கள் 2) 20 9. 4 10. 21 பெட்டிகள் 11. 780 12. 0.3
13. 15 நிமிடங்கள் 14. ரூ. 2750 15. 1/2, 2/4, 8/16, 16/32 16. 1750 மி.லீ
17. முன்னே வரவேண்டும் 18. 41 19. 80 மி.லீ (19×1=19 புள்ளிகள்)
20. பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்குக. (6×2=12 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 11.05.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு
**அமரர் சுந்தரம் சரஸ்வதி**
அவர்களின் 31 ஆம் நாள் நினைவுக் கிரியைகள் இன்று (10.06.2011) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சுந்தரம் சரஸ்வதி**
தோற்றம் : 04.02.1936
மறைவு: 11.05.2011

சுந்தரம் விஜி
*'சரஸ்தானம்',*
*குயவன்புலம், சமரபாகு.*

(48,21,22)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சாமுவேல் சிமியோன்
(இலங்கை புகையிரதப் பகுதி உத்தியோகத்தர்)

*'உயிர்ப்பும் உயிரும் நானே*
*என்னில் விசுவாசம் கொள்பவன்*
*இறப்பினும் வாழ்வான்'*

அன்னை மடியில் : 31.01.1931
ஆண்டவன் அடியில் : 10.06.2001

ஆண்டுகள் பத்து ஆனாலும்
அன்புடன் என்றும்
உமை நினைப்போம்
வாழும்போது நீர் செய்த நற்செயல்கள் நிமித்தம்
வான் வீட்டில்
என்றுமே இன்புற்று இருந்திட,
இறைமகன் இயேசுவை இறைஞ்சியே
வேண்டுகின்றோம்.

*'பூங்குன்றம்',*
*68, ஞானப்பிரகாசர் வீதி, உடுவில்.*

என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாழும்:
*மனைவி, மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

*(48,27)*

## கண்ணீர் அஞ்சலி



**யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின்**
**தலைவர் Rtn.K.சுரேந்திரனின்**
**அன்பு மாமி**
**திருமதி மகேஸ்வரி**
**திருநாவுக்கரசு**

**அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.**

**றோட்டறிக் கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

*(சி/749)*

## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் சிவகாமசுந்தரி

(கல்வயல், சாவகச்சேரி)



கல்வயல், சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கண்டி வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட இராசலிங்கம் சிவகாமசுந்தரி கடந்த (07-06-2011) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் வேலுப்பிள்ளை மற்றும் சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தருமலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், அரவிந்தன், ஜனார்த்தனன் ஆகியோரின் தாயும், பிரேமா, மாலதி ஆகியோரின் அன்பு மாமியும், ரஞ்சித், பிரவிந், சுஷானி, ஐசானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவசுப்பிரமணியம், சிவயோகம், சிவஞானம், சிவபாதசுந்தரம், சிவக்கொழுந்து (சிவகௌரி), சிவலோகநாயகி, சிவகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (11-06-2011) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டி வீதி,
சாவகச்சேரி

தகவல்:
குடும்பத்தினர்

(1782)

## சொத்துக்களை சேதப்படுத்தியவர்கள் பொலிஸாரால் கைது

தென்மராட்சி, ஜூன்10

இயற்றாளைப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலின் போது அந்தப் பகுதியில் உள்ள பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் எட்டுப் பேரை கொடிகாமம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்தப் பகுதியில் உள்ள பாடசாலை, சனசமூக நிலையம், கள்ளுத் தவறணை ஆகியவற்றின் சொத்துக்களைச் சேதப் படுத்தியதாகவும், இரு பகுதியினரும் தடிகளால் தாக்கியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஒவ்வொருவரும் தலா 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-207)

## கட்டாக்காலிகளை பிடிக்க விசேட குழு

தென்மராட்சி, ஜூன்10

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளில் கட்டாக்காலிகளாக அலையும் கால்நடைகளைப் பிடிக்க பத்துப்பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் கட்டாக் காலிகளாக அலையும் மாடுகளைப் பிடித்து அந்தந்தப் பகுதி கிராம அலுவலர் பணிமனைகளில் ஒப்படைக்க வேண்டும் எனவும் ஒப்படைக்கப்படும் கால்நடைகளுக்கு பிடிக்கும் கூலியாக 500 ரூபா வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் உள்ளவர்களின் பெயர் விவரங்கள் அந்தந்த கிராம அலுவலர்களால் பதிவு செய்யப்பட்டு கடிதம் வழங்கப்பட்ட பின்னரே கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பது தொடர்பாக கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-207)

## வீட்டில் உள்ளோரை தாக்கிய மூவர் கைது

தென்மராட்சி, ஜூன்10

மந்துவில் மேற்குப் பகுதி வீடொன்றில் அத்துமீறி நுழைந்து, வீட்டில் உள்ளோரைத் தாக்கிக் காயப்படுத்திய மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த மூவரையும் கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இந்த மூவரையும் தலா 50 ஆயிரம்ரூபா இரு ஆள்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார். வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான தந்தையும் மகனும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மகனான சி.சிவரதன் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்ட செல்லப்பட்டார். (எ-207)

### மலிவு விற்பனை

100 இஞ்சுக்கு மேற்பட்ட புதிய மொடல் SONY Wega Flat 21"-29", TV கள், 12000/= முதல். 50 இஞ்சுக்கு மேற்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள் (இரட்டைக் கதவு) 19000/= முதல் DTS அம்பிளிபயர்கள், DVD என்பன மலிவுவிலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0771393670, 0778449829
R.S.மகேஸ்வரன் (அப்பனக் கொம்பனி)
ஆரம்பப் பாடசாலை அருகில் (சீனிப்புளியடி)
K.K.S.வீதி, இணுவில்.

### வீடு விற்பனைக்கு

கந்தர்மடம், மணற்தறை ஒழுங்கையில் 3½ பரப்பு [illegible] கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0777979226

## முதலாம் ஆண்டு நினைவு

உதயம்
19
.
06
.
1932



மறைவு
22
.
05
.
2010

**திருமதி பாரததேவி அம்பலவாணர்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்) திதி : நவமி

**ஈராறு மாதங்கள் ஓடி மறைந்தன**
**உங்கள் நினைவுகள் சற்றும் மாறவில்லை**
**எத்தனை ஆண்டுகள்/ யுகங்கள் ஓடி மறைந்தாலும்**
**உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சோடிருக்கும்**
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சந்திக்கு அருகில்,
குப்பிளான் தெற்கு, ஏழாலை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மகன் – ரூபலிங்கம்
மகள் – தணிகாசலதேவி
மருமகன் – அருள்ராசலிங்கம்

## வேலையாள்கள் தேவை

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு விளம்பர பராமரிப்பாளர்கள் (merchandiser) 18-25 வயதெல்லை உடைய ஆண்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் 11 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு S.V. முருகேசு, இலக்கம் 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் சமுக மளிக்கவும்.

154, Hospital Road
Jaffna.
T.P:021 222 8899

Manager
S.V.Murugesu.

*(சி/749)*

## ஓராண்டு நினைவலைகள்



**அமரர் பாலசிங்கம் பிரபாகரன்**
**(நூலக ஆசிரியர், சிதம்பரக் கல்லூரி)**

அன்னையின் மடியில் 26.12.1964
ஆண்டவன் அடியில் 10.06.2010

திதி:திரயோதசி

பொன் கொழிக்கும் பூமியிலே
புகழ்பூக்க நின்ற முத்தே!
கண்ணிமைக்கும் வேளையிலே
கனவாகிப் போனதேன்ன?

அன்பூற்றில் அவதரித்த
தேனான தெள்ளமுதே
தன்னிலை மறந்தோமையா
துடித்துமே வாடுகின்றோம்

இன்பாற்றில் திளைக்க வைத்த
கம்பீர ஆணழகே
துன்பக்கடல் தனிலேன்
மூழ்க வைத்தாய் முழுமதியே

தடம்பதித்த இடத்திலெல்லாம்
தங்கமுகம் காணுகின்றோம்
படமாக விரியுதையா-உன்
செயற்கரிய செயல்களெல்லாம்

பாருளோர் போற்ற வாழ்ந்தாய்
பண்பான வான் சுடரே!
யாருளார் வானுலகிலேன்று
விரைந்துமே அங்கு சென்றாய்

விரைந்தே யாண்டு ஒன்றாச்சோ
விழியின் ஈரம் காயவில்லை
உயிர் உடலில் இருக்கும்வரை
ஓயுமா நின் நினைவலைகள்

"செந்தில்பதி", பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

**உன் பிரிவால் துயருறும்:**
**அம்மா-பவளம்,**
**மனைவி-நகுலமாலா,**
**மகன்- அபிஷேக்.**

(49,19,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புலன் இழந்தோருக்கு உதவிக்கரம் நீட்டும் கைதடி தொழிற் பூங்கா

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது; அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" என்பது ஆன்றோர் வாக்கு. இந்த வாக்குறுதிக் கமைய உலகில் இன்றைய காலகட்டத்தில் அங்கத்தில் குறை ஏதுமின்றிப் பிறக்கும் மனிதர்களில் பெரும்பாலானோர் மனங்களில் பெரிய குறைகளைச் சுமந்தவாறே வாழ்ந்து வருகின்றனர். பணம் முதல் பதவி வரை சகல வசதிகளும் இவர்களை ஆட்கொண்டாலும் நிம்மதி என்பது இல்லாத நிலையிலேயே இவர்கள்-காலத்தைப் போக்குகின்றார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

இதேவேளை கூன், செவிடு, ஊமை ஆகிய அங்கக் குறைகளோடு பிறந்தவர்கள் பார்வை என்ற பாதையினூடாகத் தமது வாழ்க்கைப் பயணத்தை இன்னல் ஏதுமின்றி மேற்கொண்டு வருகிறார்கள். ஆனால், சிலர் விழிகளில் பார்வையை இழந்து தமது வாழ்க்கையில் பெரும் அவலங்களையும் சவால்களையும் சந்திக்கின்றார்கள். அந்தச் சவால்களைச் சாதனையாக்க அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுத் தமது பாதச் சுவடுகளை முன் வைப்பதை யாழ். மண்ணிலேயே நாம் நிஜத்தில் பார்க்க முடிகிறது.

விழிப்புலன் இழந்தோர் பலர் ஒன்றிணைந்து 23.05.1976 இல் "யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்" எனும் பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கி அதனை ஒற்றுமையாகச் செயற்படுத்தியதுடன் தமது சுய வாழ்க்கைத் தேவையை மேம்படுத்த சுய தொழில்களில் ஈடுபட்டு இன்று தம்மை, தமது குடும்பத்தை மட்டுமல்லாது சங்கத்தையும் வளர்த்து வருகின்றனர்.

பிறப்பில் விழிப்புலன் இழந்தோரும், சிறுவயதுகளில் நோய்கள் ஏற்பட்டு அதன் மூலம் பார்வை இழந்தோரும் இந்தச் சங்கத்தில் இணைந்து செயற்பட்டு வந்த இவர்களுக்குப் பெரிய பொறுப்பொன்றை நடந்து முடிந்த வன்னிப் போரும் எமது சமூகமும் வழங்கியுள்ளது.

2009ஆம் ஆண்டில் வன்னியில் இடம் பெற்ற இறுதியுத்தத்தின்போது பலர் உடல் சிதறிப் பலியாக வேறு பலர் அங்கங்கள் இழந்து கோரமரணத்தின் பிடியில் இருந்தனர். தப்புவதற்காக கடுமையான காயங்களோடு தவழ்ந்தும் உருண்டும் பாதுகாப்பான இடங்களை இடர்கள் மத்தியிலும் தேடி ஓடி மறைந்து கொண்டனர். ஆனால், அதில் சிலரோ அசையவும் முடியாமல் பாதுகாப்பு இடங்களைத் தேடித் திரியவும் முடியாமல் காயப்பட்ட இடத்திலேயே கிடந்தனர். காரணம் அவர்களுடைய உடலில் படுகாயங்கள் ஏற்பட்டன. மட்டுமன்றி அவர்களுக்கு இதுவரை காலமும் வழிகாட்டியாக இருந்த இரு கண்களையும் எறிகணை வீச்சின் சிதறல்களுக்குக் காவுகொடுத்து விட்டு எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற ஏக்கம் மனங்களை வாட்ட ஐயோ எனக் கத்தியவாறு வீழ்ந்து கிடந்தனர். அத்த கையவர்களே தற்போது தப்பிப்பிழைத்து உதவுவார் யாருமின்றி இந்த விழிப்புலனற்றோர் சங்கத்திடம் விடப்பட்டுள்ளார்கள்.



வன்னிப்போரில் ஏற்பட்ட எறிகணை வீச்சில் இரு கண்களையும் இழந்த நால்வரில் ஒருவர் ஆண். மற்றைய மூவரும் பெண்கள் ஆவார்கள். அதிலும் ஒரு பெண் ஒரு கையை மணிக்கட்டுடனும் மறுகையில் சில விரல்களையும் இழந்து தனக்கான உணவைத் தானே உண்ண முடியாமல், உடைகளை உடுக்க முடியாமல் அல்லற்படும் நிலையை நேரடியாகவே காணலாம்.


வன்னியில் இவ்வாறு காயமடைந்த நால்வருடன் பிறப்பிலேயே பார்வையை இழந்த எட்டுப் பேருமாக மொத்தம் பன்னிரெண்டு விழிப்புலனற்றோரும் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்திடம் கொண்டு வந்து விடப்பட்டனர். அந்த வேளை மேற்படி சங்கத்திலுள்ளோர் மனங்கோணாது மகிழ்வோடு ஏற்று கைதடியில் இருக்கின்ற தமது கட்டடம் ஒன்றை உடனடியாகச் சுத்தம்செய்து அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலும் அவர்களை அங்கு வைத்துப் பராமரிக்க முயன்றனர். அத்துடன் அவர்களுக்கான வசதிகளையும் பலரிடம் இருந்து கேட்டு பெற்று வருகின்றனர்.

மேற்படி தொழிற் பூங்காவில் தங்கியுள்ளோரின் சுக துக்கங்களையும் அவர்களின் நிலைமைகளையும் அறியும் நோக்கில் அங்கு சென்றபோது யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் ஆ.மகேந்திரன், செயலாளர் பெ.கமிலேஸ், பொருளாளர் வி.கனகசபை ஆகியோர் அங்கு நின்று வரவேற்றார்கள்.

தொழிற் பூங்காவின் இன்றைய நிலைமை, அங்கு தங்கியுள்ளோரின் எதிர்கால நிலைமை போன்றவைகள் பற்றி அறிய ஆசைப்படுகின்றோம் எனக் கேட்ட போது மிகவும் சந்தோஷத்துடன் எம்மைப் பற்றி அறிய யார் வருவார்கள் எனக் காத்திருந்தோம், நீங்கள் வந்துள்ளீர்கள், எமக்குப் பெரும் மகிழ்வாக இருக்கிறது எனக் கூறினார்கள்.

தயா

(வளரும்)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்

தோற்றம்:
30.03.1930

மறைவு:
11.05.2011

திருநெல்வேலி, சிவன் அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு, வட்டுவினியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## பொன்னப்பா காசிப்பிள்ளை

அப்பா என்றழைக்கும் எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் ஆசைமுகம் கண்டு இன்றோடு
முப்பத்தொரு தினங்கள் ஐயா!
அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
பாரினிலே எம்மைப் பெற்றெடுத்து
பாசத்தோடு வளர்த்துவிட்டு நீங்கள் பேசிய வார்த்தைகளும்
கூறிய அறிவுரையும் இன்றும் எம்மோடு நிற்குதையா!
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
வட்டுவினி அம்மனை வேண்டுகின்றோம்.

'பொன்னப்பா பதி',
வட்டுவினி அம்மன் கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

(1798)


தங்கள் பிரிவால்
துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களின் திருக்காட்சிகள்



அச்சுவேலி இடைக்காடு காசி விஸ்வநாதர் ஆலய கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. இதில் மகாபூர்ணாகுதி வீதியுலாவாக எடுத்துவரப்படுகின்றது.



இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய திருமஞ்சத் திருவிழாவில் சுவாமி வீதியுலா வருகிறார்.

## இறைவன் அருளைப்பெற...

நம் ஐம்புலன்களுக்கு எட்டாத அற்புதமான சக்தி ஒன்று உண்டு. அது எங்கும் நிறைந்துள்ளது. எல்லாமாக விளங்குகின்றது. எல்லா உயிர்களுக்கும் உயிராய் விளங்குகிறது. இந்த சக்தி ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் ஜோதி. இது எள்ளில் எண்ணெய் மறைந்திருப்பது போல் எல்லாப் பொருள்களிலும், உயிரிலும் மறைந்து விளங்குகின்றது. இது ஐம்புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாதது. வார்த்தைகளால் விளக்கமுடியாதது. இதையே இறைவன் என்கிறோம். தேனைப் பற்றிப் படிப்பதாலோ, அறிவதாலோ என்ன பயன்? சுவையை முழுமையாக அறியமுடியாது அல்லவா? இறைவனும் அப்படிப் பட்டவன்தான்.'

இறைவனின் அருள் கிடைத்தால்தான் இறைவனை நாம் அறிய முடியும். ''அகம் புகுந்தார் அடியேற்கு அருளாலே'' எண்ணத்திற்கும் எட்டாத இறைவன், பக்தி என்னும் வலையை வீசினால் அதில் அகப்படுவான்'' என்கிறார் மணிவாசகப் பெருமான். இவ்வாறு இறைவன் மீது அன்புகாட்டும் நெறியே பக்தி நெறியாகும். பக்தியால் பரமனை அடைவது என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவானது. நாம் இறைவன் மீது செலுத்தும் பக்தியின் மூலம் இறைவன் அருளைப்.பெறலாம்.'

நன்றி:- ஞானச்சுடர்

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 10

அச்சுவேலி வருணன் காளிகாதேவி சமேத வீரபத்திர சுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணி முதல் 8.15 மணிவரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியாகால நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. நாளை சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும். (ற)

***

யாழ்ப்பாணம், ஜூன் 10

கொடிகாமம் கச்சாய் கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த விசாகப் பொங்கல் விழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ற)

***

பளை, ஜூன் 10

இயக்கச்சி திரியாய் அம்பாள் ஆலய பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெறவுள்ளது.

(ற-207)

***

யாழ்ப்பாணம், ஜூன் 10

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி மகாமாரி அம்பாள் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் இரவு பெரிய சப்பரமும் மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ற)

***

கோப்பாய், ஜூன் 10

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணி முதல் 8.15 வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கான ஆரம்பக் கிரியைகள் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து சனிக்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

(ற-72)


## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kgவுக்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய No.1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. விலை 80/= வியாபாரிகளுக்குக் கழிவு வழங்கப்படும்.


ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை

தொ.பே:- 0776090926.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் **சின்னத்துரை நடராசா**

(Former Executive Civil Engineer of Samuel Sons & Co.Ltd.)



**மலர்வு**
**08.09.1927**

**மறைவு**
**13.05.2011**

எங்கள் இதய தீபத்தின் மறைவுச் செய்தி கேட்டவுடன் இல்லத்துக்கு விரைந்து வந்து எமது துயரில் பங்கேற்று எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் செய்த அன்பு உள்ளங்களுக்கும் அவரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை மறுதினம் (12.06.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன உபசாரத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பைத் தங்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

''ராஜகிரி'',
சந்தணத்தறை,
உடுப்பிட்டி.

மனைவி,
மகன், மகள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

**தோற்றம்**
**04 . 07 . 1937**



**மறைவு**
**21 . 05 . 2010**

**திருமதி வைத்திலிங்கம் அன்னப்பிள்ளை**

(புளியங்கூடல்)

திதி : பூர்வபட்ச நவமி
(10.06.2011)

அன்பெனும் கருவி கொண்டு - எம்மை
வளர்த்தெடுத்த எம் அருமை அன்னையே
தாங்கள் வேண்டியபடி
இறைவன் உங்களை அழைத்துக் கொண்டான்
ஆனால் எம் இதயங்களில் - என்றும்
வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

230, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(1781)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்குஅழுத்தம் கொடுக்க

# அனைத்து இந்திய கட்சிகளையும் ஓரணியில் ஜெ திரட்ட வேண்டும்



## தங்கர்பச்சான் கோரிக்கை

சென்னை, ஜூன் 10

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையைக் கண்டித்து சட்டசபையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா டில்லியில் முகாம் அமைத்து அனைத்துக் கட்சியினரையும் ஒன்றுதிரட்டி மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்த வேண்டும் என்று திரைப்பட இயக்குநர் தங்கர்பச்சான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இனப் படுகொலையைக் கண்டித்து தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியதற்காக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்த திரைப்பட இயக்குநர் தங்கர்பச்சான் மேற்படி கோரிக்கை தொடர்பாக அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

இலங்கைத் தமிழர்களுக்கு இழைத்த துரோகத்துக்குத் தண்டனையாக கடந்த தி.மு.க. ஆட்சி தோல்வி கண்டு மக்களுக்கான புதிய ஆட்சி மலர்ந்துள்ளது. தேர்தல் முடிவு வரும் முன்னரே புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்பவர்கள் முதல் சட்டப்பேரவைத் தொடரிலேயே இலங்கை அரசுக்கு பொருளாதாரத் தடையை விதித்து தீர்மானம் நிறைவேற்றி இலங்கை ஆட்சியாளர்களுக்கு தண்டனை பெற்றுத் தர வேண்டும் என எனது கோரிக்கையை வெளிப்படுத் தியிருந்தேன்.

என்னைப் போன்றோரின் வேண்டுகோள் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் உலகில் உள்ள ஒவ்வொரு தமிழனும் எப்போதும் இல்லாத அளவுக்கு மகிழ்ச்சியில் இருக்கிறான். எனவே இதற்கு அடுத்த கட்டமாக முதல்வர் மேற்படி தீர்மானம் தொடர்பான நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் தங்கர்பச்சான் குறிப்பிட்டுள்ளார். (வ)

# ஆந்திராவில் அணுமின் நிலையம் விவசாயிகள் எதிர்ப்பு தெரிவிப்பு

சென்னை, ஜூன் 10

அமெரிக்காவுடன் செய்து கொண்ட சிவில் அணுசக்தி ஒப்பந்தத்தின் பேரில் ஆந்திராவின் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள அணு மின் நிலையத்துக்கு சுற்றுச் சூழல் வல்லுநர்களும், விவசாயிகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதனால் மேற்படி திட்டத்தை நிறுத்தி வைக்க ஆந்திர அரசு முடிவு செய்துள்ளது.

மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆந்திராவில் ஸ்ரீகாகுளத்தில் உள்ள கோவாடா, மகாராஷ்டிராவில் ஜெய்தாபூர், குஜராத்தில் பாவ் நகர் ஆகிய இடங்களில், அணுமின் நிலை யங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

60 ஆயிரம் கோடி ரூபா செலவில் ஆறு அணு உலைகளை 9,000 ஏக்கர் பரப்பளவில் அமைக்க இந்த திட்டத்தின் கீழ் முடிவு செய்யப்பட்டது.

இதுதொடர்பாக சுற்றுச் சூழல் நிபுணர் சிவாஜிராவ் மத்திய அரசுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது நாட்டில் அமைய உள்ள இந்த அணுசக்தி நிலையங்களால் சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்பட சந்தர்ப்பங்கள் உள்ளன. அது மட்டுமல்லாது அதிகமான விவசாய நிலங்களை அழிக்க வேண்டியிருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டி தெரிவித்துள்ளதாவது:

மாநிலத்துக்கு தொழில் வளர்ச்சி இன்றியமையாதது. அதே நேரத்தில் அணுமின் நிலையங்களால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்றால் அதுகுறித்து ஆராயப்படவுள்ளது.

கோவாடா அணுமின் நிலையம் அமைப்பதால் ஏற்படும் பாதகங்கள் குறித்து அறிக்கை அளிக்கும்படி, இந்திய அணு சக்தி கார்ப்பரேஷன் மற்றும் மாநில அரசு அதிகாரிகளை கொண்ட ஒருங்கிணைப்பு குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார். (வ)



புதுடில்லியில் மத்திய கலால் மற்றும் வணிகவரித்துறை சார்பில்நடைபெற்ற கருத்தரங்கில் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கலந்து கொண்டு விழா மலரை வெளி யிட்டார்.

# கர்நாடகாவில் தமிழ் மொழிக் கல்விக்குத் தடை; ஜெயலலிதா உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## தங்கபாலு கோரிக்கை

கர்நாடகத்தில் தமிழ் மொழி மூலமான கல்விக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து குறித்து அந்த மாநில முதல்வருடன் பேசி தமிழக முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கர்நாடக மாநிலத்தில் தமிழ்ப் பாடசாலைகள் எல்லாம் கன்னட மொழிப் பாடசாலைகளாக மாற்றப்பட்டு வருகின்றதாக அதிர்ச்சி தரும் தகவல் வெளியாகியுள்ளது.

தேசிய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் எதிரான இந்த நடவடிக்கை கர்நாடக அரசின் அறிவிக்கப்படாத சட்டமாக மிக வேகமாகச் செயற்படுத்தப் பட்டு வருகிறது.

அந்த மாநில தலைநகரான பெங்களூர் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் பெரும்பாலான தமிழர்களும், கர்நாடக மாநிலத்தில் 10 சதவீதமான தமிழர்களும் வாழ்கின்றனர்.

அவர்கள் தாய் மொழியான தமிழில் கல்வி கற்பதற்கு அந்த மாநிலம் முழுவதும் அரசு, அரசு மானியம்பெறும் தனியார் மற்றும் மாநகராட்சிகளில் 3 ஆயிரம் தமிழாசிரியர்கள் முன்பு பணியாற்றினார்கள்.அவற்றில் ஏராளமான மாணவர்கள் தமிழ் மொழி மூலமான கல்வியைக் கற்று வந்தார்கள்.

அந்தநிலை முற்றிலும் சரிவடையும் வகையில் தற்போது அங்கு தமிழாசிரியர்கள் ஓய்வுபெறும் போது அந்த வெற்றிடத்தை நிரப்பாமல் அந்தப்பதவி இடங்கள் வெகுவாக குறைக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் தமிழக முதல்வர் கர்நாடக முதல்வரோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு பேச்சு நடத்தி அங்கு தமிழ்மொழி மூலமான கல்விக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என தங்கபாலு கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

# குறைபாடுகள் களையப்பட்டு சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துக!



## வைகோ கோரிக்கை

டில்லி, ஜூன் 10

சமச்சீர் கல்வியிலுள்ள குறைபாடுகளை கல்வியாளர்கள் மூலம் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்துவிட்டு, சமச்சீர் கல்வி திட்டத்தை செயற்படுத்த வேண்டும் என்று வைகோ கூறியுள்ளார்.

திண்டிவனம் நகராட்சி 5 ஆவது விடுதிப்பகுதியில் ம.தி.மு.க. கொடியேற்று விழா இடம் பெற்றது. கட்சிக் கொடியை அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ ஏற்றி வைத்தார்.

அதன் பின்னர் செய்தியாளர் களிடம் பேசிய வைகோ:

தமிழகத்தில் சமச்சீர் கல்வி திட்டத்திற்கு, 250 கோடி ரூபா வரை செலவிடப்பட்டுள்ளது. பொருளாதார அடிப்படையிலும், மாணவர்களின் நலன் கருதியும், அந்தத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை கல்வி யாளர்கள் மூலம் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்ததன் பின்னர் சமச்சீர் கல்வி திட்டத்தை செயற்படுத்தலாம் என்றார் அவர். (வ)

# பிருத்வி - 2 ஏவுகணை நேற்று சோதனை

பலாசூர், ஜூன்.10

அணுஆயுதங்களை சுமந்து செல்லும் திறன்வாய்ந்த இந்தியாவின் பிருத்வி-2 ஏவுகணை ஒரிசாவின் சண்டிப்பூர் ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் இருந்து நேற்று பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

நடமாடும் லோஞ்சர் மூலம் நேற்றுக் காலை 9.05 மணிக்கு இந்த ஏவுகணை வானில் செலுத்தப்பட்டதாக பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஏவுகணை 350 கிலோ மீற்றர் வரை பறந்துசென்று எதிரியின் இலக்கைத் தாக்ககூடியது. அதுமட்டுமல்லாது 500 முதல் 1000 கிலோ அளவுள்ள ஆணு ஆயுதங்களை இந்த ஏவுகணை சுமந்துசெல்லும் சக்திவாய்ந்ததாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை இதற்கு முன்பும் பிருத்வி-2 ஏவுகணை பலமுறை வெற்றிகரமாக பரிசோதித்துப் பார்க்கப் பட்டுள்ளது. தற்போது நடைபெற்றுள்ளது ராணுவத்தின் வழமையான சோதனையின் ஒருபகுதிதான் என பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ)

# கச்சதீவு விவகாரத்தை மீண்டும் கையில் எடுத்தார் ஜெயலலிதா

டில்லி, ஜூன் 10

இலங்கைக்கு கச்சத்தீவை தாரை வார்த்ததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு வலுச்சேர்க்கும் விதமாக கச்சதீவு குறித்த அனைத்து ஆவணங்களையும் தம் வசம் வைத்துள்ள தமிழக அரசின் வருவாய்த் துறை அவற்றை உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் பேசியதாவது:

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களின் வாழ்வாதாரமாக விளங்கும் கச்சவை 1974ஆம், 1976 ஆம் ஆண்டுகளில் கைச்சாத்தான இந்திய - இலங்கை ஒப்பந்தங்களின் மூலம் இலங்கைக்கு தாரை வார்த்ததை சட்ட விரோதமானது என அறிவிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் நான்வழக்குத் தொடுத்தேன். தொடுக்கப்பட்ட இந்த வழக்கிற்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் பின்வரும் தீர்மானத்தை இந்தப் பேரவையில் நான் முன்மொழிகிறேன்.

இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை, நாடாளுமன் றத்தின் இரு அவைகளின் ஒப்புதலோடு, இந்திய அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என 1960ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் பெருபாரி வழக்கில் தீர்ப்பளித்தது.

ஆனால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு முற்றிலும் முரணாக, நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் இல்லாமல், இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே 1974ஆம், 1976 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் வாயிலாக கச்சத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டு இருக்கிறது.

இந்த ஒப்பந்தங்கள், சட்டரீதியாக செல்லக்குடியவை அல்ல என 2008 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் நான் வழக்கு தொடர்ந்தேன். இவ்வாறு ஜெயலலிதா பேசினார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் நலன்கள் உயிர்கள் பற்றிக் கவலை இன்றி இலங்கையில் இருதரப்பினரும் போர் புரிந்துள்ளனர்

## மீறல்களில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சட்டப்படியான கடமையாகும்

* ஊடகங்கள் கட்டுப்பாடுகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்குகின்றன. அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டுச் சென்ற ஊடகவியலாளர்கள் இன்னமும் நாடு திரும்ப அஞ்சுகின்றனர்.

* விடுதலைப்புலிகள் சேகரித்து வைத்துள்ள நிதிகள் தமிழ் சமூகத்தினரிடையே பாதிப்படைந்தவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காகப் பெறப்படவேண்டும்.

* புலம்பெயர்ந்த தமிழர்கள் புலிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியமை சிங்கள தேசிய வாதத்தை வலுப்படுத்தியுள்ளது.

* பொதுமக்களின் பாதுகாப்பு, உரிமை, நலன் மற்றும் உயிர்கள் பற்றிய எதுவித அக்கறையுமின்றி இருதரப்பினராலும் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* இதன் நேரடி விளைவாக பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர், பல்லாயிரம் பேர் காயமுற்றனர்.

* சர்வதேச மனிதாபிமான-மனித உரிமை சட்ட மீறல்கள் மீது நடவடிக்கை எடுப்பது கொள்கை சார்ந்த விடயமல்ல. உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களின்படி அது கடப்பாடாகும்.

இவ்வாறு ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நிறுவப்பட்ட நிபுணர் குழு அவரிடம் வழங்கிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*(நேற்றைய தொடர்ச்சி)*

412. இறுதியாக, இலங்கையின் மாற்றத்துக்கும் பொறுப்புக்கூறல் பற்றிய பயனுறு செயற்பாட்டுக்கும் துடிப் புள்ளதொரு சிவில் சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்புவது முக்கியமாகும். அரச சார்பற்ற அமைப்புக்களைப் பதிவு செய்வதை பாதுகாப்பு அமைச்சின் கீழ் வைப்பது போன்ற கொள்கைகள் ஒவ்வாதவையாகும். மேலும், மனித உரிமைகள் அமைப்புக்களை இரகசியப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைக்கு உட்படுத்துகிறது என்ற அறிக்கைகள் மனதைக் குழப்புவதாக உள்ளன. மனித உரிமைகள் ஆர்வலர்கள் மீதான அழுத்தங்களும் கவலைக்குரிய வையே. மனித உரிமைகள் பிரச்சினை களைக் கண்காணித்து அறிக்கை விடுப்பதற்காக நாடு முழுவதிலும் தடையின்றிச் செல்லும் சுதந்திரம் அவர்களுக்கு இருக்கவேண்டும். (139)

### ஈ. ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள்

413. மனித உரிமைகளை மதிக்கும் சமூகம் ஒன்றின் அத்தியாவசிய அம்சமாக சுயாதீன ஊடகம் இருப்பதோடு, நிலைத்தகவுள்ள சமாதானத்துக்கு அது தேவையானதொரு நிபந்தனையாகும். இலங்கை பெருமிதமிக்க ஊடகப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள அதே வேளையில், யுத்தத்தின் போது குறிப்பாக அதன் இறுதிக் கட்டங்களின் போது பத்திரிகைச் சுதந்திரம். கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. சதந்திர ஊடகங்கள் தொடர்ந்தும் செயற்பட்ட போதிலும் அவை கட்டுப்பாடுகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்குகின்றன. யுத்தத்தின்போது வன்செயல் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டுத்தப்பிச் சென்ற பல ஊடக வியலாளர்கள் இன்னும் அச்சத்துடனே இருப்பதோடு நாட்டுக்குத் திரும்ப அஞ்சுகின்றனர். நாட்டினுள் அரசை விமர்சிக்கும் கருத்துக்களுக்கு அல்லது தமிழ் மக்களின் ஆதங்கங்கள் பற்றிய கருத்துக்களுக்கு மிகக்குறைவான சகிப் புத்தன்மையே காணப்படுகிறது.

414. 2009 ஜனவரியில், பிரசித்தி பெற்ற ஊடகவியலாளரும் அரசின் விமர்சகருமான லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டார். 2009 ஓகஸ்ட் மாதத்தில், பி.ரி.ஏ. சட்டத்தின்

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை பகுதி - 37**

கீழ் முதற்தடவையாக வழங்கப்பட்ட தண்டனையின் கீழ், அரசின் இராணுவ நடவடிக்கையை விமர்சித்து எழுதிய ஊடகவியலாளர் ஜே. எஸ். திசாநாயகத்துக்கு 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இன்னுமொரு பிரசித்தி பெற்ற ஊடகவியலாளரும் கேலிச் சித்திர கலைஞரும் அரசை விமர்சிப்பவருமான, பிரகீத் எகனெலிகொட 2010 ஜனவரி மாதம் காணாமற்போனதோடு இதுவரை அவரைப் பற்றிய எந்தவிததகவலும் இல்லை. இந்த மூன்று உதாரணங்களும், துரதிர்ஷ்டவசாக, மேலும் பாரியதொரு பிரச்சினையைப் பிரதிபலிப்பதாகவுள்ளன.

415. எல்லைகள் அற்ற செய்தி நிருபர்கள், அதன் 2010 பத்திரிகை சுதந்திர சுட்டியில் 175 நாடுகளுக்கிடையே இலங்கைக்கு 158 ஆவது இடத்தை வழங்கினர், இந்த நிலை 2009 இனை விட நான்கு இடங்கள் முன்னேற்றமுடையதாகும். 2010 டிசெம்பர் 30 ஆம் திகதி, அது பின்வருமாறு கண்டனம் தெரிவித்தது. இலங்கையின் நிலைவரம் பற்றிய பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் சுயாதீன ஊடக அறிக்கை விடுப்பதைத் தடுக்க அரசு புதிய வடிவத்திலான பத்திரிகைத் தணிக்கை மற்றும் தடைகளைப் பிரயோகிக்கிறது. உடல் மீதான தாக்கு தல்கள். அச்சுறுத் தல்கள் மற்றும் சிறை வைத்தல் போன்ற சம்பவங்களின் எண்ணிக்கை குறைந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும் என்ற போதிலும், நிஜ செய்தி ஆசிரியர் சுதந்திரம் மீள ஏற்படுவதை அதிகாரிகள் தடுப்பது கவலைக்குரியதாகும்.

416. இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் இரு அளவு கோல்களைக் கொண்டு அளக்கப்படுகிறது. முதலாவது, ஊடகவியலாளர்கள் இலங்கையில் சுதந்திரமாகப் பிரசுரிக்கும் உரிமையைக் கொண்டிருக்கவேண்டும் என்பதோடு அதற்சூக அவசரகால ஒழுங்குவிதிகளை அகற்றுவது தேவைப்படும். அத்துடன் பி.ரி.ஏ. சட்டம் சர்வதேச தரங்களுடன் ஒத்திருப்பதற்காக அதற்கான திருத்தங்களைக் கொண்டு வருவது. வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ள ஊடகவியலாளர்கள் திரும்பி வருவதற்கு போதியளவு பாதுகாப்பு உண்டென்பதாகக்கருதி தம் நாட்டில் அவர்களது தொழிலை நடத்துவதற்கு முடியும் போது இரண்டாவது அளவு கோலின் தேவை நிறைவுபெறும்.

(வளரும்)




அன்புடன் யாழ் மண்ணில்....

Hutch வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய அனைத்து வாடிக்கையாளர் சேவைகளையும் பெற்றுக் கொடுக்கும்
Hutch நிலையமொன்று இல 127, MPCS கட்டடம், KKS வீதி, யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது

தொடர்புகளுக்கு 021 222 0588

0785 785 785
www.hutch.lk

எங்கள் Hutch நிலையத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைகள்:
● புதிய தொடர்புகள் வழங்குதல் ● Top Up கார்டுகள் ● Reload செய்தல்
● SIM மாற்றுதல் ● Hutch சேவைகள் தொடர்பான தகவல்களைப் பெறும் வசதி

HUTCH

www.sarva.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணை முட்டும் கட்டடங்களை அமைக்கும் சீனாவின் திட்டம் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் என நிபுணர்கள் எச்சரிக்கை

பீஜிங்,ஜூன் 10

2016ஆம் ஆண்டில் விண்ணை முட்டும் வகையிலான 800 அதி உயரக் கட்டடங்களை சீனா நிறுவும் என சமீபத்திய ஆய்வொன்று தெரிவிக்கிறது.

பராமரிப்புச் செலவுகளைக் கருத்தில்கொண்டு மாற்றுத் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என அந்த நாட்டு நிபுணர்கள் அரசை வலியுறுத்துவதாகவும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஷாங்காய் நகரைச் சேர்ந்த தனியார் வார இதழ் ஒன்று உலகின் அதி உயரக் கட்டடங்கள் குறித்த ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளது.

அவற்றில் அமெரிக்காவில் 200 அதி உயரக் கட்டடங்கள் தான் உள்ளன. எனினும் உலகில் உள்ள பத்து மிகப் பெரிய கட்டடங்களில் ஐந்து கட்டடங்கள்சீனாவில் உள்ளனஎன்றும் கூறப்பட்டுள்ளது.

152 மீற்றர் உயரம் கொண்ட கட்டடங்கள் அதி உயரம் கொண்டவை எனும் அடிப்படையில் கொங்கொங் நகரில் 58 கட்டடங்களும், ஷாங்காயில் 51 மற்றும் ஷென் சென்னில் 46 கட்டடங்களும் அதி உயரம் கொண்டவையாக இருப்பது தெரிய வந்துள்ளது.

மேலும் தற்போதுள்ள நிலையே தொடருமானால் வரும் 2016 ஆம் ஆண்டில் 800 அதி உயர கட்டடங்களை சீனா நிறுவும் எனத்தெரிகிறது. அத்துடன் 200 புதிய கட்டடங்களுக்கான கட்டு மானப் பணிகள் தொடங்கப் பட்டுள்ள தாகவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து சீனாவைச் சேர்ந்த பொருளாதாரப் பேராசிரியர் வாங்ஜியான்மோ கூறியதாவது:

அரசின் இந்த நட வடிக்கை நிலத்தை பாதுகாக்கும் முயற்சி எனத் தொடக்கத்தில்கூறப்பட்டாலும் தற்போது நாட்டின் கனவுத் திட்டமாக இது மாறியுள்ளது.

நகரங்களில் உள்ள மக்கள் தொகை நெருக்கடியை சமாளிக்க இதுபோன்ற அதி உயர அடுக்குமாடிக் கட்டடங்களை சீனா அமைத்து வருகிறது. எனினும் அதிக் பொருள் செலவில் நிறுவப்படும் இத்தகைய கட்டடங்களை பராமரிக்கும் செலவு மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்வது நல்லது.

ஷாங்காய் நகரில் உள்ள 421 மீற்றர் உயரம் கொண்ட ஜின் மாடவர் அடுக்குமாடிக் கட்டடம் ஒரு சதுர மீற்றருக்கு மூன்றாயிரம் அமெரிக்க டொலர்கள் செலவில் கட்டப்பட்டது. இந்தக் கட்டடத்தை பராமரிக்க ஆண்டிற்கு 75 ஆயிரத் திற்கும் அதிகமான அமெரிக்க டொலர்கள் செலவாகின்றன என்றும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரங்கள் மட்டுமல்லாமல் புறநகர்ப் பகுதிகளிலும் தற்போது இதுபோன்ற கட்டடங்கள் கட்டப்படுகின்றன. ஷாங்காயில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடத்தை விட உயரமானதாக குவாங்சியுவாங் பகுதியில் 528 மீற்றர் உயரத்திலான கட்டடம் கட்டும் பணிகள் நடந்து வருகின்றன.

இதுபோன்ற கட்டடங்களில் முதலீடு செய்பவர்கள் அனைவரும் பிறரிடம் கடன் வாங்கியே உயரத்தை அதிகரித்துக் கட்டுகின்றனர் என ஷாங்காய் நகரை சேர்ந்த ரியல் எஸ்டேட் நிறுவன ஊழியர் ஒருவர் கூறுகிறார்.

## விமானம் தாங்கி கப்பல் தயாரிப்பு

பீஜிங்,ஜூன் 10

இந்தியாவின் விமானம் தாங்கிக் கப்பலான ஐ என் எஸ் விராட்டிற்குப் போட்டியாக அதனைவிட இருமடங்கு பெரிய, சுமார் 60 ஆயிரம் தொன் எடை கொண்ட போர்க் கப்பலை சீனா உருவாக்கி வருவதாக ஹாங்காங் செய்தி நிறுவனம் தகவலை வெளியிட்டுள்ளது.

300 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பலின் கட்டுமானப் பணிகள் இன்னும் முழுமை பெறவில்லை என சீன மக்கள் போர்ப் படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விமானம்தாங்கிக் கப்பலை வைத்திருப்பதை ஒரு நாடு கௌரவமாகக் கருதுகிறது. அதன் அடிப்படையில் இந்தியா, ஜப்பான், தென் கொரியா போன்ற நாடுகள் விமானம் தாங்கி கப்பல்களை வைத்துள்ளன. அதன் வரிசையில் சீனாவும் இணைய உள்ளது என மக்கள்விடுதலைப் படையைச் சேர்ந்த அதிகாரி குய் ஜிங்காவோ தெரிவித்தார்.

சந்திப்பு...



வியன்னாவில் நடைபெற்றுவரும் உலகப் பொருளாதாரக் கருத்தரங்கில் கலந்துகொள்ள வருகைதந்த கைருஸ் அதிபர் ரோசா ஒட்டுன்பாயேவா (இடது) ஆஸ்திரியாவின் பிரதமர் வார்னர் பேமானை சந்தித்துப் பேசினார்.

# அமெரிக்காவை அழிக்க முஸ்லிம் இனத்தவர்கள் முயற்சிப்பர்

வாஷிங்டன்,ஜூன் 10

அமெரிக்காவை அழிக்க முஸ்லிம்கள் முயற்சி செய்வார்கள் என அல்குவைதாவின் நம்பர் 2 எனக் கருதப்படும் அல் ஜவாஹிரி எச்சரிக்கை விடுத்தார்.

அவரது வீடியோ காட்சிகள் இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளன. அந்த வீடியோ காட்சிகளில் சுமார் 28 நிமிடங்கள் அவர் பேசியுள்ளார்.

பின்லேடன் உயிரோடு இருக்கும்போது அமெரிக்காவை மிரட்டி வந்ததாகவும், மரணத்திலும் அது தொடரும் என அல் ஜவாஹிரி தெரிவித்தார்.

பின்லேடனைக் கொன்ற பின்னர் அவரது உடலை அமெரிக்கா கடலில் வீசியதற்கும் அவர் கண்டனம் தெரிவித்தார்.



அமெரிக்காவையும் அதன் நட்பு நாடுகளையும் அழிக்க சர்வதேச முஸ்லிம் சமூகத்தினர் முயற்சி செய்வார்கள் என அவர் தனது வீடியோ செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பின்லேடன் மரணத்துக்குப் பின்னர் அல் ஜவாஹிரி அல்குவைதா இயக்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளதாகக் கூறப்படும் நிலையில் அவ ரது வீடியோ காட்சிகள் வெளியிடப்பட்டுள்ளன.

# நைஜீரிய குண்டு வெடிப்பில் 11 பேர் பலி

அபுஜா,ஜூன் 10

நைஜீரியாவில் தீயணைப்பு அலுவலகம் அருகே குண்டு வெடித்ததில் 11 பேர் இறந்தனர். நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் பெரும்பான்மை இனத்தவர்கள் அதிகமாகவும், தெற்கு பகுதியில் குறிப்பிட்ட இனத்தவர்கள் அதிகமாகவும் உள்ளனர். நைஜீரியாவில் மொத்தம் 15 கோடி மக்கள் வசித்து வருகிறார்கள். அங்குள்ள 12 மாகாணங்களில் ஷயரியத் சட்டம் அமுலில் உள்ளது. இந்தநிலையில் நைஜீரியா முழுவதும் ஷரி யத் சட்டத்தை அமுல்படுத்த வலியுறுத்தி போகொஹரம் என்ற தீவிரவாத அமைப்பு வன்முறையில் ஈடுபட்டு வருகிறது.

இந்த அமைப்பு தெற்குப் பகுதியில் உள்ள கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் மைதுகுரி என்ற இடத்தில் உள்ள தலைமை தீயணைப்பு நிலைய அலுவலகம்,3பொலிஸ் நிலையங்கள், தேவாலயம் ஆகியவற்றில் போகொஹரம் அமைப்பால் வைக்கப்பட்ட குண்டுகள் தொடர்ந்து வெடித்தன. இந்தத் தாக்குதலில் ஒரு ராணுவ வீரர் உட்பட்ட 11 பேர் இறந்தனர். பலர் காயம் அடைந்தனர்.

# போராட்டக்குழு எண்ணெய் விற்பனை

கேணல் கடாபிக்கு எதிரான போராட்டக்காரர்கள் புதிய அரச நிர்வாகத்தை ஏற்படுத்தி உள்ளனர். இந்தப் போராட்டக்குழு நிர்வாகம் தனது முதல் எண்ணெய் விற்பனையை அமெரிக்காவிடம் தொடக்கியுள்ளது.

அமெரிக்காவில் டெசோரோ என்ற எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கே தேவையான எரிபொருள் விநியோகத்தை போராட்டக் குழு அரச நிர்வாகம் ஆரம்பித்துள்ளது.

லிபியாவின் பெங்கசியை மையமாகக் கொண்ட தேசிய போராட்டக் குழு 120 லட்சம் பரல் எண்ணெயை டெசோரோ நிறுவனத்துக்கு விநியோகிக்கிறது.

லிபியா போராட்டக்காரர்கள் அமெரிக்காவுக்கு எண்ணெய் விற்பதை அமெரிக்க வெளியுறவுத்துறை இணையசகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# பெண்களின் திறமையை சரியாகப் பயன்படுத்த வேண்டும்

## ஜேர்மனுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

பெர்லின்,ஜூன் 10

ஜேர்மனின் தொழிலாளர் சந்தையில் பெண்களை ஒருங்கிணைக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. ஜேர்மன் பொருளாதாரம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் நிர்வாகக்குழு தனது அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளது.

ஜேர்மனியில் கடுமையான தொழிலாளர் பற்றாக்குறை நிலவுகிறது. இந்தப் பற்றாக் குறையைச் சமாளிக்க ஸ்கண்டிநேவியன் நாடுகளை ஜேர்மனி பின்பற்ற வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

ஜேர்மனியில் இன்னும் சில பத்து ஆண்டுகளில் வயதான மக்கள் தொகை அதிகரிக்கும். ஓய்வூதியம் பெறும் நபர் ஆதரவு அளிக்கும் பணியாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவிலேயே இருக்கும்.

ஜேர்மன் தன்வசம் உள்ள முழு வேலைத் திறன் அமைப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. இது குறித்து ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,''ஜேர்மனியில் உள்ள ஆண், பெண் அனைவரின் வேலைப் பணித்திறனையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்றார்.

இந்தப் புதிய அறிவுறுத்தல் மூலம் பெண்கள், வயதான தொழிலாளர்கள், அயல்நாட்டவர்கள் மற்றும் தொழில் திறன் அதிகம் இல்லாத நபர்கள் ஆகியோரின் பணி ஆற்றலையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஜேர்மன் நிறுவனங்களில் அதிகாரி நிலை பணி இடங்களில் பெண்களுக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கலாமா என்பது குறித்த விவாதம் இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்றது. ஜேர்மனியில் உள்ள 100 முன்னணி நிறுவனங்களில் தலைமைப் பதவிகளில் 2.2 சதவீத பெண்கள் இருப்பது சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரியவந்தது. பொருளாதார ஆராய்ச்சிக்கான ஜேர்மன் இன்ஸ்டியூட் நடத்திய ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்தது.

# பாகிஸ்தானில் அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்

பாகிஸ்தானில் உள்ள வஜிரீஸ்தான் பகுதியில் அமெரிக்கப் படைகள் நடத்திய, தொடர் ஏவுகணைத் தாக்குதலில், எட்டுத் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் கொல்லப்பட்டனர்.

பழங்குடியின மக்கள் அதிகளவில் வசிக்கின்ற வஜிரீஸ்தான் பகுதியில், தலிபான் மற்றும் அல்குவைதா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளின் முக்கிய தலைவர்கள், அப்பாவிகள் போன்று ஊடுருவியுள்ளதாக சி.ஐ. ஏ. கூறிவருகிறது. இந்த நிலையில், வஜிரீஸ்தானின் வட மற்றும் தென் எல்லைகளில் உள்ள வனப் பகுதியில், எட்டுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் பதுங்கியுள்ளதாக தகவல் கிடைத்தது. இதையடுத்து, அப்பகுதிகள் மீது ஆளில்லா போர் விமானங்கள் மூலம், ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் தீவிரவாதிகள் எட்டுப்பேர் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலையில் உதைபந்தாட்ட மைதானம்; ஜேர்மன் தூதர் நாளை அடிக்கல் நடுவார்

யாழ்ப்பாணம், ஜூன் 10

இலங்கைக்கான ஜேர்மன் நாட்டின் தூதுவர் ஜென் புளேட்னர் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

அரியாலைப் பகுதியில் யாழ்.உதைபந்தாட்ட லீக்கிற்கு என அமைக்கப்படவுள்ள உதைபந்தாட்ட விளையாட்டு மைதானத்துக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் பங்குகொள்ளவுள்ளார்.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் 'கொல்சிம்' ஏவ்.ஏ கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் முதலாவது அரை இறுதியாட்டம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அன்று மாலை இடம்பெறவுள்ளது. அந்த நிகழ்விலும் ஜேர்மன் தூதர் பங்கு கொள்ளவுள்ளார்.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாக சபை உறுப்பினரும் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுத் தலைவருமான மாணிலால் பெர்னாண்டோவும் அவருடன் வருகை தருகிறார். (ஐ-23)



# தேசிய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி; அரை இறுதியாட்டம் நாளை யாழ்.நகரில்

## பொலிஸ்- இராணுவ அணிகள் மோதுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 10

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் ''கொல்சிம்'' ஏவ்.ஏ கிண்ணத்துக்கான உதைபந் தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரின் முதலாவது அரை இறுதியாட்டம் நாளை மாலை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இலங்கை இராணுவ உதை பந்தாட்ட அணியை எதிர்த்து இலங்கைப் பொலிஸ் உதைபந்தாட்ட அணி மோதவுள்ளது.

அரை இறுதியாட்டத்துக்கு முன்னதான காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணியான புனித சாள்ஸ் மகா வித்தியாலய அணியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி மோதவுள்ளது. போட்டியின் இடைவேளை யின் போது சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வு இடம்பெறும். (ஐ-23)


# மரண அறிவித்தல்

## திருமதி நவரத்தினம் அன்னபூரணி

அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் அன்னபூரணி (08.06.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - உருக்குமணியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா நவரத்தினம்(ஓய்வூதியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாலதி மற்றும் வசந்தி (கனடா), சுகந்தி (பிரான்ஸ்), மனோரதி (யா/அருணோதயாக் கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயும், ஸ்ரீபிரகாசன் (கனடா), குகதாசசிங்கம் (பிரான்ஸ்), கணேசலிங்கம் (உதவிக்கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியும் அமிலினி (கிளி/இராமநாதபுரம் ம.வி.), லகிந்தன் (யா/ மகாஜனக் கல்லூரி), புகழினி (யா/மகாஜனக் கல்லூரி), சகானா, திவேந், சஜந் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நாகராசாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, கண்மணி மற்றும் இரசநாயகம், சின்னராசா, கனகரத்தினம், லலிதாம்பிகை, சந்திரேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சி.கணேசலிங்கம் [மருமகன் - உதவிக்கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.]

அம்மாள் கோயிலடி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(1809)




மலேசியாவில் நடைபெற்ற கராத்தே வீரர்கள் தெரிவில் 5 ஆவது கறுப்புப் பட்டியை பெற்ற இலங்கையரான கராத்தே ஆசிரியர் அன்ரோ டினேஸ். வடமாகாணத்தில் மிகக் குறைந்த வயதில் (வயது- 33) 5 ஆவது கறுப்புப் பட்டியைப் பெற்றவர் என்ற பெருமையைப் பெற்றார். அவர் மலேசிய கராத்தே நிபுணர் சிகான்தான் தான் லோனதயுடன் நிற்கிறார். (ஐ)

# பயிற்றுநர்களுக்கு இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 11 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலருக்கு மான உதைபந்தாட்ட பயிற்றுநர்களுக்கான கருத்தரங்கு இன்று பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணிவரை சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கருத்தரங்கில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் இளைஞர் அபிவிருத்திப் பணிப்பாளர் மகிந்தபாலா கலந்து பயிற்சிகளை வழங்குவார். (ஐ-23)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2229 திகதி 08-06-2011

ஆங்கில எழுத்திற்கும் I

வெற்றி எண்கள் 01 15 25 30

போனஸ் இல: 45

ஜக்பொட் பரிசு ரூ. 14,844,600/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 199294 | 20/- | 3,985,880/- |
| 2 இல | 14246 | 100/- | 1,424,600/- |
| 3 இல | 298 | 1,000/- | 298,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8043 | 40/- | 321,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 564 | 1,000/- | 564,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,844,600/- | - |
| 1 இல + போனஸ் இல | 9482 | 100/- | 948,200/- |
| 2 இல + போனஸ் இல | 449 | 500/- | 224,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 361 | 200/- | 72,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | 232767 | - | 10,441,600/- |
| ரத்தரங்வரம மொத்த பரிசு | 317 | | 258,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 233084 | | 10,699,600/- |

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 15,388,650/-

தங்கக்காசு பரிசுப்பொதி வெல்லப்படவில்லை

ரத்தரங் வரம

வெற்றி எண்கள் 29 50 55 61

ஆங்கில எழுத்திற்கும் D

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 3 இல | 316 | 500/- | 158,000/- |
| 4 இல | 01 | 100,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | ஒரு பவுன் தங்கக்காசு 07 | - |

இந்த சனிக்கிழமை தங்கக் காசுப் பொதி 09 தங்க நாணயங்கள்

அபிவிருத்தி லொத்தர் சபை

தொ.பே. 2333546/7


# நெல்லியடி சென்றல் நடத்திய போட்டியில் இளவாலை ஹென்றியரசர் சம்பியன்

யாழ்ப்பாணம்.ஜூன் 10

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட பாடசாலைக்கு இடையில் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி மோதிக்கொண்டது.

ஆட்டம் தொடங்கியது முதல் முடியும் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி, தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு வழங்கப்பட்டது. இதில் இரண்டு அணியினரும் 3:3 என்ற கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையானது.

மேலும் ஒரு தண்டனை உதை வழங்கப்பட்டது. அதில் இளவாலை புனித ஹென்றி யரசர் கல்லூரி தமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை கோலாக்கியது. சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி கோல் பெறும் சந்தர்ப்பத்தை தவறவிட்டது.

இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி 4:3 என்ற கோல் கணக்கில் சென்.பற் றிக்ஸ் கல்லூரியை வெற்றி கொண்டு சம்பியன் ஆனது. (ஐ-23)


# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஸ்ரீநிதி கபில்

பிறப்பு: 25.10.1985

இறப்பு: 10.06.2001

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
உன் நினைவுகளை மறக்க முடியவில்லை
இறுதி வரை துணையிருப்பாய் என்று நினைத்து இருந்தோம்
பாதி வழியில் பரிதவிக்க
வாழ்வின் வசந்தத்தில் கைவிட்டுச் சென்றாயோ!
இது நியாயம் தானா?

ஊரெழு கிழக்கு, சுன்னாகம். குடும்பத்தினர்.


# ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுச் போட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது. ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இரண்டுஅணியினரும்தலாஒருகோலைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ஐ-23)


## கிறிஸ்ரல் சென்ரர் - நெல்லியடி

## ஆசிரியர் தேவை

தரம் 6 முதல் தரம் 11 வரை

தமிழ்,விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் A/L க்கு இரசாயனவியல் கற் பிப்பதற்கு.

10.06.2011 முதல் 12.06.2011 வரை
மு.ப. 9 மணிமுதல் - ந.ப.12 மணிவரை
நேரில் சமுகம் தரவும்.

T.P : 0775133990 நிர்வாகி

(1805)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலிஸ்க்கு விருது



தென்னாபிரிக்கா அணியின் சகலதுறை ஆட்டக்காரர் கலிஸ்க்கு ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதுஉட்பட மூன்று முக்கிய விருதுகள் வழங்கப்பட்டன.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை சார்பில் ஆண்டு தோறும் சிறந்த வீரர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படுவார்கள். இந்த முறை ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருது சகலதுறை ஆட்டக்காரர் கலிஸ்க்கு வழங்கப்பட்டது. இவர் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரருக்கான விருதையும் தட்டிச் சென்றார்.

சமீபத்தில் இந்தியாவுக்கு எதிராக கேப்டவுனில் நடந்த டெஸ்டில் இரண்டு இன்னிங்ஸிலும் சதம் கடந்த இவருக்கு சிறப்பு விருது ஒன்று வழங்கப்பட்டது. முன்னதாக இவர் கடந்த 2004 இல் சிறந்த வீரருக்கான விருதை பெற்றார்.

சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான விருதை, தலைவர் டி வில்லியர்ஸ் பெற்றார். தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்கள் மற்றும் ரசிகர்கள் சார்பில் சிறந்த வீரருக்கான விருது ஹசிம் அம்லாவுக்கு வழங்கப்பட்டது. (15)

# சச்சின், கலிஸ் முதலிடத்தில்

டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் இந்தியாவின் சச்சின், தென்னாபிரிக்காவின் கலிஸ் ஆகியோர் முதலிடத்தைப் பிடித்துள்ளனர்.

டெஸ்ட் தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.ஸி.ஸி) புதன்கிழமை வெளியிட்டது. சச்சின், கலிஸ் ஆகியோர் 883 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தனர். இதேபோல் சகலதுறை ஆட்டக்காரர் தரவரிசையிலும் கலிஸ் முதலிடத்தில் உள்ளார்.

துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் இங்கிலாந்து வீரர் ஜொனாதனன் ரொரட் 3 ஆவது இடத்தில் உள்ளார். இந்தியாவின் வீரேந்திர சேவாக், வி.வி.எஸ்.லக்ஸ்மன் ஆகியோர் முறையே 6 ஆவது மற்றும் 7ஆவது இடத்தில் உள்ளனர். இலங்கை வீரர் குமார் சங்ககரா ஒரு இடம் பின்தங்கி 4ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பந்துவீச்சாளர்கள் வரிசையில் தென்னாபிரிக்காவின் டெயில் ஸ்ரெயின் 899 புள்ளிகளுடன் முதலிடத்திலும், இங்கிலாந்தின் கிரேம் ஸ்வான் இரண்டாவது இடத்திலும், அண்டர்சன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். இந்தியாவின் சகீர்கான் 5 ஆவது இடத்திலும், ஹர்பஜன் சிங் 6ஆவது இடத்திலும் உள்ளனர். அணிகள் வரிசையில் இந்தியா தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. தென்னாபிரிக்கா இரண்டாவது இடத்திலும், இங்கிலாந்து 3 ஆவது இடத்திலும் உள்ளன. இலங்கை 4 ஆவது இடத்திலும், ஆஸ்திரேலியா 5 ஆவது இடத்தில் உள்ளது. (15)

# நலிவடைகிறது இலங்கையின் பலம்

இங்கிலாந்து அணியுடனான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கான உடல்திட நிலை தனக்கு இல்லாமல் போகலாம் என்று இலங்கை அணியின் தலைவர் திலகரட்ன டில்ஷான் அச்சம் தெரிவித்துள்ளார். வலது கை பெருவிரலில் ஏற்பட்ட காயமொன்றே இதற்குக் காரணம். தற்போதைய நிலையில் நான் 3 ஆவது ஆட்டத்தில் இல்லை என்றே எண்ணுகிறேன், என்று அவர் நேற்று முன்தினம் கூறினார்.

முடிவுற்ற இங்கிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் 193 ஓட்டங்களைப் பெற்ற டில்ஷான், இந்த ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரராக தெரிவானமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இறுதிநாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸில் அவர் துடுப்பெடுத்தாடவில்லை. தேவையேற்படின் அவர் துடுப்பெடுத்தாடுவதற்கு தயாராக இருந்தபோதிலும் தனது வழக்கமான ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் நிலையிலிருந்து அவர் தன்னை கீழிறக்கிக் கொண்டார்.

இந்தக் காயம் குணமடைவதற்கு 3-4 வாரகால ஓய்வு தேவைப்படும் என்று டாக்டர்களும் உடற்கூற்று மருத்துவரும் அறிவுறுத்தியுள்ளனர். 3 ஆவது ஆட்டம் ஆரம்பமாகுவதற்கு இன்னும் 09 நாள்கள்தான் உள்ளன. விரைவாக குணமடைந்தால் நான் அந்த ஆட்டத்தில் விளையாடுவேன். இல்லாவிட்டால் இளம் வீரர் ஒருவருக்கு அந்த வாய்ப்பை வழங்கிவிட்டு ஒரு நாள் சுற்றுப் போட்டிக்கு தயாராகுவேன், என்று திலகரட்ன டில்ஷான் தெரிவித்துள்ளார்.


இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் சௌதம்ப்டன் நகரில் நடைபெறவுள்ளது. இந்த இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி ·486 ஓட்டங்களையும் இலங்கை அணி 479 ஓட்டங்களையும் பெற்றன.

இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 335 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் துடுப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டது. முதல் இன்னிங்ஸில் 4 ஓட்டங்களால் சதத்தை தவறவிட்ட அலிஸ்டர் குக் இரண்டாவது இன்னிங்ஸில் 106 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதிநாளான செவ்வாய்க்கிழமை தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 127 ஓட்டங்களைப் பெற்றபோது இந்த ஆட்டம் முடிவுற்றது. (15)

# மீண்டும் வருகிறார் சனத் ஜெயசூரியா!

சனத்



இங்கிலாந்துடனான ஒருநாள் சர்வதேச சுற்றுப்போட்டி மற்றும் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை கிரிக்கெட் அணியில் முன்னாள் அணித்தலைவர் சனத் ஜெயசூரிய சேர்க்கப்பட்டுள்ளார்.

அதிரடித் துடுப்பாட்ட வீரரான சனத் ஜெயசூரிய எதிர்வரும் 30 ஆம் திகதி தனது 42 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ள நிலையில் மீண்டும் இலங்கை அணிக்காக விளையாடவுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடருக்குத் தான் சேர்க்கப்படாதமை குறித்து ஏமாற்றம் தெரிவித்திருந்த ஜெயசூரிய மீண்டும் போட்டிகளில் பங்குபற்ற விருப்பம் தெரிவித்திருந்தார்.

சனத் ஜெயசூரிய இறுதியாக 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இந்தியாவுடனான சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

தான் 18 வயதில் இருந்ததைப் போன்ற உடற் திடநிலையுடன் இன்னும் இருப்பதாகவும் தீவிரமாகப் பயிற்சி செய்து வருவதாகவும் கடந்த திங்கட்கிழமை ''டெய்லி மிரருக்கு'' வழங்கிய பிரத்தியேக செவ்வியில் சனத் ஜெயசூரிய குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இங்கிலாந்து அணியுடனான ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டிகளுக்கு அவரை இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவினர்சேர்த்துள்ளனர்.

இலங்கை இங்கிலாந்து - அணிகளுக்கிடையிலான 20 ஓவர் போட்டி ஜூன் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது. 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஜூன் 28 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

ஒருநாள் போட்டிகளுக்கான 16 பேர் கொண்ட இலங்கை அணிக்கு திலின கண்டம்பி உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 23 வயதான திமுத் கருணாரட்னவும் இந்த அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஜீவன் மெண்டிஸ், லஷித் மாலிங்க ஆகியோரும் அணியில் இடம் பெற்றுள்ளனர். ஆனால் திலான் சமரவீர சேர்க்கப்படவில்லை. தற்போது இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் பர்வேஸ் மஹ்ரூவ், சுரங்க லக்மல், அஜந்த மெண்டிஸ், சானக வலகெதர, தரங்க பரணவிதாரன ஆகியோர் டெஸ்ட் போட்டிகளின் பின்னர் இலங்கை திரும்பவுள்ளனர். (15)

# குத்துக்கரணம் அடிக்கிறார் ஹசான்



அரவிந்த டி சில்வா மற்றும் சனத் ஜெயசூர்யா ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கவில்லை என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஹசான் திலகரட்ன தெரிவித்தார்.

சமீபத்தில் ஜனாதிபதி மஹிந்தவை சந்தித்த திலகரட்ன சூதாட்ட விவகாரத்தில் அரவிந்த டி சில்வா, ஜெயசூர்யா ஆகியோருக்குத் தொடர்பு உள்ளதாக கூறியதாக இலங்கை ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டு இருந்தன.

இந்த நிலையில் இதை முற்றிலும் மறுத்துள்ள திலகரட்ன, ஜனாதிபதியை சந்தித்தபோது எந்த ஒரு வீரரின் பெயரையும் குறிப்பிடவில்லை. அப்போது எனது மனைவி அப்சாரி மற்றும் புத்தத் துறவி உதுவே தம்மலோகா தேரர் ஆகியோரும் உடன் இருந்தனர். நான் சூதாட்ட விவகாரம் தொடர்பாக துணிச்சலாக கருத்து தெரிவித்துள்ளதற்காக ஜனாதிபதி என்னைப் பாராட்டினார் என்று கூறியுள்ளார்.

சூதாட்ட விவகாரத்தில் பொலிஸார் மற்றும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.ஸி.ஸி) விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாக தெரிவித்த அவர், குற்றப் புலனாய்வுத்துறை எனக்கு அழைப்பாணை அனுப்பியது. நான் இரண்டு முறை அவர்களின் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தேன். இந்த விவகாரத்தில் நான் தகவல் கொடுத்தவன்தான். குற்றவாளி அல்ல.

எனது தொலைபேசி எண் ஐ.ஸி.ஸியிடம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் எப்போது விசாரணை நடத்த வேண்டும் என்று நினைக் கிறார்களோ, அப்போது என்னைத் தொடர்புகொள்ளலாம். இலங்கைக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையும் எனக்கு தொலைபேசி எண்களை கொடுத்துள்ளது என்றார். உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தில் இலங்கை அணியில் 4 வீரர்கள் மாற்றப்பட்டதில் பல்வேறு சந்தேகங்களை திலகரட்ன எழுப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம்



நாரந்தனை, சரவணை, கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் நாளை மறுதினம் (12.06.2011) ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு வெள்ளோட்ட நிகழ்வு நடைபெறவுள்ளது என்பதனை முருகன் அடியார்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். அடியார்கள் அனைவரும் திரண்டுவந்து தேர்வடம் பிடித்து முருகன் அருள் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(1813) **தேர்த் திருப்பணிச் சபையினர்.**

## மரண அறிவித்தல்

### இராசையா சுப்பிரமணியம்



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், நாவலர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சுப்பிரமணியம் (08.06.2011) புதன்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இலக்குமியம்மாளின் அன்புக் கணவரும் கலைமணி (கனடா), கலைச்செல்வி (கொழும்பு), கலைவாணி, கலைவாணன் (ஜேர்மனி), கலைச்செல்வன் (பிரான்ஸ்), கலைமகள் (லண்டன்), கலைமகன் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற கலையரசி ஆகியோரின் தந்தையும் பிரபராஜன் (லண்டன்), சுந்தரலிங்கம் (லிங்கம் பேக்கரி), வைகுந்தராஜன் (லண்டன்) ஆனந்தராணி (கனடா), வனஜா (ஜேர்மனி), விஜயா(பிரான்ஸ்), ரேனுகா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ் சென்றவர்களான கனகசிங்கம், பாலசிங்கம் மற்றும் தங்கராஜா, பூரணசோதியம்மா, பொன்னம்மா ஆகியோரின் மைத்துனரும் நிரோஜா, நிதுஷா, கவிஷன், மேஷாக், நிஷாந்தினி, சிவச்செல்வன், ஞானச்செல்வன், அருட்செல்வன், நிதுஷன், சூரியபிரகாஷ், கீர்த்தனா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*555, நாவலர் வீதி,*
*கைலாய பிள்ளையார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்* *(1812)*

தகவல்:
சி. சுந்தரலிங்கம்
(மருமகன்)

## 31[ஆம்] நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில்
07 . 12 . 1933
விண்ணில்
10 . 05 . 2011

### அமரர் முருகேசு அருளானந்தம் B.A (Cey)

**(முன்னாள் அதிபர், வெலிமடை தமிழ் மகா வித்தியாலயம்)**

கடந்த 10.05.2011 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர் **அமரர் முருகேசு அருளானந்தம்** B.A (Cey) (முன்னாள் அதிபர், வெலிமடை தமிழ் மகா வித்தியாலயம்) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.06.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**வீரபத்திரர் கோயிலடி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.** (49,23,24)

**குடும்பத்தினர்.**

## கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர்களுக்கான அவசர கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.(ம-26)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

வடமராட்சி, ஜூன் 10

வடமராட்சி கிழக்கு ஆழியவளை சி.சி.த.க பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பழைய மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் க.பாஸ்கரன் கேட்டுள்ளார்.(ற-236)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி, ஜூன் 10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு வலய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ற-207)

## மதுபோதையில் ரகளை புரிந்தவர் பொலிஸாரால் கைது

நெல்லியடி,ஜூன்10

மதுபோதையில் சண்டையில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த நபர் ஒருவர் நேற்று நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் மது போதையில் நகரப் பகுதியில் பயணிப்பவர்களிடம் வலிந்து தகராறில் ஈடுபட்டபோதே கைது செய்யப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-319)

## கேள்விப் பத்திரம் கோரல்

GIZ/ESC செயற்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் இடம்பெற்று வரும் கல்வி அபிவிருத்தி வேலைகளினை மேற்பார்வை செய்யும் பொருட்டு வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தப் பொருத்தமான வழங்குனர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

கூறுவிலைகள் கோரும் விண்ணப்பப் படிவங்களையும் தேவையான அறிவுறுத்தல்களையும் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் நிதிக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மூடிய கூறுவிலைகளை ஜூன் மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன் மருதனார் மடத்தில் அமைந்துள்ள வட மாகாணக் கல்வித் திணைக்களத்துக்குக் கிடைக்க ஆவன செய்யப்படல் வேண்டும்.

M.பவளகாந்தன்
தொழில்நுட்ப ஆலோசகர்,
GIZ/ESC

**வடமாகாணம்**
**இல. 17, கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### கணேஸ்ஐயா ஜெனரட்ணசிங்கம்

(ஓய்வுபெற்ற பாடசாலை வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்)



நல்லூர், அரசடி, 2ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறை சென் மேரிஸ், 2ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கணேஸ்ஐயா ஜெனரட்ணசிங்கம் (09.06.2011) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணேஸ்ஐயா (தவராசா) - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் கொழும்புத்துறையைச் சேர்ந்த கந்தையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் (தாதிய உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும் ராம்ஜியின் அன்புத் தந்தையும் வினோசிகாவின் அன்பு மாமனும் பாலேஸ்வரி (வேவி), சந்திரேஸ்வரி (சந்திரா), சந்திரேஸ்வரன் (வவா), யோகேஸ்வரி (மாலா), காலஞ்சென்ற விமலேஸ்வரன் (ராசு- டென்மார்க்) மற்றும் யோகேஸ்வரன் (சுரேஸ்- போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பானுமதி (ரதி), சோதிமலர் (ஜெயா), புஸ்பவனிதா (வனிதா - சுவிஸ்), ரஞ்சினிதேவி (ரஞ்சினி - டென்மார்க்), காலஞ்சென்ற ஜீவரட்ணம் (குமார்) மற்றும் கலாஜோதி (வாணி- இத்தாலி), அனுலா (பிரான்ஸ்), துரைரட்ணம் (ரஞ்சன் - பிரான்ஸ்), பகீரதன் (திலீபன்- பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2ஆம் ஒழுங்கை,**
**சென் மேரிஸ் ,**
**கொழும்புத்துறை.** *(1815)*

தகவல்:
மனைவி ஜெ.கமலாதேவி,
மகன், ஜெ.ராம்ஜி

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பாலச்சந்திரன்



கலாசாலை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் பிள்ளையார் கோயி லடி தாவடி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலச்சந்திரன் நேற்று (09.06.2011) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், கமலராணியின் அன்புக் கணவரும், மயூரன், மயூராஜ், காலஞ்சென்ற மகீசன் மற்றும் மதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2011) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***பிள்ளையார் கோயிலடி,***
***தாவடி கிழக்கு, கொக்குவில்.*** (சி/766)(22-24-27)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிமேலாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள வேண்டும்''.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இழுத்தடிப்பது, காணாமல் போனோர் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுவிக்காது, மனித உரிமைக் குற்றச்சாட்டுகள், ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை ஆகிய விடயங்களுக்குப் பதிலளிக்காமல் அரசு மௌனப் பாதையில் பயணிப்பது ஆகிய காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுகளிலும் இந்தியாவுடனான பேச்சுகளிலும் உறுதியளித்த பல விடயங்களை இலங்கை அரசு நிறைவேற்றவேண்டும் எனக் கூட்டமைப்பினால் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன், இலங்கை அரசு மேற்கொள்ளவேண்டிய பொறுப்புகள் குறித்து ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தும், இலங்கை அரசு அவை அனைத்தையும் கவனத்தில் கொள்ளவில்லை.

இதன் பின்னணியிலேயே, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கக் கோரி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் மற்றும் காணாமல் போனோர் குறித்து விசாரணை அவசியம் என வலியுறுத்தி வருகின்றனர். இதனை அரசு மேற்கொள்ளாததினால் இலங்கை மீது வெளிநாட்டு அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

இனியாவது, அரசு தனது பிழைகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். எதிர்காலத்திலாவது இவ்வாறு அழுத்தங்கள் அதிகரிக்காத வண்ணம் உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

(சி)

## யாழ்.மாணவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளான வி.லவணன் 3.40 மீற்றர் உயரம் தாண்டி இரண்டாம் இடத்தையும், கே.றொசான் 3.30 மீற்றர் உயரம் தாண்டி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இந்தப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தில் இருந்து 43 வீர, வீராங்கனைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 10 வீர, வீராங்கனைகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(த-86)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேச்சில் எட்டப்படும் முடிவுகள் குறித்து இரு தரப்பினரும் நாளை காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுவர்.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோருடன் இந்தக் குழு பேச்சுக்களைக் நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அங்கு அமைச்சர் தொடர்ந்து கூறுகையில் தெரி வித்ததாவது:-

இலங்கை - இந்திய உறவு மிகச் சிறந்த முறையில் இருக்கிறது; சந்தேகம் கொள்ளத் தேவை யில்லை. மாநில அரசு மாறும் போது பல அரசியல் மாற்றங்கள் ஏற்படும். அது அவர்களது உள் விவகாரம். அது குறித்து நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

இலங்கை வரும் இந்திய உயர் மட்டக் குழு பல விடயங்கள் குறித்து பேச்சு நடத்தும். இரு நாடுகளும் தமது தனித் தன்மையைப் பேணிக்கொண்டு பேச வேண்டிய விடயங்கள் நிறைய இருக்கின்றன - என்றார்.

இலங்கை வரும் இந்திய உயர் மட்டக் குழு இனப் பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்துமா எனச் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், "இனப் பிரச்சினை குறித்தும் இந்திய உயர் மட்டக்குழு பேச்சு நடத்தும். அரசு ஏற்னவே அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வு வழங்கத் தயார் எனத் தெளிவாகத் தெரிவித்துள் ளது. பொலிஸ் அதிகாரம் வழங்குவது குறித்து சிக்கல் எழுந்துள்ளது. ஒரு பொலிஸ் ஆணைக்குழுவின் கீழ் மாகாண பொலிஸ் இயங்கமுடியாது. அத்துடன் அது கட்சி சார்பானதாக செயற்பட இட முண்டு'' - என்றார்.

(உ-சி)

## 15 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன, 2007 ஆம் ஆண்டில் 11ஆயிரத்து 930 பேரும், 2008 ஆம் ஆண்டில் 17 ஆயிரத்து 339 பேரும், 2009 ஆம் ஆண்டில் 22ஆயிரத்து 560 பேரும், 2010ஆம் ஆண்டில் 28ஆயிரத்து 720 பேரும் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறி தொழில் வாய்ப்புகள் இன்றி இருக்கின்றனர். இவர்களுள் முதற்கட்டமாக 15 ஆயிரம் பேருக்கு நியமனங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கும் பல்வேறு துறைகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கவும், சுயதொழில் முயற்சிகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

(சி)

## 839 புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஏனையோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார்.

படையினரிடம் சரணடைந்த புலிகளின் எண்ணிக்கை 15ஆயிரம் என்றும், 12 ஆயிரம் என்றும் 8ஆயிரம் என்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் 839 பேர் மட்டுமே தடுப்புக்காவலில் உள்ளனர் என்று அமைச்சர் இப்போது கூறுகின்றார். அப்படியாயின் ஏனையோர் எங்கே என்று அநுரகுமார அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

பாதுகாப்பு அமைச்சின் தகவலின்படி 839 புலி உப்பினர்கள் மட்டுமே தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தாங்கள் கூறும் எண்ணிக்கையுடையோர் அமைதி வழியில் திரும்பி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அமைச்சர் கூறினார்.

இதேவேளை, திருகோணமலை மற்றும் வெலிகந்தை ஆகிய இடங்களில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது என்று அநுரகுமார மேலும் கூறினார்.

அந்த முகாம்கள் தொடர்பாகப் பதிலளிக்க வேண்டிய தேவை எமக்கில்லை என்று அமைச்சர் சொன்னார்.

(இ-07)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரும் அம்பாந் தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ கலந்துகொள்ளவில்லை.

இதேவேளை, ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான துமிந்த சில்வாவின் தலைமையில் அரசுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டம் மாலை 4 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய துமிந்த சில்வா,

"தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுடன் கைகோர்த்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் இன்று அரசுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் சூழ்ச்சி செய்து வருகின்றன. சரத்பொன்சேகாவுக்கு என்ன முடியும்? யுத்தத்தில் அவர் என்ன செய்தார்? முடிந்தால் அவரை என்னுடன் மோதச் சொல்லுங்கள். மக்கள் ஆதரவைக் கொண்டு நான் அவருக்குப் பதிலளிப்பேன்'' - என்றார்.

## நேர்வேயை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பச்சைக்கொடி காட்டிவிட்டார் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பாணந்துறையில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை நேற்றுத் திறந்து வைத்துப் பேசிய போது அமைச்சர் ராஜித இதனைத் தெரிவித்தார். ஒஸ்லோவில் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேசும் போது, போருக்குப் பின்னர் இலங்கை அரசு எப்படி இயல்பு நிலையைக் கொண்டு வந்துள்ளது என்று தான் விளக்குவார் என்றும் அவர் கூறினார்.

எந்த ஒரு விடயத்துக்காகவும் இலங்கையின் மீது தடைகளை விதிப்பது நாட்டு மக்களையே பாதிக்கும் என்று தான் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தி இருக்கிறார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

(உ)

## ஜெயலலிதா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தொடர்து பாதிக்கப்படுவது குறித்த விடயத்தை ஜெயலலிதா இந்தச் சந்தர்ப்பத்தில் மேனனிடம் விளக்கினார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ)

**மாவை கொல்லங்கலட்டி கேணிக்கரை திருவருள் மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி நூதனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்.**

நிகழும் கரவருஷம் வைகாசி மாதம் 29 ம் நாள் 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.13 மணி தொடக்கம் நண்பகல்12.20 மணி வரையுள்ள சிங்கலக்கின சுபவேளையில் நூதனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

வைகாசி 27 (10.06.2011) வெள்ளி பிற்பகல் கர்மாரம்பமாகி, பூர்வாங்க கிரியைகள் நடைபெற்று இரவு 7.30 - 8.30க் கும்மிடையில் இரத்தினஸ் தாபனம், யந்திர ஸ்தாபனம், பிம்ப ஸ்தாபனம் மறுநாள் (11.06.2011) சனிக்கிழமை காலை தொடக்கம் எண்ணெய்க்காப்பு சாத்துதல். ஞாயிறு (12.06.2011) மஹாகும்பாபிஷேகம். அனைவரும் வந்து சுவாமி தரிசனம் செய்து இஷ்டசித்திகளைப் பெறுவீர்களாக. 768 இலக்க பஸ்ஸில் கோயிலுக்கு வரலாம்.

**ஸ்ரீலஸ்ரீ சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்.**
**அறங்காவலர்.**

**ORIFLAME**
SWEDEN

*இதோ உங்கள் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை!!!*




இனியும் காலத்தை வீணாக்காமல் எங்களுடன் இணையுங்கள். நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகின்றோம். சுவீடன் நாட்டு அழகுக்கலை உற்பத்திப் பொருள்களை இலங்கையில் சந்தைப்படுத்துவதில் முதன்மையாக விளங்கும் ORIFLAME நிறுவனம் மீண்டும் யாழ்ப்பாணப் பொது மக்களுக்கு இந்த அரிய சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

*அனுமதி முற்றிலும் இலவசம்*

இதோ! உங்கள் கனவுகளை நனவாக்க, உங்களுக்கு வாழ்க்கையை மாற்றியமைக்க, உங்களுக்கு மேலதிக வருமானம் வழங்க நாங்கள் தயாராகி விட்டோம். ஒரிபிளேம் லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுவீடனைச் சேர்ந்த **ERIK STENBECK** முதன் முறையாக யாழ்ப்பாணத்தை நோக்கி வருகை தர உள்ளார்.

**நீங்கள் தயாராகுங்கள்:**
திகதி:- 12.06.2011 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- மு.ப.10.30 மணி முதல்
இடம்:- பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (பிரதான தபாலகம் முன்பாக)

தொடர்புகளுக்கு:-
**V.Geetha**, - 0772533507, **N.Sasikala** - 0772260573, **V. Thanuya** - 0771336124.

இந்த அரிய சந்தர்ப்பத்தில் ORIFLAME நிறுவனம் உங்களுக்காக ரூபா 490 முதலீட்டுடன் சுயாதீன தொழில் ஊக்கு விப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது.

**உடனடி வேலைவாய்ப்பு**

கொழும்பு பிரபல்ய நிறுவனம் யாழ்ப்பாணத்தில் தனது சேவையை விஸ்தரிக்கவுள்ளது. சொந்த வாகனங்கள் வைத்திருப்பவர்கள், லீசிங் வாகனம் வைத்திருப்பவர்கள் உங்கள் பிரதேசத்திலேயே கவர்ச்சியான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:- 0773083820.

**காணி விற்பனைக்கு**

வடமராட்சிப் பகுதி கட்டைவேலி கோயிற்பற்று வல்லிபுரக் குறிச்சி சோழியாவத்தை தெற்கில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-021 226 4359, 0774682684.

**தவறிவிட்டது**

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த சிவபாதம் ரஜன் என்பவரது தேசிய அடையாள அட்டை (872912223V) சுன்னாகத்துக்கும் மயிலணிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொடர்பு:- 0778883495, 0778246949.

கொக்குவில்

**மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்**

**மகா கும்பாபிஷேகம்**



வைகாசி மாதம் 29 ஆம் நாள் 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் 8 மணி வரையுள்ள சுபநன்னாளில் அருள்மிகு வள்ளிதேவசேனா சமேத முருகப்பெருமானுக்கும் மற்றும் விநாயகர் சண்முகர் முத்துக்குமாரசாமி நடேசர் சந்தான கோபால மகாலட்சுமி நவக்கிரக மூர்த்திகள் வைரவர் சண்டேஸ்வரர் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட தட்சணாமூர்த்தி மற்றும்சமய குரவர் வரையான பரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

*மகா கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதம குரு*
*சிவப்பிரம்மஸ்ரீ சொ.இ.விக்னேஸ்வரக் குருக்கள்*
(ஆலயப் பிரதம குரு)

*எண்ணெய்க் காப்பு 11.06.2011 சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடை பெறும்.*

ஆலய தர்மகர்த்தா சபையும் திருப்பணிச் சபையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை பாதுகாப்பு வலயத்தில் 19 சந்தேக நபர்கள் நேற்றுக் கைது

தெல்லிப்பழைப் பிரதேசத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் நேற்றுக் காலை முதல் மாலைவரை பொலிஸார் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 19 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 8. மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை

### திருட்டுக்காக வந்தவர்களாம்

தெல்லிப்பழைப் பொலிஸாரின் விசேட அணியினர் இப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது கொல்லங்கலட்டி, செல்வபுரம், வித்தகபுரம், மாவிட்டபுரம், பன்னாலை, மாவைகலட்டி உள்ளிட்ட பல இடங்களில் இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர்களில் 3 பேர் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பொலிஸாரால் தேடப்படுபவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யபட்டவர்கள் கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்களது வசிப்பிடத்துக்கும் இவர்கள் பிடிபட்ட இடத்துக்கும் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் திருட்டு நடவடிக்கைகளுக்காகவே இந்த பகுதிக்குப் வந்ததாகவும் இதன் காரணமாகவே சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த விசேட நடவடிக்கையில் தெல்லிப்பழைப் பொறுப்பதிகாரி வீரசிங்க, பொலிஸ் பரிசோதகர் வடுகொட குற்றவியல் பொறுப்பதிகாரி உதவிப் பொலிஸ் பரிசோதகர்களான திஸநாயக்க, சகான் உள்ளிட்ட பொலிஸ்குழுவினர் ஈடுபட்டதாக தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-10-86)

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு கனகசூரியர்

(பணிப்பாளர், ராண்ஸ்லங்கா)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், காரைநகரை சொந்த இடமாக்வும், பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட க.கனகசூரியர் 09.06.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வதேவியின் அன்புக் கணவரும் பிரதீபன், பிரசாந்தி, பிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜ்குமார், குணாளன்வோயற் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.06.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 2 ஆம் குறுக்குத் தெரு இல. 122 பருத்தித்துறையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோடியடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தொ.பே.இல: 0777161922 க.பிரதீபன் (மகன்)

### திருமதி சதாசிவம் மனோன்மணி (பருபதம்)



வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சதாசிவம் மனோன்மணி (பருபதம்) நேற்று 09.06.2011 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா சாதாசிவத்தின் அன்பு மனைவியும் கனகலிங்கம், புவனேந்திரன், மகேஸ்வரன் (கனடா), சண்முகலிங்கம், கணேசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சறோஜினிதேவி, உஷாதேவி, இந்திராதேவி (கனடா), சரஸ்வதி, மதிவதனி (லண்டன்) ஆகியோரின் மாமியும் ராஜினி (டென்மார்க்), றமேஸ் (லண்டன்), ஜெயந்தி (லண்டன்), சஞ்சயன், தீபனா, நிரூபனா, கனடாவைச் சேர்ந்தவர்களான சோபனா, கோபி, லக்சனா, அர்ச்சனா, ஜனகா, லண்டனைச் சேர்ந்தவர்களான சர்மியா, ரம்மியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டென்மார்க்கைச் சேர்ந்தவர்களான அட்சாயா, கௌதமன், கிரன், மற்றும் லண்டனைச் சேர்ந்தவர்களான ரூபன், ஒலிவர், ஆருஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, விசுவலிங்கம், சரவண முத்து, பண்டிதர், மாணிக்கம், செல்லப்பா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னம்மா, முருகுப் பிள்ளை, இளையபிள்ளை, செல்லாச்சி ஆகியோரின் மைத்துனியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2011) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ச.கனகசிங்கம்
(மகன்- ஒய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)
வேலணை 2,
வேலணை கிழக்கு.
(1827)

## பனையிலிருந்து வீழ்ந்தவர் வைத்தியசாலையில்

அளவெட்டி, அலுக்கைப் பகுதியில் பனைமரத்திலிருந்து தவறி வீழ்ந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அலுக்கை சூசையப்பர் கோயிலடியைச் சேர்ந்த வைத்தி- வேலையா (வயது-60) என்பவரே படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்.(த-10-36)

**கணக்கீடு**
A/L 2011 எல்லைக் கிரயவியல் ஆரம்பம் இன்று 6. P.M
A/L 2012 பங்குடமை ஆரம்பம் இன்று 5 P.M
A/L 2013 கணக்கீட்டுச் சமன்பாடு ஆரம்பம் இன்று 4 P.M
S.தவா
SHAMROCK
கச்சேரியடி யாழ்.

**A/L பௌதிகவியல், இரசாயனவியல்**
கருத்தரங்கில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களையும் அன்புடன் ''வரவேற்கின்றோம்''
★இடம்:- யாழ். மத்திய கல்லூரி, தம்பர் மண்டபம்.
★காலம்:- இன்று 10.06.2011 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி - பி.ப. 3.00 மணி வரை.
THE JAFFNA SCIENCE CLUB
ஊடக அனுசரனை:- உதயன்
(வி/715)

## கண்ணீர் அஞ்சலி



PC HOUSE இல் பணிபுரியும் மதுசவின் அன்புத் தந்தை பிள்ளையார் கோயில், தாவடி, கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த

**சுப்பிரமணியம் பாலச்சந்திரன்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**PC HOUSE** (வி/781)
நிர்வாகத்தினரும், சகஊழியர்களும்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வரத்தினம் சறோஜினிதேவி



கோவிலாக்கண்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் - சறோஜினிதேவி கடந்த 07.06.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசையா- சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும், நீர்வேலி, கரந்தன் காலனையைச் சேர்ந்த இராசையா செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் பாலரூபன் (கனடா), பாலரூபி (ஜேர்மனி), பாமினி, பௌசிகா, ஜெயரூபன் (மாணவன், யா/ நாவற்குழி ம.வி) ஆகியோரின் பாசமிகு தாயும் பாஸ்கரனின் (ஜேர்மனி) மாமியும் தர்மகுலசிங்கம் (சாவகச் சேரி பிரதேச சபை), மகேந்திரன் (கனடா), காலஞ்சென்ற மணிமேகலை மற்றும் இராசகுலசிங்கம் (வர்த்தகர்), விஜயலட்சுமி (ஆசிரியை, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்), ரங்கநாதன் (லண்டன்), காலஞ்சென்ற ஆனந்தராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் தனலட்சுமி (கனடா), இராஜேஸ்வரி, செல்வராணி, செல்வமலர் (கனடா), இந்திராணி (கனடா), இராஜேஸ்வரி, செந்தில்மணி, இரத்தினசிங்கம், வசந்தா, நந்தகுமார், சரவணராஜினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.06.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோவிலாக்கண்டி பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோவிலாக்கண்டி மத்தி,
கைதடி. (1823) குடும்பத்தினர்.

அரச அலுவலர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள் மற்றும் பல்கலை, உயர்கல்வி மாணவர்களுக்கான MyWay-யின்
சனி ஞாயிறு 3 மாத English பயிற்சிநெறி
காலை 8.00, காலை 9.00 பிரிவுகளுக்கு அனுமதி இல்லை
ஏனைய பிரிவுகளுக்கு அனுமதி உண்டு
புதிய பிரிவுகள் : காலை 10-11, 11-12, மாலை 2-3, 3-4, 4-5, 5-6
மூன்று மாதத்துக்குமான மொத்த கட்டணம் : ரூபா 3000 மட்டும்
மிக சில இடங்களே - அனுமதிக்கு முந்துங்கள்
தனியார் அலுவலர்கள், இளைஞர் யுவதிகளுக்கும் அனுமதி உண்டு
MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456 021 222 9505

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**
எமது நிறுவனத்தில் பாதுகாப்புச் சேவையில் கடமையாற்றுவதற்கு 25-60 வயதுக்கு உட்பட்ட ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.
தகைமையுள்ளவர்கள் நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் உடன் வரவும்.
பொதுமுகாமையாளர், உதயன் பத்திரிகை நிறுவனம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**போட்டிப் பரீட்சைகளுக்கான**
பொது உளச்சார்பு
பொது அறிவு
வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
* யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக) ஒவ்வொரு ஞாயிறும் 2 மணிதொடக்கம் 5 மணிவரை.
* கிறிஸ்ரல், நெல்லியடி. உயர்கலைக் கல்லூரி, மீசாலைச் சந்தி ஆகிய இடங்களிலும் நடைபெற உள்ளன. நேர அட்டவணையை அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளவும்.

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
PHYSICS
பௌதிகவியல்
ஆரம்பம் :- 11.06.2011
SAT, SUN-(5.00- 6.00) P.M
By: செந்தில்குமரன்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**
சகலவிதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் மீள் திருத்தம் செய்து தரப்படும்.
06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி,
கே.கே.எஸ். றோட். 021 222 8680, 0775925088

**Computer Express**
Institute of Information Technology
பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=
பதிவுகளுக்கு முந்துங்கள்
மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
Batch I - 10.06.2011 9Am or 3pm Batch II -11.06.2011 9Am or 3pm
Batch III -12.06.2011 9Am or 3pm Batch IV -15.06.2011 9Am or 3pm
Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

**REPAIRING**
T.P : 021-222 4459, 0774192275
சகலவிதமான கணனிகளும், இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

A/L ? Pass / Fail CIMA-UK Engineering-USA BIT University of Colombo Multimedia Adobe
SMS your name & course to 772395895 & Get Schol.
Government Scholarship.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Closing Date 11.06.2011
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road,Campus Junction,Jaffna.
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA , Hardware, ICDL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.